
# தமிழகக் கோயிற் கலைகள்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008.

# தமிழகக் கோயிற் கலைகள்

பதிப்பாசிரியர்
முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
ஆணையர் (பொறுப்பு)

ஆசிரியர்கள்
முனைவர் **இரா. நாகசாமி**
**மா. சந்திரமூர்த்தி**

**தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு**
சென்னை - 600 008
2014

# அச்சிட்டோர் விவரம்


| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 1973 - 1000 பிரதிகள் |
| இரண்டாம் பதிப்பு | : | 1976 - 3000 பிரதிகள் |
| மூன்றாம் பதிப்பு | : | 2004 - 1000 பிரதிகள் |
| நான்காம் பதிப்பு | : | 2009 - 2000 பிரதிகள் |
| ஐந்தாம் பதிப்பு | : | 2014 - 5000 பிரதிகள் |
| வெளியீட்டு எண் | : | 26 |
| நூலின் பெயர் | : | தமிழகக் கோயிற் கலைகள் |
| பதிப்புரிமை | : | தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் சீ. வசந்தி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,<br>ஆணையர் (பொறுப்பு) |
| மொழி | : | தமிழ் |
| எழுத்தின் அளவு | : | 10.5 புள்ளிகள் |
| தாள் அளவு | : | 80 ஜி.எஸ்.எம் மேப்லித்தோ |
| பக்கங்கள் | : | 112 |
| விலை | : | ரூ. 30.00 |
| வெளியிட்டோர் | : | தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,<br>தமிழ் வளர்ச்சி வளாகம், ஆல்சு சாலை,<br>சென்னை - 600 008.<br>தொலைபேசி : 28190020, நிகரி: 28190023<br>மின்னஞ்சல்: tnarch@tn.nic.in<br>archcommissioner@gmail.com.<br>வலைதளம் : www.tnarch.gov.in. |
| அச்சிட்டோர் | : | சைதை எலக்ட்ரிகல், எலக்ட்ரானிக், எழுதுபொருள் மற்றும் கல்வி சார்ந்த பொருட்கள் பழுது நீக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.<br>எண்: 84, 4-ஆவது மாடி, நந்தா குடியிருப்பு,<br>காரணீசுவரர் கோயில் தெரு, சைதாபேட்டை,<br>சென்னை-15. |

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்.டி.,
ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.
நாள் : 06.3.2014

# பதிப்புரை

"தமிழகக் கோயிற் கலைகள்" என்னும் இந்நூலில் சங்ககாலக் கலை, தமிழ்நாட்டுக் கோயில்கள், கோயில்கள் இலக்கணம், தமிழ்நாட்டுக் கோபுரங்கள், சிற்பங்கள், செப்புத் திருமேனிகள், ஓவியங்கள் எனும் தலைப்புகளில் சங்ககாலம் தொடங்கி பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகரர் காலம் வரை காலவாரியாக கலை வளர்ந்த வரலாற்றை இத்துறை வெளியிட்டுள்ளது.

வரலாற்று மாணவர்கள், வரலாற்று ஆர்வலர்களிடையே இந்நூல் மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது. ஏற்கனவே நான்கு பதிப்புகளில் 7000 பிரதிகள் அச்சிடப்பட்டது. இந்நூல் மதுரை காமராசர் மற்றும் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார், திருவள்ளுவர் பல்கலைக்கழகங்களில் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. எனவே இந்நூலின் ஐந்தாம் பதிப்பினை இத்துறையின் மூலம் வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இத்துறையின் மறுபதிப்பு நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கிய தமிழக அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலின் ஐந்தாம் பதிப்பினை சிறப்புடன் வெளிக்கொணர்ந்த நம் துறை அச்சுப்பிரிவினருக்கு எனது பாராட்டுகள்.

வரலாற்று மாணவர்கள், வரலாற்று ஆர்வலர்களின் தேவையினை இந்நூல் நிறைவு செய்யும் என்பதில் ஐயமில்லை.

சீ. வசந்தி

# முன்னுரை

தமிழ்நாட்டு வரலாற்றையும், கலைகளையும் பற்றி பல நூல்கள் பலரும் படிக்கும் வண்ணம் வரவேண்டும் என்பது என் அவா. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வரலாற்றையும், கல்வெட்டு களையும், கலைகளையும் பற்றி மலிவு விலைக்கு நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதில் பெருமை கொள்கிறது. இந்நூல் தமிழ்நாட்டுக் கோயில்களையும், அவற்றைச் சார்ந்து வளர்ந்த கலைகளையும் பற்றிய அடிப்படைக் கருத்துக்களைத் தொகுத்துரைக்கிறது. கோயில்களின் பல அங்கங்கள், அவற்றின் பெயர்கள், அவை சங்ககாலத்திலிருந்து பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகர மன்னர் முதலிய மன்னர்களின் காலத்தில் வளர்ந்த வரலாறு முதலியவை இதில் இடம்பெறுகின்றன. விமானம், கோபுரம், சிற்பம், ஓவியம் முதலியவற்றின் வளர்ச்சி இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இத்துறையின் இளம் எழுத்தாளர் திரு. மா. சந்திரமூர்த்தி சங்க காலக் கலை, தமிழ்நாட்டு ஓவியங்கள் என எழுதியுள்ள பகுதி விறுவிறுப்பாகவும், இலக்கியச்சுவையுடனும் அமைந்துள்ளதைக் காணலாம். இந்நூலைத் தமிழ் மக்கள் பெரிதும் வரவேற்று எம்மை மேலும் இப்பணியில் ஊக்குவிக்க வேண்டுகிறேன்.

சென்னை-600 028
1973

**இரா. நாகசாமி**
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

# பொருளடக்கம்

பதிப்புரை

முன்னுரை

1. சங்ககாலக் கலை .... 1
 - மா. சந்திரமூர்த்தி
2. தமிழ்நாட்டுக் கோயில்கள் .... 15
 - இரா. நாகசாமி
3. கோயில்கள் இலக்கணம் .... 30
 - இரா. நாகசாமி
4. தமிழ்நாட்டுக் கோயில்கள் வரலாறு .... 34
 - இரா. நாகசாமி
5. தமிழ்நாட்டுக் கோபுரங்கள் .... 49
 - இரா. நாகசாமி
6. தமிழ்நாட்டுச் சிற்பங்கள் .... 53
 - இரா. நாகசாமி
7. செப்புத் திருமேனிகள் .... 63
 - இரா. நாகசாமி
8. தமிழ்நாட்டு ஓவியங்கள் .... 69
 - மா. சந்திரமூர்த்தி

முன் அட்டை : கோபுரம், திருவரங்கம்

பின் அட்டை : குதிரை மண்டபம், திருவரங்கம், விஜயநகரர் காலம், கி.பி. 16-ஆம் நூற்றாண்டு

# சங்ககாலக் கலை

## கட்டடக்கலை

### மனைநூல்

சங்ககாலத்தில் முறையோடு வகுத்து தொகுக்கப்பட்ட மனை நூல்கள் இருந்ததெனச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். சிலப்பதிகாரம் மயமுறையைப் பற்றி குறிப்பிடுகிறது. "நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம், மயன் பண்டிழைத்த மரபினது தான்" என்னும் இலக்கிய அடிகள் அக்காலத்தில் சிற்ப நூல்களும், சிற்பிகளும் இருந்தனர் என தெரிவிக்கின்றன. இத்தகைய பனுவல்களின் துணை கொண்டு இறைவனுக்குக் கோட்டமும், மன்னருக்குக் கோயிலும் (அரண்மனை), பெருமக்களுக்கு மாடமும் மாளிகையும் திறம்பட வகுத்தனர். எடுத்துக்காட்டாகப் புகார், மதுரை, காஞ்சி, வஞ்சி போன்ற நகரங்கள் இம்முறையினால் அமைக்கப்பட்டன. புகாரின் அமைப்பைப் பட்டினப்பாலை மற்றும் சிலம்பும் எடுத்துரைக்கின்றன. அதுபோன்று மதுரையின் பொலிவைப் பரிபாடலும், காஞ்சியின் அமைப்பைத் தண்டியலங்காரமும் விரித்துக் கூறும்.

### நூலறி புலவர்

இத்தகைய கோயில்களையும் மனைகளையும் அமைக்கக் கட்டடக்கலை நூலை அறிந்த புலவர் இருந்தனர். அவர்களை "நூலறி புலவர்" என்று நெடுநல்வாடை அழைக்கிறது. நூலறி புலவரால் மனைகள் யாவும் நாள் குறித்துத் திசைகளையும், அவற்றில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி அமைக்கப்பட்டன.

### பிரிவுகள்

சங்ககாலக் கட்டட அமைப்பை மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். அவை 1. கோயில், 2. அரண்மனை, 3. பிற கட்டடங்கள். இம்மூன்று பிரிவுகளில் நிலம், மனை, ஊர்தி, இருக்கை என்ற பிரிவுகள் அடங்கும்.

## கோயில்

சங்ககாலத் தொடக்கத்தில் இருந்த கோட்டங்கள் பலவும் மரத்தினால் அமைக்கப்பட்டிருந்தன. பண்டு இருந்த இம்முறை, இன்றும் தில்லை, கேரளம் போன்ற இடங்களில் உள்ளன. முற்காலத்தில் மரத்தினாலே கோயில்கள் கட்டப்பட்டன என்பதற்குச் சான்று பிற்காலத்தில் கல்லினால் அமைக்கப்பட்ட கோயில் கட்டடங்களில், மரத்தைச் செதுக்கி அமைக்கப்பட்டது போன்ற அமைப்புகள் காணப்படுவதுதான் என்று கலை நூல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

மரக்கோட்டங்களோடு, பின் களிமண் கோட்டங்களும் எழுந்தன. அக்கோட்டத்தின் கூரை மரத்தால் வேயப்பட்டிருந்தது. பின்னர் மரக் கோட்டங்களும், களிமண் கோட்டங்களும் சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமாக மாறின. வித்தகர் இயற்றிய வெண்சுதை விளக்கங்கள் கோட்டத்தின் அழகை மிகைப்படுத்தின.

இத்தகைய கோயில் பற்றிச் சங்க இலக்கியம் விரித்துக் கூறும். புறநானூற்றுப் பாடல் ஒன்று சங்ககாலத்தில் முக்கட் செல்வனாகிய சிவபிரானுக்கு அமைந்த கோயிலைக் குறிக்கிறது. மற்றும் அறுமுகன், பலராமர், திருமால் இன்னபிற தெய்வங்களுக்குக் காவிரிப்பூம் பட்டினத்தில் கோயில்கள் அமைந்திருந்ததைச் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். பரிபாடல், பத்துப் பாட்டு போன்ற சங்க நூல்கள் இத்தெய்வங்களின் வழிபாட்டைப் பற்றிக் குறிக்கின்றன.

சங்ககாலத்தில் புகார், மதுரை, திருவேகம்பம் (காஞ்சி) திருவனந்தபுரம் (திருஅனந்தசயனம்), அழகர்மலை (திருமால் குன்றம்), திருவரங்கம், திருவேங்கடம், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர் சோலை போன்ற இடங்களில் கோயில்கள் அமைந்திருந்தன. இத்தகைய கோயில்களை மனை நூல் மரபுப்படி அந்தணர், ஆசான், நூலறி மக்கள் உடன் இருந்து அழகு பெற அமைத்தனர். இக்கோயில்கள் பிற்காலத்தில் புதுமுறைக்கேற்பக் கருங்கல் கொண்டு திருப்பணிகளால் பழமை மறைக்கப்பட்டு புதுமையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் இருந்த கோச்செங்கணான் என்னும் சோழ அரசன் சிவனுக்கு எழுபது கோயில்கள்

கட்டிவைத்தான் என அறிகிறோம். இத்தகைய கோயில்கள், காலத்தாலும், திருப்பணி செய்யும்பொழுது ஏற்பட்ட அழிவாலும் மக்களின் கவனக்குறைவாலும் அழிந்துபட்டன. இவ்வாறு அழிந்த செங்கற்கோயிலை

*"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென*
*மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து"*

என்று அகநானூற்றுப் பாடலொன்று படம் பிடித்துக் காட்டுகிறது.

**அரண்மனை**

குறித்த காலத்தில் சிற்பநூல் அறிஞர் கயிறு கொண்டு, திசை குறித்து, தெய்வம் தொழுது, பின்பு அரசனுக்கு வேண்டிய மனைகளையும், மண்டபங்களையும் அமைத்தனர். அரண்மனைகள் சுற்று மதில்களோடு கட்டப்பட்டிருந்தன. மதில்கள் வானைத் தீண்டும் அளவிற்கு உயர்ந்திருந்தன. அத்தகைய மதில் வாயில் உயரமாகவும் அகலமாகவும் இருந்தது. முப்படையும் செல்லத்தக்க குன்று குயின்றன்ன ஓங்கு நிலை வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. அத்தகைய நிலை வாசல் சுவர்களில் திருமகள் சிலைகள் இருந்தன. சில வாயிற் கதவுகளில் இரும்பு உபயோகிக்கப்பட்டிருந்தது. யானைப்படைகள் கொடியோடு அவ்வழியே சென்றன. அரண்மனை அந்தப்புரச் சுவர்கள், உயர்ந்தும் சிறந்த வேலைப்பாடு கொண்டும் விளங்கின. சுவர்களில் வண்ணங்கொண்டு பூங்கொடிகள் எழுதப்பட்டிருந்தன. தூண்கள் கருமையும், திரட்சியும், பளபளப்பும் கொண்டு விளங்கின.

**அரண்**

இத்தகைய நகரைச் சுற்றிலும் கோட்டை மதில் இருந்தது. இம்மதில் மீது பலவகை இயந்திரப் பொறிகள் அமைக்கப்பட்டிருந்தன. அரிநூற் பொறியும், அடிக்கும் பொறியும், கழுகுப் பொறியும், களிற்றுப் பொறியும், புலிப் பொறியும், பாம்புப் பொறியும், தூண்டில் பொறியும், கருவிரல் குரங்கு கடிக்கும் பொறியும், கல்லுமிழ் கவண் பொறியும் இன்னும் பிறவும் அமைந்திருந்தன. இவ்வரணுக்கு அருகில் ஆழ்ந்து அகன்ற அகழி இருந்தது.

## பிற கட்டடங்கள்

பூம்புகார், காஞ்சி, மதுரை போன்ற மாநகரங்களில் மாளிகையும் மாடமும் உயர்ந்தோங்கி காட்சி அளித்தன. இத்தகைய மாடத்தின் சிறப்பினை மழைதோயும் உயர் மாடம் - முகில் தோய் மாடம் - விண்பொர நிவந்த வேயா மாடம் - மாடம் ஓங்கிய மல்லல் மூதூர் - மழையென மருளும் மகிழ்செய் மாடம் - திண்போர்க் கதவின் மழையாடு மாடம் - மழைதோயும் உயர் மாடம் என்று சங்க இலக்கியம் கூறுவதால் விண் துஞ்சும் மாட மாளிகைகள் அமைந்திருந்தன என அறியலாம்.

தாமரை மலரை ஒத்த மதுரை மாநகரின் சிறப்பினை பரிபாடலால் அறிகிறோம். மலையை ஒத்த பெரிய இல்லங்களில் மக்கள் வாழ்ந்தனர். அத்தகைய வள மனைகளில் நிலா முற்றங்களும், காற்று வெளிச்சமும் நன்கு வரத்தக்க பெரிய சாளரங்களும் இருந்தன. மதுரைப் புறச்சேரியில் சமணர், பௌத்தர், அந்தணர் பள்ளிகள் முறைப்படி கட்டப்பட்டிருந்தன. இவற்றுள் அந்தணர் பள்ளி மலையைப் பிளந்து உள்ளே குடைந்து அமைத்தாற் போன்ற கட்டட அமைப்புக் கொண்டு விளங்கியது என்று சிலம்பு கூறும்.

நகரத் தெருக்கள் ஆற்றைப் போல் நீண்டும் அகன்றும் அமைந்திருந்தன. இதனை "ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்" என்றும் "பூவின் இதழகத்தனைய தெரு" என்றும் இலக்கியம் கூறும்.

இவ்வாறு கோயில், அரண்மனை, அரண், பௌத்த, அந்தணர் பள்ளி, செய்குன்றுகள், அம்பலம், மன்றங்கள், பூங்கா முதலியன மனை நூல் மரபுப்படி அமைக்கப்பட்டிருந்தன என அறிகிறோம்.

## ஓவியக்கலையின் தொன்மை

சங்ககாலத்திலே, ஓவியக்கலை நமது நாட்டில் வளர்ச்சி அடைந்திருந்தது என்பதற்குச் சங்கப் பனுவல்களில் தக்க சான்றுகள் உள்ளன. தொல்காப்பியர் காலத்தில் நடுகல் வணக்கம் இருந்தது. அக்கல்லில் இறந்த வீரனது உருவம் செதுக்கிப், பீடும் பெயரும் பொறிக்கும் வழக்கம் இருந்தது. சிற்பி தான் செதுக்கவிருக்கும்

உருவத்தை வரைந்து பார்த்த பின்பே, அவ்வோவியத்தைக் கொண்டு கல்லில் உரு சமைத்தல் வழக்கம். ஓவியத்தின் தோற்றத்தைத் தொல்காப்பியர் காலத்தில் இருந்தே காண்கிறோம். பழந்தமிழ் மக்கள் ஓவியங்கள் எழுதி அவற்றின் வாயிலாகக் கருத்துகளைப் புலப்படுத்தினர். இவற்றை ஓவிய எழுத்துகள் என்பர். தமிழிலக்கியத்தில் "எழுத்து" என்பதற்கு ஓவியம் என்ற பொருள் உண்டு என்பது பரிபாடல், குறுந்தொகை வரிகளால் அறியலாம். சீன மொழியில் எழுத்துகளை உருவங்கள் என்று குறித்தலும் இங்கே கருதத்தக்கன. யாப்பருங்கலவிருத்தி "ஓவியன் கைவினை போல் எழுதப்படுவது உருவெழுத்தாகும்" என்று குறிக்கிறது. மேற்குறிப்பிட்ட பாடல் ஓவியத்தின் தொன்மையை விளக்கும். "ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஏற்றி" என்று அகநானூற்றில் ஓவியம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. மற்றும் "ஓவத்தன்ன இடநுடை வரைப்பு" போன்ற வரிகள் ஓவியத்தின் தொன்மையையும் வளர்ச்சியையும் காட்டுகிறது என்பது தேற்றம்.

ஓவியர், ஓவம், கண்ணுள் வினைஞர் வட்டிகைச் செய்தி, புனையா ஓவியம், எழுதுநிலை மண்டபம், சித்திரக்கூடம், சித்திரமாடம் ஓவிய மாக்கள், துகிலிகை இன்ன பிற சொற்கள் சங்க நூல்களில் பரக்கக் காணலாம். கவிஞன் காவியத்தைப் படைப்பதும், அதனை மையமாக வைத்துக் கலைஞன் ஓவியத்தைத் தீட்டுவதும், அவ்வோவியத்தைக் காவியத் தலைவனும் தலைவியும் கண்டு களிப்பதும் சங்க நூல்களில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

## ஓவியப் புலவனும், ஓவிய மாக்களும்

எண்ணங்களின் எழுச்சியைப் பல வண்ணங்களின் துணை கொண்டு எழுதுவோர் 'ஓவியர்' என்றும், 'கண்ணுள் வினைஞர்' என்றும், 'வித்தகர்' என்றும், 'சித்திரக்காரர்' என்றும் பலவாறு அழைக்கப்பெற்றனர். ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமை பெற்ற பின்னரே சிறந்த ஓவியனாக முடியும். அவனை 'ஓவியப்புலவன்' என்றும், அக்கலைஞர் குழாமை 'ஓவிய மாக்கள்' என்றும் சங்க நூல்கள் இயம்புகின்றன. ஓவியங்களில் மிக்க பற்றுள்ளவர்கள் 'ஓவியச் சேனன்' என்றும் திருநாமங்கொண்டனர்.

கலையார்வம் கொண்ட பாண்டியன் ஒருவன் சித்திர மாடத்து இறந்து பட்டான் என அறிகிறோம். அப்பாண்டியப் பெருவேந்தனை "பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்" என்று புறநானூறு அழைக்கின்றது. ஓவியர் சமுதாயம் மட்டுமின்றி, காலத்தால், காலத்தின் கோலத்தால் காதலியைப் பிரிந்த காவியத் தலைவனும் தன் பிரிவை எண்ணி திரைச் சீலையில் தலைமகளின் உருவத்தை ஓவியமாகத் தீட்டினான் என அறிகிறோம். இத்தகைய கண்ணுள் வினைஞர்களை, "நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்" என்று நச்சினார்க்கினியர் கூறுவது இங்கே கருதத்தக்கது.

## சங்க மகளிரும், ஓவியக் கலையும்

சங்ககால மகளிரும், பெருங்குடிப் பெண்டிரும், ஆடல் அணங்குகளும் ஓவியம் தீட்டினர். நாட்டியமகள் மாதவி ஓவியத்தை நன்கு அறிந்திருந்தாள். இவளை "ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும், கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை" என்று இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் எடுத்தியம்பும்.

## ஓவியம்

பல வண்ணக்கலவையால் 'துகிலிகை' கொண்டு படைக்கப் பெற்ற கண்கவர் காட்சிகள், 'ஓவு' என்றும் 'ஓவியம்' என்றும், 'ஓவம்' என்றும், 'சித்திரம்' என்றும், 'படம்' என்றும், 'படாம்' என்றும், 'வட்டிகைச் செய்தி' என்றும் அழைக்கப்பெற்றன.

## சுவர் ஓவியம்

ஓவியம் வரையப்பட்ட இடங்கள் 'சித்திரக்கூடம்', 'சித்திர மாடம்', 'எழுதுநிலை மண்டபம்', 'எழுதொழில் அம்பலம்' என அமைக்கப்பெற்றன. ஆதலின் பெரும்பாலான ஓவியங்கள் சுவரில் எழுதப்பெற்றன என அறியலாம். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனது கோப்பெருந்தேவி படுத்திருந்த கட்டிலின் மேற்கூரையில் பலவகை ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. அவற்றில் திங்களின் பக்கத்தில் உரோகிணி இருப்பது போன்ற ஓவியமும் ஒன்றாகும். கணவன் பிரிவால் வாடிய தேவி அவ்வோவியத்தைக் கண்டு "உரோகிணியைப் போல நானும் என் கணவனோடு என்றுமே இணைந்திருக்க முடியாதோ" என்று எண்ணி பெருமூச்சுவிட்டாள்

என்று நெடுநல்வாடையால் அறிகிறோம். மதுரையை அடுத்த திருப்பரங்குன்றத்தில் முருகப் பெருமான் திருக்கோயிற் சுவர்களில் பலவகைச் சித்திரங்கள் வரையப்பெற்றிருந்தன என்று பரிபாடலால் அறிகிறோம். கோயில் சித்திர மண்டபத்தின் உட்சுவரில், இந்திரன், சந்திரன், காமன், இரதி, கவுதமன், அகலிகை போன்றவர்களின் புராண இதிகாசக் கதைகள் பல ஓவியங்களாகக் காட்சி அளித்தன. அவற்றை மக்கள் கண்டு மகிழ்ந்தனர் என்று பரிபாடல் பகர்கின்றது. செல்வர் வாழும் வளமனைச் சுவர்கள் மீதும், மாடங்கள் மீதும், வானவர் முதல் எல்லா உயிர்களையும் குறிக்கத்தக்க ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன என்று மணிமேகலையால் அறிகிறோம்.

அரண்மனைகளும் அந்தப்புரச்சுவர்களும் உயர்ந்த வேலைப்பாடு கொண்டு விளங்கின. சுடுமண் சுவர்கள் மீது வெண்சுதை பூசினர். வெண்சுதை மீது செஞ்சாந்து கொண்டு பூசினர். இதன் மேல் அழகிய பூங்கொடிகளை ஓவியமாகத் தீட்டினர். இத்தகைய சுவர்கள் செம்பைப் போன்று உறுதி படைத்தும், கலையழகு கொண்டும் அமைந்திருந்தன. ஆதலின் அரசருடைய அரண்மனை, மாளிகை, கோயில் மண்டபம், சித்திர மாடம் முதலிய கட்டடச் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன என அறிகிறோம்.

## திரைச்சீலை ஓவியம்

ஓவியன் சுவரில் மட்டுமல்லாது திரைச்சீலைகளிலும் கிழிகளிலும் கவின் மிக்க கலைக்காட்சிகளைத் தீட்டினான். நாடக மேடையில் உள்ள திரைச்சீலைகளில் பல வண்ணங்களில் கவின்மிகு காட்சிகள் தீட்டப்பெற்றிருந்தன. இதனை 'ஓவிய எழினி' என்று இலக்கியம் கூறும். உவவனத்தை விளக்கப் போந்த மணிமேகலை ஆசிரியர் வித்தகன் திரைச்சீலையில் எழுதிய ஓவியம் மலர்வனம் போல இருந்தது என சித்தரிக்கின்றார். இதனால் பண்டு திரைச்சீலையில் ஓவியம் எழுதும் வழக்கம் இருந்தது என்பதை அறியலாம்.

## வண்ண ஓவியம்

ஓவியர்கள் பல வண்ணக் கலவையின் துணைகொண்டு ஓவியம் தீட்டினர். அத்தகைய வண்ணந்தீட்டும் கோலைத் 'தூரிகை' என்றும் 'துகிலிகை' என்றும், 'வட்டிகை' என்றும் அழைத்தார்கள்.

இதனைத் "துகிலிகை அன்ன துய்த்தலைப் பாதிரி" என்றும், "வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்" என்றும் இலக்கியம் கூறும். இத்தகைய வண்ணக் கலவையால் வரைந்த ஓவியத்தை வட்டிகைச் செய்தி என்று அழைத்தனர் என அறிகிறோம். ஓவியத் தொழிலுக்கு 'வட்டிகைச் செய்தி' என்றும் ஓவியம் எழுதும்போது வண்ணங்களைக் குழப்பும் பலகைக்கு 'வட்டிகைப் பலகை' என்றும் பெயர்.

## புனையா ஓவியம்

வடிவம் மட்டும் வரைந்து, வண்ணங் கலவாமல் கரித்துண்டு களால் வரைந்த ஓவியம் 'புனையா ஓவியம்' எனப்பட்டது. கி.பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளில் இருந்த இம்முறை (கரித்துண்டு ஓவியம்) இருபதாம் நூற்றாண்டிலும் "மென் கோட்டு ஓவியம்" என்ற பெயரில் நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக ஓவியன் தான் எண்ணிய படத்தை வண்ணம் புனைந்து தீட்டுவதற்கு முன் அக்கற்பனை ஓவியத்தைப் "புனையா ஓவியமாக" தீட்டுவது பண்டைய வழக்கம். இத்தகைய புனையா ஓவியத்தினைப் "புனையா ஓவியம் கடப்பப் புனைவில்" என்று நக்கீரரும் "புனையா ஓவியம் போல நிற்றலும்" என்று சாத்தனாரும் கூறுவது இங்கே கருதத்தக்கது..

## பிற ஓவியங்கள்

சங்ககால மக்கள் வீட்டையும் ஓவியத்தால் சித்திரித்தனர். வளம் கொழித்த மக்களின் இல்லங்களில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. இதனை "ஓவத்து அன்ன வினைபுனை நல்இல்" என்று பதிற்றுப்பத்தும், "ஓவத்தன்ன இடனுடை வரைப்பிற்" என்று புறநானூறும் புகழ்ந்து கூறும்.

சங்ககால ஓவியர்கள் இயற்கை காட்சிகளையும் செயற்கைக் காட்சிகளையும் சமுதாய வாழ்க்கை முறையையும் கருப்பொருளாகக் கொண்டு சித்திரங்கள் வடித்தனர். ஓவியர்கள் சோதிடக் கலையையும், வான நூலையும், புராண இதிகாச கலைகளையும், நன்கு கற்றுணர்ந்து செவ்வனே தீட்டினர். ஆடு முதலான பன்னிரண்டு ராசிகளையும் விண்மீன்களையும் வரைந்தனர் என்று நெடுநல்வாடை கூறும்.

### சிற்பக்கலை

போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரர்களுக்கு வழிபாடு செய்ய ஒரு கல்லைத் தேர்ந்தெடுத்தல் மரபு. அக்கல்லில் வீரனது உருவத்தைச் செதுக்குவர். அதற்கு அடியில் வீரனின் பீடும் பெயரும் பொறிப்பர் என வரும் தொல்காப்பியச் செய்திகளால் சிற்பத் தொழில் தொல்காப்பியர் காலத்தில் இருந்தது என்பதை அறியலாம். இத்தகைய நடுகல்லைப் பற்றி அகமும் புறமும் விளக்கிக் கூறும். தருமபுரி மாவட்டம், இருளப்பட்டியில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இரண்டு நடுகற்கள், இத்தகைய சிற்பங்கள் பண்டு இருந்ததற்கு சான்று பகரும்.

செங்குட்டுவனால் இமயமலையிலிருந்து கொண்டுவரப்பட்ட கல்லில், கண்ணகியின் உருவம் பொறிக்கப்பட்ட செய்தி சிலப்பதிகாரத்தால் உணரலாம். கொல்லி மலையில் பெண் தெய்வத்தின் உருவச் சிலை ஒன்று இருந்தது. அது தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தது. "கொல்லிப்பாவை அன்னாய்" என்பது இலக்கிய வழக்கு. எனவே, அப்பாவை சிற்ப முறைப்படி நன்முறையில் அமைக்கப்பட்டிருந்தது என்று கொள்ளலாம். இவ்வாறே புகார் நகரத்தில் பூசைக்கென நடப்பெற்ற பாவை ஒன்று இருந்தது. அது 'கந்திற்பாவை' எனப் பெயர் பெற்றது என்று மணிமேகலை கூறும்.

### சுதை உருவங்கள்

சங்ககாலத்தில் சுதையினாலான உருவங்கள் ஏராளமாகச் செய்யப்பட்டன. இவ்வுருவங்கள் செய்வாரை 'மண்ணீட்டாளர்' என்று அழைப்பர். மண்ணீட்டாளர் என்போர் தமிழகத்தில் சிறப்பாகப் போற்றப்பட்டனர். பூம்புகார், மதுரை முதலிய சிறந்த நகரங்களில் மண்ணீட்டாளர் சிறப்புற்றிருந்தனர் என்பதை சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலிருந்து அறிகிறோம். அவர்கள் கோயிற் சுவர்களையும் மாளிகைகளையும் பாவைகள் கொண்டு அலங்கரித்தனர். பூம்புகார் நகரத்திலிருந்த மாளிகைகளில் சுதையினால் செய்யப்பட்ட சிற்ப உருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்திரவிழாவின்போது, பல பகுதி களிலிருந்தும் வந்த மன்னர் அவற்றைக் கண்டுகளித்தனர் என்று மேகலையால் அறிகிறோம். இன்றுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் சம்பாபதி அம்மன் கோயில் சிதைந்து காணப்படுகிறது. அதில் காணப்படும் உருவங்கள் சுதையால் ஆனவை. எனவே, சுதை உருவங்கள் சங்ககாலத்தில் இருந்திருத்தல் பொருத்தமேயாகும்.

"*மண்ணிலும் கல்லினும் மரத்திலும் சுவரினும்*
*கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க*"

என்ற மணிமேகலை அடிகள், சிற்பங்கள் எப்பொருள் துணைக்கொண்டு உருவாக்கப்பட்டன என உணர்த்துகிறது. ஆதலின் சங்ககாலக் கோயில்களில் உள்ள வழிபாட்டுத் தெய்வங்களின் உருவங்கள் சுதையாலும், மரத்தாலும், கல்லாலும் செய்யப் பெற்றிருத்தல் வேண்டும் என்று கொள்வது பொருத்தமானதாகும். மாங்காட்டு மறையவன் திருவேங்கட மலையில் திருமாலின் நின்ற கோலத்தையும், திருவரங்கத்தில் கிடந்த கோலத்தையும் கண்டதாகச் சிலம்பு கூறுவதால், சிலப்பதிகாரக் காலத்து சிற்ப வளர்ச்சியினை நன்கு அறியலாம்.

## *மரச் சிற்பங்கள்*

மரத்தாலும் மெல்லிய கிடையாலும் மிக அழகிய பதுமைகள் செய்யப்பெற்றன. கோயில்களிலும் மடங்களிலும் தேவ தேவியர் உருவங்கள் இருந்தன. சங்க காலத்தில் தேர்களில் உள்ள சிற்பங்கள் வியக்கத்தகு வேலைப்பாடுகள் கொண்டு காட்சி அளித்தன. சிறந்த தேர்களைச் செய்யவல்ல தச்சர்களும் இருந்தனர். தேர்களில் அழகிய மரச்சிற்பங்கள் செதுக்கப்பட்டன. ஒரே பகலில் எட்டுத் தேர்களைச் செய்யவல்ல தச்சர்கள் தமிழகத்தில் சங்ககாலத்தில் இருந்துள்ளனர். ஆதலின் இத்தகைய இலக்கிய ஆதாரங்கள் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வருகின்ற சிற்பக்கலை வளர்ச்சியைக் காட்டுகிறது. இவ்வகையான சிற்பங்கள் புகார், மதுரை, காஞ்சி இன்னபிற தலைநகரங்களில் இருந்தன என அறிகிறோம்.

## *தந்தச் சிற்பங்கள்*

தமிழகத்தில் தந்தத்தில் வேலை செய்யும் சிற்பிகள் சிறந்திருந்தனர் என்று நெடுநல்வாடையால் அறியலாம். அரசி படுத்திருந்த கட்டில் பல போர்களில் வெற்றி கண்ட முதிர்ந்த யானையின் தந்தத்தில் இருந்து செய்யப்பட்டது என்றும், அதில் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன என்றும் அறிகிறோம்.

தமிழகச் சிற்பிகள் பலர் இந்தியாவின் வடபகுதிக்குச் சென்று அங்கு தமிழ்க்கலை நூல்கள் இயற்றி இருக்கின்றனர் என்று திபெத்திய நூல்கள் குறிக்கின்றன. அதேபோன்று வடநாட்டிலிருந்து

பல சிறந்த சிற்பிகள் தமிழகத்திற்கும் வந்திருக்கின்றனர். முக்கியமாக அங்கு சிறப்புற்றிருந்த மகத நாடு, அவந்தி நாடு, மராட்டிய நாடு முதலிய நாடுகளிலிருந்து இவர்கள் வந்தனர் என்று மணிமேகலை குறிக்கிறது. யவனர்களுடைய சிற்பத்திறத்தினைத் தமிழகமும் போற்றியது என்று நம் சங்க இலக்கியங்களில் இருந்து அறிகிறோம். "யவனர் இயற்றிய வினை மாண்பானவை" என்றும் "யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும்" என்றும் இலக்கியம் கூறும்.

## இசைக் கலை

இயல், இசை, நாடகம் எனத் தொன்றுதொட்டே தமிழ் மூன்றாகப் பிரிந்திருந்தது. இயற்றமிழில் வல்லவர் புலவர் என்றும், இசைத் தமிழில் வல்லவர் பாணர் பாடினியர் என்றும் கூறப்பெற்றனர். சங்கத் தமிழர் இசைக் கருவியைத் துணைக்கொண்டு இசைக் கலையை வளர்த்தனர். இசையமைப்பதற்குரிய இலக்கணங்களைப் படைத்தனர். இசை ஆராய்ச்சிக்கு ஏழிசைச் சங்கம் கண்டனர். இசைக்கு அடிப்படையான சுரங்களையும், சுருதிகளையும் பண் உண்டாக்கும் முறையையும் ஆராய்ந்து கண்டனர். இவ்வாறு பழந்தமிழ் மக்கள் பாடி வந்த இசை 12,000 ஆகும்.

## இசை நூல்

பெருநாரை, பெருங்குருகு சிற்றிசை, பேரிசை, இசை மரபு, இசை நுணுக்கம், முதுநாரை, முதுகுருகு, பஞ்சமரபு, பஞ்சபாரதீயம், இந்திர காளியம், வாய்ப்பியம், சிலப்பதிகாரம் முதலிய இசை நாடக நூல்கள் இருந்தன. அவை யாவும் இசைத்தமிழின் சிறப்பினைப் பரப்பின என அறிகிறோம்.

## இசைக் கருவி

இசைக் கருவிகள் தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி என நான்கு வகைப்படும். இந்நான்கு வகையும் பண்டு தமிழகத்தில் வழக்கில் இருந்தன. அடியார்க்கு நல்லார் உரை மூலம் பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வலையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம்,

தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப் பறை, துடி பெரும்பறை போன்ற தோலாற் செய்த கருவிகள் இருந்தனவென அறிகிறோம்.

நரம்புக் கருவிகளில் மிகவும் தொன்மை வாய்ந்தது யாழ். இது குறிஞ்சி நில வேடரின் வில்லில் இருந்து தோன்றியது என்பது அறிஞர் கூற்று. பேரி யாழ், சீறி யாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டுயாழ், பாலை யாழ், குறிஞ்சி யாழ், மருத யாழ், நெய்தல் யாழ் இன்ன பிற யாழ்களைப்பற்றி எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சிலப்பதிகாரமும் புகழ்ந்து கூறும். இத்தகைய யாழின் இனிய ஓசையைக் "குழல் இனிது யாழ் இனிது" என்றார் தெய்வப்புலவர் வள்ளுவர். சீறியாழை இசைப்பவர் 'சிறுபாணர்' என்றும் பேரியாழை இசைப்பவர் 'பெரும்பாணர்' என்றும் பெயர் பெற்றனர். இப்பொழுது இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணத்தார் இவர்களின் ஒரு பிரிவு என்று கூறுவோரும் உண்டு.

பலாமரத்தில் குடைந்து செய்யப்பட்ட இசைக்கருவி 'வீணை' எனப்பட்டது. சிலப்பதிகாரத்தில் "நாரதன் வீணை நயந்தெரி பாடலும்" என்ற அடி உள்ளது. பொதுவாக யாழுக்கும் வீணை என்ற பெயர் உண்டு என்று அறிகிறோம்.

துளைக் கருவிகளில் முதன்மை பெற்றது 'குழல்' என்பர். வண்டுகளால் துளையுண்ட மூங்கில் மரத்தின் ஓசை அறிந்த முல்லை நில மக்கள் கண்ட கருவி குழலாகும். இதனைக் "குழல் வழி நின்றது யாழே" என்றும் சிலம்பு கூறும். மற்றும் உலோகத்தினால் செய்யப்பட்ட கருவிகள் கஞ்சக் கருவிகள் எனப் பெயர் பெற்றன. இயற்கையாக அமைந்த மனிதன் குரலை "மிடற்றுக் கருவி" எனக் கூறினர்.

## இசைப் பண்கள்

தமிழிசையில் 'பண்கள்' என்றும் 'திறங்கள்' என்று இருவகை உண்டு. பண்கள் ஏழு குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயர் பெற்றன. இவற்றில் இருந்து பிறப்பன திறங்கள் எனப்பட்டன. அவை பண்களுக்கு இனமானவை. தமிழ்ப் பண்கள் 'குறிஞ்சிப்பண்', 'பாலைப்பண்', 'முல்லைப்பண்', 'மருதப் பண்', 'நெய்தற்பண்' என ஐந்து வகைப்பட்டன. இவ்வாறு ஐவகை நிலத்திற்கும் ஏற்ற பண்களை அமைத்து, அதற்கேற்ற கருவிகளைக்

கொண்டு இசை பயின்றனர் என்று சங்க நூல்கள் பரக்கக் கூறுகின்றன. "தினைப்புனங்காத்த காரிகை ஒருத்தி குறிஞ்சிப் பண் பாடித் தன் இன்னிசையால் மதகரியையும் மயங்கி உறங்கச் செய்தாள்" என்று அகம் கூறும்.

## வரிப் பாடல்கள்

கானல் வரி, கந்துக வரி, ஊசல் வரி, வேட்டுவ வரி முதலிய வரிப்பாடல்களையும், அதற்கேற்ற ஆடல்களையும் அறிந்திருந்தனர். மற்றும் அம்மானை, பொற்சுண்ணம், சாழல், தெள்ளேணம், உந்திபறத்தல் தோள்நோக்கம் இன்னபிற ஆடலுக்குரிய பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர்.

## நடனக் கலையும் நாடகக் கலையும்

சங்ககாலத்தில் பெண்களும் ஆண்களும் நாட்டியக்கலையில் தேர்ச்சிப் பெற்றிருந்தனர். சங்ககாலப் பெண்கள் குரவை கூத்து, ஆய்ச்சியர் குரவை, துணங்கை போன்ற கூத்து வகைகளையும் பரத நாட்டியம் போன்ற நாட்டிய வகைகளையும் நன்கு அறிந்திருந்தனர். குறிஞ்சி நில மக்கள் முருகனைப் புகழ்ந்து ஆடிய கூத்து 'குன்றக் குரவை' என்றும், முல்லை நில மக்கள் மாயோனைப் புகழ்ந்து ஆடிய கூத்து 'ஆய்ச்சியர் குரவை' என்றும் பெயர் பெற்றன. மகளிர் ஒருவர் ஒருவரைத் தழுவிக் கொண்டு ஆடிய கூத்து 'துணங்கை' எனப்பட்டது. (மகளிர் தழிஇய துணங்கை கூத்தானும்).

நாடக மடந்தை மாதவி பதினொரு வகையான ஆடல்களை அறிந்து தேர்ச்சிப் பெற்றிருந்தாள். அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், மல், துடி இன்ன பிற பதினொரு வகை ஆடல்களை அதற்கேற்ற ஆடை அணிந்து நாடக மேடையில் நயம்பட ஆடினாள் என்று சிலம்பு கூறும்.

சிறந்த நாடக மகளுக்குத் 'தலைக்கோலி' பட்டம் வழங்கப் பெற்றது. இத்தகைய பட்டம் பிற காலங்களிலும் வழங்கப் பெற்றிருந்தது என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. நாட்டியம் ஆடுவதில் தேர்ச்சிப் பெற்ற மகளிரைத் 'தோரிய மடந்தையர்' என்றும் 'தலைக்கோல் அரிவையர்' என்றும் அழைத்தனர். நாட்டியக் கலையைப் பயில்வித்தவன் 'தலைக்கோலாசான்' எனப் பெயர் பெற்றான்.

உள்ளக் குறிப்பைப் புறத்தே தோன்றும் வகையில் நடனமாடியவர்கள் இருந்தனர். நடனக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் ‘விறலி’ என்றும் ‘ஆடுமகள்’ என்றும் அழைக்கப் பெற்றனர்.

## கூத்து

பழந்தமிழகத்தில் நாடகம் கூத்துகள் மூலம் வளர்ந்தது. புகழ்க் கூத்து, வசைக் கூத்து, கருங்கூத்து, கழலைக் கூத்து, வள்ளிக் கூத்து, குரவைக் கூத்து, சாந்திக் கூத்து இன்ன பிற கூத்துகளைப் பற்றி அறிகிறோம். தொல்காப்பியம் கூத்துகளை மட்டும் குறிப்பதோடு அல்லாமல், ‘பண்ணை’ என்று நாடகத்தையும் குறிக்கிறது. "கூத்தாட்டு அவை குழாத்து . ." என்று தொடங்கும் குறள் கூத்தாடும் மேடையைத்தான் குறிக்கிறது.

## நாடகம்

நாடக ஆசிரியன், நாடகப் பாத்திரங்களை அச்சம், வீரம், பெருமிதம், வெகுளி, வியப்பு, காமம் முதலிய சுவைக்கு ஏற்ப அமைக்கிறான். இவ்வாறு நடித்தலை ‘நாடகம்’ என்று கூறுகிறோம்.

முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், போன்ற நாடக இலக்கண நூல்களையும், மதிவாணர் நாடகத் தமிழ் நூல் போன்ற நூலையும் அடியார்க்கு நல்லார் குறிக்கிறார். தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியலில் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்" என்னும் வரிகள் அக்கால முறையை எடுத்துக்கூறுகிறது. இவ்வாறு "நகையே அழுகை யிளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை" என்னும் எட்டு வகை மெய்ப்பாட்டிற்கு ஏற்ப நடிகர்கள் நடித்தனர். அடியார்க்கு நல்லார் தமது உரையில் நடிகர் நடிக்க வேண்டிய அபிநயங்களைக் கூறுகிறார்.

இவ்வாறு சங்ககாலத்தில் கலை மெருகூட்டும் கவின் கலைகள் சிறந்து விளங்கின என அறிகிறோம்.

# தமிழ்நாட்டுக் கோயில்கள்

## தொன்றுதொட்டு வந்தவை

உலகிலே மனிதன் தோன்றிய நாள் முதல் அவனுடைய வாழ்விலே இன்றியமையாத நிலை வகிப்பவை தெய்வங்களுக்கு எடுக்கப்படும் ஆலயங்கள் - கோயில்கள். இவ்வாலயங்கள் ஏன் தோன்றின? இயற்கையாகிய அன்னை, பல சக்திகளாகத் தோன்றி மனிதனை வாழ வைக்கிறாள். கதிரவனும், வெண்ணிலவும், நீரும், நிலமும், தீயும், காற்றும் இன்றேல் வாழ்வு இல்லை. சக்திகளை எப்பொழுதும் தனக்கு நல்வாழ்வு மலர வேண்டி மனிதன் வணங்கினான். இச்சக்திகளைப் பல்வேறு உருவங்களில் கண்டு, அவற்றிற்கு கோயில் எழுப்பி நாள்தோறும் வழிபட்டான். பண்டைய காலத்திலே அன்னை தெய்வத்தைப் போற்றினர் என்று அறிகிறோம். தமிழகத்தின் தென்பகுதியைக் குமரிக்கண்டம் என்பர். குமரி அன்னை, இதன் தெய்வமாக கன்னியாகுமரியில் வீற்றிருக்கிறாள்.

## புராண இதிஹாசங்களின் அடிப்படை

உலகிலே மக்கள் பல குடிகளாகப் பிரிந்து பல பகுதிகளிலே வாழ்ந்தார்கள். அவ்வப்போது அக்குடிகளிலே ஒப்பற்ற தலைவர்கள் தோன்றி மனித வாழ்க்கையைத் தெய்வீக வாழ்க்கையாக உயர்த்தினார்கள். அத்தலைவர்களைத் தங்கள் வாழ்வை மலர வைத்த தெய்வங்களாகவே, அக்குடிமக்கள் கருதினர். இவ்வாறு இந்திரன், கண்ணன், ராமர், புத்தர், மாவீரர், போன்ற தெய்வங்கள் நம்மிடையே தோன்றியுள்ளார்கள். இத்தெய்வங்கள் எல்லாம் தோன்றிய இடங்களைப் புண்ணிய பூமியாகக் கருதி அங்கு ஆலயங்களை மக்கள் எழுப்பினார்கள். இத்தெய்வத் தோற்றங்களில் உள்ள சம்பவங்கள்தான் புராணங்களாகவும், இதிஹாஸங்களாகவும் பரிணமித்தன. இவற்றின் அடிப்படையிலே அனேக ஆலயங்கள் தோன்றியுள்ளன.

இவ்வாறு தென்னகத்திலே பல கோயில்கள் தொன்று தொட்டு விளங்கி வருகின்றன. அவற்றிலே முருகப்பெருமானுடைய

கோயில்கள் சிறந்து திகழ்கின்றன. திருவனந்தபுரத்தில் ஆடகமாடத்து அறிதுயிலமர்ந்தோன் கோயிலும், திருஅரங்கத்துள்ள திருவமர்மார்பன் கிடந்த கோயிலும், வீங்கு நீரருவி வேங்கடத்தின் உச்சி மீமிசை செங்கண் நெடியோன் நின்ற கோயிலும் தொன்றுதொட்டு சிறந்து விளங்கும் கோயில்களாகும்.

*"தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுகன்*
*பூவிலும் முடி பொன்றுவித்த பழி போயற*
*ஏவியலுஞ் சிலையண்ணல் செய்த இராமேச்சுரம்"*

- சம்பந்தர்

என்று இராமபிரானால் பூசிக்கப்பட்ட இராமேச்சுரம். இதுபோன்ற பலப்பலக் கோயில்களும் தொன்றுதொட்டே தென்னகத்தில் ஏராளமாக இருக்கின்றன.

நாடாண்ட மன்னர்கள் காடுகளை அழித்து, நீர்வளம் பெருக்கிக் குடிநிறுத்திக் கோயில் எடுப்பதும், தமிழகம் கண்ட மரபாம். தமிழகத்தைச் சிறப்போடு ஆண்ட கரிகாற் பெருவளத்தான் உறந்தையில் "காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கிக் கோயிலோடு குடி நிறுவினான்" என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

### பக்தி

மன்னர்கள் பக்திப் பெருக்காலே கட்டிய கோயில்கள் பல உண்டு. மாமல்லபுரத்திலே உள்ள கற்கோயில் ஒன்றில் "பக்திப் பெருக்கினாலும், பரமனைப் பூஜிக்க வேண்டும் என்ற அவாவினாலும் இக்கோயிலைத் தோற்றுவித்தேன்" என்று (பக்திப் பிரஹ்வேன மனசா பவம் பூக்ஷண லீயா) ஒரு மன்னன் கல்வெட்டில் கூறியுள்ளான்.

### குடிகளுக்காக

குடிமக்களுடைய தேவைகள் எல்லாம் பூர்த்தியடைய வேண்டியும் அரசர்கள் பல கோயில்களைக் கட்டியுள்ளார்கள்.

*தேன இதம் காரிதம் துங்கம்*
*தூர்ஜடேர் மந்திர கிருஹம்*
*பிரஜானாம் இஷ்டசித்யர்த்தம்*
*சாங்கரீம் பூதிம் இச்சதா*

இந்த சிவபெருமானின் ஆலயம் பிரஜைகளுடைய தேவைகள் பூர்த்தியாவதன் பொருட்டு அவனால் கட்டப்பட்டது என்றும், இது உலகின் நன்மைக்காகக் கட்டப்பட்டது என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

இவ்வாறு எழுப்பப்பட்ட கோயில்கள் அரசனுடைய பெயருக்கும் புகழுக்கும் ஏற்பக் கட்டப்பட்டன என்றும் அறிகிறோம்.

*யசஸ் சத்ருஸம் ஆத்மன.*
*பவனம் ஏதத் உத்தாபிதம்.*

என்று காஞ்சி கைலாயநாதராலயத்தில் உள்ள கல்வெட்டு கூறுகிறது. அதேபோன்று முதல் இராஜராஜ சோழனுடைய பெயருக்கும் புகழுக்கும் ஏற்ப தக்ஷிணமேருவெனக் கட்டப்பட்டதுதான் தஞ்சை இராஜராஜேச்சுரம்.

## வெற்றிக்காக

தாங்கள் அடைந்த வெற்றியின் நினைவாகப் பல மன்னர்கள் கோயில்களை எழுப்பியுள்ளனர். இரண்டாம் விஜயாதித்யன் என்ற கீழைச்சாளுக்கிய மன்னன், சுமார் 12 ஆண்டுகள், உருவிய வாளுடன் 108 போர்முகங்களில், சமர் தொடுத்து வெற்றி கண்டான். இவ்வெற்றிக்குச் சான்றாகத், தான் போரிட்ட 108 இடங்களிலும் இம்மன்னன் கோயில்களை எழுப்பியிருக்கிறான். சோழப்பேரரசின் மறுமலர்ச்சிக்குக் காரணமான விஜயாலயன், தஞ்சாபுரியைக் கைப்பற்றி, அங்கு நிசும்ப சூதனிக்குக் கோயில் எடுப்பித்தான் என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன.

தமிழக மன்னர்களில் தலைசிறந்த வெற்றி கண்டவன் இராஜேந்திரசோழன். இவன் கடல் கடந்து கடாரத்தையும், மற்றும் பல தீவுகளையும் வெற்றிகொண்டான். இந்தியாவின் வடக்கே கங்கை நதி வரை இராஜேந்திர சோழனின் வெற்றிக்கொடி பறந்தது. புலவர்கள் எல்லாம் "தண்டதேவிக் கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு சிங்காதனத்திருந்த செம்பியர்கோன்" என்று போற்றினர். இம்மாபெரும் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக ஒரு நகரையே நிருமாணித்து அங்கே அழியாத வெற்றிக்கோயில் ஒன்றைத் தோற்றுவித்தான். அதுவே கங்கைகொண்ட சோழீச்சுரம். இவன் போன்று மூன்றாம் குலோத்துங்க சோழனும் தன் வெற்றிக்கு

எடுத்துக்காட்டாக ஒரு பெரும் கோயில் திரிபுவனத்திலே நிறுவினான். மூன்று உலகங்களையும் வெற்றி கண்டவன் என்ற பொருளில் 'திரிபுவனவீரன்' என்று இவன் பட்டம் கொண்டான். எனவே, அக்கோயிலுக்கும் 'திரிபுவனவீரேச்சுரம்' என்று பெயர் அளித்தான். இவ்வாறு வெற்றிச்சின்னங்களாகத் தோன்றிய கோயில்கள் பலப்பல.

## தேவியர் எடுத்த கோயில்கள்

மன்னனோடு வீரசிம்மாசனத்தே அமர்ந்திருந்த அரசமாதேவியர் பலரும் ஒப்பற்ற கோயில்களை எழுப்பியுள்ளனர். காஞ்சிபுரத்தில் சிறந்த கலைஞனாக ஆண்ட பல்லவ மன்னன் இராஜசிம்மன் என்பவன், இவனுடைய மாதேவி ரங்கபதாகை என்பாள் அழகின் சிகரம் போன்றவள், மகளிர்களுக்கு எல்லாம் ஒப்பற்ற கொடி போன்றவள். அவள் இராஜசிம்மன் தோற்றுவித்த கைலாயநாதர் கோயிலின் முன்பு எழில் மிகுந்த சிறு ஆலயம் ஒன்றைக் கட்டினாள்.

*நிர்மாபிதம் இதம் தாம தயா சந்திர சிகாமணே:*
*பதாகயேவ நாரீணாம் ரம்யம் ரங்கபதாகயா.*

என்று கல்வெட்டு கூறுகிறது. இரண்டாம் விக்ரமாதித்தன் என்ற சாளுக்ய மன்னனின் தேவி லோகமஹாதேவி என்பவள். அம்மன்னன் காஞ்சியின் மீது மூன்று முறை படையெடுத்தான். அதன் நினைவாக லோகமஹாதேவி, பட்டடக்கல் என்ற இடத்திலே ஒரு சிவன் கோயில் எடுப்பித்தாள். அக்கோயிலுக்கு 'லோகமஹாதேவீச்சுரம்' என்று பெயர். இப்போது 'விரூபாக்ஷர் கோயில்' என்று வழங்கப்படுகிறது. சோழப் பேரரசன் இராஜராஜனுடைய தமக்கை குந்தவைப் பிராட்டியார். இத்தேவி கோயில்கள் கட்டுவதில் இராஜராஜனுக்குப் பெரும் ஊக்கம் அளித்து வந்தாள். இத்தேவியின் அன்புப்பணிக்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சைக் கோயிலில் "நாம் கொடுத்தனவும் நம் அக்கந் கொடுத்தனவும் நம் பெண்டுகள் கொடுத்தனவும் மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் கல்லில் வெட்டுக" என்று தமக்கையின் பெருமையை இராஜராஜன் கூறியுள்ளான். இவ்வரசனுக்கு தந்திசக்திவிடங்கி என்ற தேவி இருந்தாள். அவளுக்கு லோகமஹாதேவி என்று மற்றொரு பெயரும் உண்டு. இவ்வரசியார் திருவையாற்றில் ஐயாரப்பர் கோயிலில் ஓராலயம் எழுப்பியுள்ளார். அதற்கு 'லோகமஹாதேவீச்சுரம்' என்று பெயர்.

## பள்ளிப்படை

உலகிலே நல்வாழ்வு வாழ்ந்து இறந்துபட்ட பெரியார்களுக்கும், போர்முகத்தில் அரும்போர் செய்து வீரமரணம் எய்திய வீரர்களுக்கும் நினைவாக கல் நடுதல் தென்னக மரபு. இதற்குக் கல் என்று பெயர். சங்க இலக்கியங்களில் "பீடும் பெயரும் பொறித்து" கல்நட்டு அதைப் போற்றுவது குறிக்கப்படுகிறது. இதை 'வீரக்கல்' என்றும் குறிப்பர். இதைப்போன்று இறந்துபட்டவர்களைப் புதைத்தலைப் பள்ளிப்படுத்தல் என்பர். அவ்விடத்தே கோயில் எடுப்பது நல்மரபாகும். இவற்றிற்குப் 'பள்ளிப்படை' என்று பெயர். இவ்வாறு ஏற்பட்ட பள்ளிப்படைகள் தமிழகத்தில் ஏராளம் உண்டு. காளஹஸ்தி அருகில் தொண்டைமாநாடு என்ற ஊரில் முதலாம் ஆதித்த சோழன் இறந்து போனான். அவன் இறந்த இடத்தில், அவன் மகனான பராந்தக சோழன் பள்ளிப்படையாக ஒரு கோயிலை எழுப்பினான். திருநல்லம் என்ற கோனேரிராஜபுரத்தில், கண்டராதித்தரின் ஞாபகமாக அவர் மனைவியார் செம்பியன் மாதேவியார் ஒரு பள்ளிப்படை எழுப்பினார். இதேபோல் சுந்தரசோழன், விக்ரமசோழன் முதலிய பல மன்னர்களுக்குக் கோயில் நிறுவப்பட்டன. இறந்துபட்ட தம் கணவரோடு உயிர் நீத்த மனைவியர்க்கும் கல்நட்டு வழிபடுவது ஒரு மரபு. இதையே 'மாசதிக்கல்' என்பர்.

## பெயர்கள்

இவ்வாறு தோன்றிய கோயில்களை மக்கள் பல பெயர்களால் அழைத்தார்கள். கோயில், நியமம், நகரம், கோட்டம், பள்ளி என்ற பெயர்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

*"நுதல் விழிநாட்டத்து இமையோன் கோயிலும்*
*உவணச் சேவலுயர்த்தோன் நியமமும்,*
*மேழிவலுனயர்த்த வெள்ளை நகரமும்,*
*கோழிச்சேவற் கொடியோன் கோட்டமும்",*

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. தளி, தானம், என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. சிவபெருமானுக்கு எடுத்த கோயில்களை ஈச்சுரம் (ஈஸ்வரகிருஹம்) என்றும், விஷ்ணு கோயிலை விண்ணகரம் (விஷ்ணுக்ருஹம்) என்றும் கல்வெட்டுகள் குறிக்கும். இதுபோன்று இன்னும் பல பெயர்களும் உண்டு. செங்கல்லில் கட்டப்படும்

கோயிலுக்கு 'மண்தளி' என்றும், கல்லால் கட்டப்படும் கோயிலுக்குக் 'கற்றளி' என்றும் பெயர். அரசர்களும், அரசமாதேவியரும் தாங்கள் கட்டிய கோயில்களுக்குத் தங்கள் பெயரைச் சேர்த்து வைப்பது வழக்கம். லளிதாங்குரன் என்பது மஹேந்திர பல்லவனுடைய பட்டங்களில் ஒன்று. எனவே இவன் எடுத்த கோயிலுக்கு 'லளிதாங்குர பல்லவேச்வரக்ருஹம்' என்று பெயர். ராஜசிம்மன் தோற்றுவித்த கோயிலுக்கு 'ராஜசிம்மேச்சுரம்' என்றும் பரமேச்வரவர்மன் தோற்றுவித்த கோயிலுக்குப் 'பரமேச்வர மகாவராக விஷ்ணுக்ருஹம்' என்றும் பெயர்கள் காணப்படுகின்றன. ராஜராஜேச்சுரம், பீமேச்சுரம், லோகமகாதேவீச்சுரம் முதலிய அனைத்தும் இவ்வாறு தோன்றியவைதாம்.

## வகைகள்

கோயில்கள் பலவாறு கட்டப்பட்டன. கட்டட அமைப்பை ஒட்டியும் இவை பலவாறு பெயர் பெற்றன. சுமார் 1300 ஆண்டு களுக்கு முன் வாழ்ந்தவர் அப்பர் பெருமான் அவர் தன் பதிகத்தில் பலவிதமான கோயில்களைப் பாடியிருக்கிறார்.

*"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்*
*பெருங்கோயில் எழுபதினோடெட்டும் மற்றும்*
*கரக்கோயில் கடிபொழிற்சூழ் ஞாழற்கோயில்*
*கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்கோயில்*
*இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்*
*இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்,*
*திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து*
*தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே"*

இத்துடன் பூங்கோயில், தூங்கானைமாடம் முதலிய கோயில்களையும் அப்பெரியார் குறிக்கிறார். குடிசையைப் போன்ற கோயில்களுக்கு 'குடிசைக்கோயில்' என்றும், கருவறை கீழ்த்தளத்தில் இல்லாமல் மேல்தளத்தில் இருக்கும் கோயில்களுக்கு 'மாடக்கோயில்கள்' என்றும், தூங்குகிற யானையைப் போன்ற அமைப்புடைய கோயில்களுக்குத் 'தூங்கானைமாடம்' என்றும் பெயர். விமானங்களின் சிகர அமைப்பைக் கொண்டு திராவிடம், வேசரம், நாகரம் என்று மூன்று

பிரிவாகப் பிரிப்பர். விமானங்களின் மேலுள்ள சிகரங்கள் எட்டுப் பட்டைகள் உடையவையாயின் அவற்றிற்கு 'திராவிட சிகரம்' என்று பெயர். நான்கு பட்டையுடையதாயின் 'நாகரம்' என்றும், வட்டமாக இருப்பின் 'வேசரம்' என்றும் அழைப்பர். இந்தியாவின் வடபகுதியில் உள்ள கோயில் அமைப்பை நாகரம் என்றும் தென்பகுதியில் உள்ளதைத் திராவிடம் என்றும் இடையில் உள்ளதை வேசரம் என்றும் சில நூல்கள் குறிக்கின்றன.

## மனை நூல்கள் (வாஸ்து சாத்திரங்கள்)

பல்வேறு கடவுளர்க்குப் பல்வேறு கோயில்கள் எழுப்ப வேண்டும். கோயில் எடுக்கும் நிலம் எவ்வாறு இருக்க வேண்டும்? அதைப் பரிசோதிப்பது எப்படி? கட்டட அமைப்பில் உள்ள பலவித நுணுக்கங்கள் எவை? அங்குள்ள மான அளவுகள் எவை? ஓவியம் தீட்ட உபயோகிக்கும் வண்ணங்கள் யாவை? முதலிய செய்திகளைப் பற்றிக் குறிக்கும் நூல்களுக்கு வாஸ்து சாத்திரம் என்று பெயர். இந்நூல்களில் முக்கியமாக இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று 'மயன்' என்ற ஒப்பற்ற தச்சனால் ஏற்படுத்தப்பட்ட 'மயமதம்' என்ற வழியாகும். மற்றது 'விஸ்வகர்மா' என்ற தெய்வத்தச்சனால் ஏற்படுத்தப்பட்ட வழியாகும். மயமதம் தென்னாட்டில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் போற்றப்பட்டது. விஸ்வகர்மீயம் இந்தியாவின் வடபகுதியில் சிறப்புற்றது. இது தவிர மற்ற நூல்களும் தோன்றின. புகழ் பெற்ற போஜ மன்னன், தானே 'சமராங்கன சூத்ரதாரம்' என்ற வாஸ்து நூலை இயற்றியுள்ளான். கேரள தேசத்தில் 'தந்திர சமுச்சயம்' என்ற நூல் இயற்றப்பட்டது.

சிலப்பதிகாரத்தில், சேர மன்னன் செங்குட்டுவன் ஆலயம் கட்டும் நூல் வழிச் சிறந்தோர்களைக் கொண்டு பத்தினித் தெய்வம் கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்ததை

*"மேலோர் விழையும் நூனெறிமாக்கள்*
*பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்"*

என்று கூறப்பட்டுள்ளது. பல கல்வெட்டுகளில், கோயில்கள் வாஸ்து நூல்களின் வழியில் கட்டப்பட்டன என்றே சான்று காணப்படுகிறது.

## சிற்ப நூல்கள்

தெய்வங்களின் உருவங்களைப் பல்வேறு நிலைகளில் சிற்பங்களாகச் செதுக்குவதற்கும், சுதையினால் செய்வதற்கும், வண்ண ஓவியங்களாக வரைவதற்கும் வழிகாட்டியாக அமைந்த நூல்களே சிற்ப நூல்களாகும். இவற்றில் பல்வேறு தெய்வங்களின் உருவநிலைகள் த்யானஸ்லோகங்களாக அமைந்துள்ளன. இவற்றை அகத்தின் கண் நிறுத்தி கல்கல் என்ற உளியின் ஓசையூடே கல்லிலே அழியாத காவியத்தைப் படைத்தவர்கள் சிற்பிகள், சிற்பாசாரியர்கள். இவர்களுக்காக இயற்றப்பட்ட காஸ்யபம், சாரஸ்வதம், ப்ராம்மீயம் முதலிய சிற்ப நூல்கள் ஏராளம். சாளுக்ய மன்னன் விக்ரமாதித்யன் என்பவன் மானஸோல்லாஸம் என்ற ஒரு சிறந்த நூலை இயற்றியிருக்கிறான்.

## ஆகமங்கள்

கோயில்களில் தெய்வ உருவங்களைப் பிரதிஷ்டை செய்தல், வேள்வியும் விழாவும் எடுத்தல் முதலிய முறைகளைக் குறிக்கும் நூல்களுக்கு ஆகம நூல்கள் என்று பெயர். இவற்றுக்குத் தந்திர சாஸ்திரம் என்னும் பெயர் உண்டு. தந்திர சாஸ்திரங்கள் வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை. நாயன்மார்களும், ஆழ்வார்களும், எல்லாம் வல்ல இறைவனை வேத முதல்வன் என்றும், "அருமறை அங்கம் ஆகமம் வகுத்தவன்" என்றும் அழைக்கின்றனர். ஆகமங்கள் சிவ வழிபாட்டைக் கூறுபவை என்றும், விஷ்ணு வழிபாட்டைக் குறிப்பவை என்றும் இரு வகைப்படும். சிவாகமங்கள், காமிகம், காரணம், அஜிதம் முதலிய 28 நூல்களாகும். வைணவாகமகங்கள் 'வைகானசம்' என்றும், 'பாஞ்சராத்ரம்' என்றும் இருவகைப்படும். விகனஸ் என்ற முனிவரின் வழியைப் பின்பற்றியது வைகானசமாகும். இவ்வாகமங்கள் அனைத்தின் அடிப்படைத் தத்துவமும் ஒன்றே. மனிதன் தான் உடுப்பதும், உண்பதும், கேட்பதும், காண்பதும், களிப்பதும், ஆண்டவனின் அருளால் என்று கருதினான். எனவே அவையனைத்தையுமே கடவுளுக்குப் படைத்துப் பின்னரே தான் கொண்டான். இதுவே ஆகமங்களின் அடிப்படைத் தத்துவமாகும். பரம்பொருளை உருவங்களில் இருக்க வேண்டுதல், ஆசனம் அளித்தல், நீராட்டுதல், சந்தனம் முதலியன அளித்தல், பட்டாடை அணிவித்தல், மலர்மாலைகள் சூட்டல், ருசியான உணவு,

செவிக்கினிய இசை, கண்ணுக்கினிய கூத்துக்கள் முதலிய பல அங்கங்கள் கொண்டதே வழிபாட்டு முறையாகும். ஆண்டுதோறும் பல்வேறு விழாக்களை எடுக்கும் முறையையும் ஆகம நூல்கள் குறிக்கின்றன. சுமார் 2,000 ஆண்டுகளாக இவ்வடிப்படையில்தான் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன என்று அறிகிறோம். பரிபாடல் என்ற தமிழ் நூலில் இவை "விரிநூல்" எனக் குறிக்கப்பட்டுள்ளன.

## கொட்டாட்டுப் பாட்டு

### இசை

கோயில்களில் தெய்வ வழிபாட்டின் அங்கமாகவே இசையும் வாத்யங்களும் விளங்கின. 16 பிரிவுகளைக் கொண்ட ஷோடசோபசாரத்தில் பதினான்காவது அங்கமாக இசையும் இசைக் கருவிகளும் குறிக்கப்படுகின்றன. நிருத்தம் பதினைந்தாவதாகக் கருதப்படுகிறது.

*"கேய வாத்யம் சதுர்தசம்*
*நிருத்தம் பஞ்சதசம் சைவ"*

கடவுளை 'வேதமுதல்வர்' என நம் ஆன்றோர்கள் கருதினர், எனவே அவரது அவையில் இருக்கு, யஜூர், சாம வேதங்கள் ஓதப்பட்டன. முக்கியமாக சாம வேதம் இசையாகவே அமைந்த காரணத்தால் அதற்குத் தனிச்சிறப்பும் அளிக்கப்பட்டது என்று கல்வெட்டிலிருந்து அறிகிறோம். தமிழ்நாட்டுக் கோயில்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இங்கு அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்களும் நம்மாழ்வார், ஆண்டாள், திருமங்கை போன்ற ஆழ்வார்களும் தலங்கள்தோறும் சென்று தெய்வீகத் திருப்பதிகங் களைப் பாடியுள்ளனர். அவற்றையே 'தேவாரம்' என்றும் 'திவ்யபிரபந்தம்' என்றும் அழைக்கிறோம். இத்திருப்பதிகங்கள் இசைப்பண்களாகக் கோயில்தோறும் ஓதப்பட்டு வந்தன. இவற்றோடு முருகப்பெருமான் மீது பாடப்பட்ட திருப்புகழையும் சேர்த்துத் தமிழகத்தையே தெய்வீக இசையுலகாக மாற்றிப் "பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி" என்று பரமனையே பாடினர் தமிழ் மக்கள்.

இத்திருப்பதிகங்களைப் பாடும்போது இசைக்கருவிகளும் இயற்றப்பட்டன. சிறப்பாகக் கோயில்களில் வீணை வாசிக்கப்பட்டது

என்று கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். குழல், கெட்டிமத்தளம், உடுக்கை முதலிய கருவிகள் இசையோடு இணைத்து வாசிக்கப்பட்டன.

*துத்தங் கைக்கிளை விளரி தார*
*முழை யிளி யோசை பண் கெழுமப்பாடிச்*
*சச்சரி கொக்கரை தக்கையொடு*
*தகுனிதந் துந்துபி தாளம் வீணை*
*மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்*
*தமருகங் குடமுழா மொந்தை வாசித்*
*தத்தனை விரவினோடாடு மெங்கள்*
*அப்பனிடம் திரு ஆலங்காடே*

என்று காரைக்காலம்மையின் பதிகத்திலிருந்து தெய்வீக இன்னிசையின் சிறப்பை அறியலாம். இசைப்பண்கள் அக்காலத்தே சிறந்து விளங்கின. ஒவ்வொரு காலத்தே ஒவ்வொரு பண்ணைப் பாடவேண்டும் என்ற நியதி உண்டு.

*பூர்வசந்தியாம் து காந்தாரம்*
*ஷாடவம் ச தத: பரம்*
*மத்யான்ஹே நட்ட ராகம் ச்யாத்*
*கௌசிகம் ச தத: பரம் !*
*ஸாயே து சைந்தளம் ப்ரோக்தம்*
*அதிராத்ரே து பஞ்சமம்*
*பரதோக்தம் யதா நிருத்தம்*
*ஸந்திம் பிரதி ஸுகாரயேத் !!*

அதிகாலையில் காந்தாரப் பண்ணையும், பின்னர் ஷாடவத்தையும், நடுப்பகலில் நட்ட ராகத்தையும், பின்னர் கௌசிகத்தையும், மாலையில் இந்தளம் என்ற பண்ணையும், அர்த்தராத்திரியில் பஞ்சமம் என்ற பண்ணையும் பாடி பரத முனிவர் நாட்டிய நன்னூலில் கூறிய வழிப்படி சந்திகளில் நிருத்தம் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் குறிக்கின்றன. சுமார் 1,300 ஆண்டுகளுக்கு முன்பே, இப்பண்களை வரிசைப்படுத்திக்

கல்லிலே வெட்டி வைத்துள்ள பெருமை தமிழகத்திற்கு உண்டு. குடுமியான்மலை, திருமெய்யம் என்ற இடங்களில் 1,300 ஆண்டுகளுக்கு முன்னரே, 'மத்யமக்ராமம்' ஷட்ஜம், ஷாடவம், சாதாரிதம், பஞ்சமம், கைசிகிமத்யமம், கௌசிகம் என்ற பண்களைப் பாடும் வகை எழுதப்பட்டுள்ளது. இதை ருத்ராசார்யனின் சீடனான குணசேனன் என்ற மன்னன் இயற்றினான் என்று அறிகிறோம். தென்னாட்டையாண்ட மன்னர்கள் அனைவரும் இசையிலும் கூத்திலும் சிறந்த ஆர்வம் காட்டினர். மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னன் காந்தர்வ சாத்திரம் ஒன்றை இயற்றினான் என்றும், சங்கீர்ண ஜாதி என்ற புதிய ராகம் ஒன்றை இசைப்படுத்தினான் என்றும் அறிகிறோம். வீணா நாரதன் என்று ஒரு பல்லவ மன்னன் பட்டம் கொண்டிருந்தான். கேரளத்தில் இப்போது சண்ட வாத்யம் என்று அழைக்கப்படும் கொட்டு சிறப்பாக உள்ளதைக் காண்கிறோம் இது பண்டைய காலத்தில் தென்னாடு முழுவதும் சிறப்புற்றிருந்தது. கோயில்களில் சங்க வாத்யங்கள் வாசிக்கப் பட்டன. முத்திரைச்சங்கு என்று இதை அழைப்பர்.

## கூத்துக்கள்

அசையாத பொருள்களூடே இயற்கை அன்னையோடு இணைந்து, அண்ட சராசரங்களிலும் ஆடுகின்ற பெருமானை, ஆட்டுவிக்கும் பெருமானை கூத்தாடவல்ல குழகன் என்றும், ஆடவல்ல அழகன் என்றும் நம் ஆன்றோர் போற்றுவர். நடராஜ தத்துவத்தைத் தலையாயக் கலைப்படைப்பாக, உலகம் போற்றும் உத்தமச் செல்வமாக, காண்போர் கரங்களைக் கூப்பி தலையாரக் கும்பிட்டு கூத்தாடச்செய்யும் தெய்வமாக, போற்றி மகிழ்ந்ததன்றோ தமிழ்நாடு. இங்கு அசுரர்களின் ஆணவத்தை அழிக்க தெய்வங்கள் ஆடிய பதினொரு கூத்துக்கள் சிறப்புடையன. ஆண்டவனின் அவையில் வழிபாடாக அளிக்கப்படும் கூத்துக்கள் பலவகைப்படும். இவை அகக்கூத்து, புறக்கூத்து என்றும், வேத்தியல், பொதுவியல் என்றும், வசைக்கூத்து, புகழ்க்கூத்து என்றும், ஆரியம், தமிழ் என்றும், சாந்திக்கூத்து, விநோதக் கூத்து என்றும் பலவகைப்படும். இவற்றில் சாந்திக்கூத்து என்பது சொக்கம், மெய்க்கூத்து, அவிநயம், நாடகம் என்று நான்கு உட்பிரிவுகளைக் கொண்டது. சொக்கம் என்பது

சுத்த நிருத்தம் என்றும் அழைக்கப்படும். இது பரத மாமுனியின் நாட்டிய நன்னூலை அடிப்படையாகக் கொண்டு ஆடப்படும் 108 கரணங்களைக் கொண்டது. நாயகன் சாந்தமாக ஆடிய கூத்து ஆதலின் இது சாந்திக் கூத்து என்று அழைக்கப்பட்டது. மெய்க் கூத்து என்பது அகச்சுவையை மையமாகக் கொண்டது. திவ்ய பிரபந்தங்கள் போன்ற பாடல்கள் இதற்கு அடிப்படையாக அமைந்தன. தன்னைத் தலைவியாகக் கொண்டு பரமனைத் தலைவனாகக் கொண்டு ஆடுவது ஆதலின் இது அகமார்க்கம் என்றும் அழைக்கப்படும். "அகத்தெழு சுவையால் அகமெனப்படுமே" என்று சயந்த நூலார் குறிப்பர். இது தமிழ்நாட்டிலேயே மலர்ந்தது ஒன்றும், கன்னட - தெலுங்கு மரபைப் பின்பற்றியது ஒன்றும், ஈழத்து மரபைப் பின்பற்றியது ஒன்றுமாக மூன்று மரபுகள் தேசி, வடுகு, சிங்களம் என்ற பெயர்களில் தமிழகத்தில் வழக்கிலிருந்தன என்று சிலப்பதிகார உரையிலிருந்து அறிகிறோம். திருவொற்றியூர்க் கோயிலில் 12-ஆம் நூற்றாண்டில் சோழ மன்னன் ஒருவன், உறவாக்கின தலைக்கோலி என்னும் ஆடலழகி அகமார்க்கம் ஆட அதைக் கண்டு மகிழ்ந்தான் எனக் கல்வெட்டு கூறுகிறது. இதிலிருந்து அகமார்க்கம் என்னும் கூத்து கோயில்களில் சிறந்து விளங்கியது என்று அறியலாம்.

சாந்திக்கூத்தில் அவிநயம் என்னும் பிரிவு கதையைத் தழுவாமல் பாட்டிற்கு ஏற்ப கை காட்டி ஆடுவதாகும். கதையைத் தழுவி வரும் கூத்துக்கு நாடகம் என்று பெயர். இந்நால்வகைக் கூத்துக்கள் ஆடும் ஆண்களை சாந்திக் கூத்தர் என்றும், பெண்களை சாந்திக் கூத்திகள் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. வேதாரண்யத்தில் சாந்திக் கூத்திகள் பலர் இருந்தனர் என்றும் அவர்களில் பெருந்திருவாட்டி என்பவள் 35 வேலி நிலம் வாங்கி கோயிலுக்கு கொடுத்தாள் என்றும் அறிகிறோம்.

சாந்திக் கூத்தாடுவர் முகத்திலே வண்ணம் பூசித் தலையிலே வாசிகை அணிந்து இப்பொழுது கேரளத்தில் கதகளி ஆடுவோர் போல் அலங்கரித்து ஆடினர் என்று அறிகிறோம்.

*வாசிகை பூண்டு மணித்தோ டணியணிந்து*
*மூசிய சுண்ணம் முகத்தெழுதி-தேசுடனே*
*ஏந்து சுடர்வாள் பிடித்திட்டீசனுக்கும் காளிக்கும்*
*சாந்திக் கூத்தாடத்தகும்.*

என்னும் பழைய பாட்டு இதைத் தெளிவாக்குகிறது. திருவொற்றியூரில் 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு கல்மண்டபத்துத் தூணில் இதுபோல் அலங்கரித்த சாந்திக் கூத்தர் ஒருவரின் சிலை காணப்படுகிறது.

குரவைக் கூத்து, குடக் கூத்து, கலிநடம், கரணம், தோற்பாவை முதலியவை விநோதக் கூத்துகளாகும். குரவைக் கூத்து என்பது எழுவராவது எண்மராவது அல்லது ஒன்பதின்மராவது கை இணைந்து காமமும் வென்றியும் பொருளாகக் கொண்டு குரவைச் செய்யுளைப் பாட்டாகக் கொண்டு ஆடுவது. குரவை என்பது வரிக்கூத்தில் ஒரு வகை என்றும் கூறுவர். தோலால் பாவை செய்து ஆட்டுவது தோற்பாவை என்பது. பல்வேறு உருவங்களையும் பழித்துக் காட்டி ஆடும் கூத்து வசைக் கூத்து என்பதாகும். மன்னனது வெற்றியும் மாற்றானின் தோல்வியும் பாடி ஆடுவது வென்றிக் கூத்து எனப் பெயர்பட்டது. இன்னம் பிற விநோதக் கூத்துகளும் உள்ளன. இவை விரிவாக சிலப்பதிகார உரையில் குறிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு கோயில்களில் வழிபாடாகக் கூத்துகளைப் படைக்கப் பல பெண்களும், ஆடல் ஆசிரியர்களும் இருந்தனர் என்று கல்வெட்டுகளால் அறியலாம். பல சிற்பங்களில் ஆடல் மகளிர் சித்திரிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அழகு நிரம்பியவர்களாகக் காணப்படுகின்றனர். பெண்கள் ஆடலில் சிறக்க அழகுமிக்கவராயும், ஆடலிலும் பாடலிலும் சிறந்தவராயும் இருக்கவேண்டும் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

*"ஆடலும் பாடலும் அழகும் ஒன்றிக்*
*கூறிய மூன்றில் ஒன்று குறைபடாமல்"*

என்று கூறும் சிலம்பு அடிகளிலிருந்து சிறந்த ஆடும் மகளிரின் பண்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்று அறியலாம். இதே கருத்தை பரதமாமுனியின் நாட்டிய நன்னூல்

*யௌவனாதி குணோன்மத்தா*
*நிருத்த கீத விசக்ஷணா*
*சதா பிரகல்பா ச*
*தியக்தாலச்யா கிருதசிரமா*

*சமாகதாஸூ நாரிஷு*
*ரூப யௌவன காந்திஷு*
*ந திருச்யதே குணைஸ்துல்யா*
*நர்த்தகி ஸா பிரகீர்த்திகா*

என்று கூறுகிறது. நல்ல யௌவனம் நிறைந்தவளும் நற்குணங்கள் நிரம்பியவளும், ஆடலிலும், பாடலிலும் வல்லவளும், சோம்பலின்றி எப்பொழுதும் பயின்று வருபவளும் குழுமியிருக்கும் பெண்களில் உருவாலும், யௌவனத்தாலும், அழகாலும் இவளுக்கு ஈடு எவரும் இல்லை என உள்ளவளே நர்த்தகி, "கூத்தி" என்பது அதன் கருத்து. இவர்களைத் தமிழகத்தில் பதியிலார் என்றும், இஷபத்தளியார் என்றும் தேவரடியார் என்றும் அழைப்பர். ஆடலில் சிறந்த மகளிருக்குத் தலைக்கோல் அளித்தல் மரபு என்பது சிலப்பதிகாரத்திலிருந்து அறியலாம். பல கோயில்களில் தலைக்கோல் பட்டம் பெற்ற ஆடல் மகளிர் பணிபுரிந்தனர் என்று கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்.

ஆண்களில் நாட்டிய ஆசான்களாகத் திகழ்ந்த பலர் கோயில் களில் பணிபுரிந்திருக்கின்றனர். இவர்களுக்கு "நிருத்தமாராயர்" என்ற பட்டப் பெயர்கள் காணப்படுகின்றன. சாக்கியார் கூத்து என்று ஒரு வகைக் கூத்து கேரளத்தில் இன்றும் நடைபெறுகிறது. இது பண்டு தமிழகத்தில் வழக்கிலிருந்தது என்று அறிகிறோம். சேரன் செங்குட்டுவன் கூத்தச் சாக்கையன் ஆடலைக் கண்டு மகிழ்ந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. திருவெள்ளறை சாக்கை என்னும் ஆடலாசிரியன் தஞ்சைக் கல்வெட்டில் குறிக்கப்படுகிறான். சாக்கைக் கூத்து என்பதே இப்போது சாக்கியார் கூத்து என வழங்கப்படுகிறது.

ஆடல் மகளிரும் ஆசிரியர்களும் கோயில்களில், அந்தந்த நேரத்துக்குரிய கூத்துகளை ஆடினர். சிறப்பாகத் தெய்வீகத் திருப்பதிகங்களைப் பாடி அகமார்க்கம் என்னும் கூத்துகளை ஆடினர். தஞ்சைப் பெருங்கோயிலில் மட்டும் 400 நாட்டிய மகளிர் நிருத்த பணிபுரிந்தனர். அவர்கள் அனைவரும் தங்கள் அழகாலும் வல்லமையாலும் புகழ்பெற்றவர்கள். அம்மரபில் வந்தவர்கள்தான் அன்று முதல் இன்று வரை பரதநாட்டியத்தையும் கூத்துகளையும் நமக்குக் காத்துத் தந்துள்ளனர்.

*காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாடக்*
*கவினார் வீதி தேம்தாம் என்று அரங்கேறி*
*சேயிழையார் நடமாடும் திருவையாறே*

என்று ஞானசம்பந்தப் பெருமான் போன்ற பெரியார்களால் பாடப்பெற்ற பெருமை உடையவர்கள்.

தஞ்சைப் பெருங்கோயிலில் பணிபுரிந்த ஆடல் மகளிருக்கு நட்டவஞ் செய்ய மும்முடிச்சோழ நிருத்தமாராயன் என்பவரும் பிறரும் இருந்தனர். மேலும் கொட்டாட்டுப் பாட்டு, வங்கியம், பாடவியம் முதலிய இசை வல்லுநர்கள் இருந்தனர். அவர்கள் கோயிலில் பணிபுரிய அமர்த்தப்பட்டனர். தஞ்சைக் கணபதி என்பவன் குதிரைச் சேவகனாக இருந்தவன் அவன் கோயிலில் வங்கியம் வாசிக்க அமர்த்தப்பட்டான். ஆரியம் பாடுவார், தமிழ் பாடுவார், கொட்டி மத்தளம் வாசிப்பார், உடுக்கை வாசிப்பார், வீணை வாசிப்பார், முத்திரைச்சங்கு ஊதுவார் முதலியோரும் கோயிலில் பணிபுரிய அமர்த்தப்பட்டனர். பல படையைச் சேர்ந்த வீரர்கள் பக்கவாத்தியர்களாகப் பணிபுரிந்தனர். தளிச்சேரிப் பெண்டுகளுக்கு நாயகஞ் செய்வார் ஒருவர் இருந்தார். தஞ்சைப் பெருங்கோயிலில் இதுபோன்று எவ்வாறு இசை வல்லுநரும் கூத்தாடும் வல்லுநர்களும் பணிபுரிந்தனரோ அதேபோன்று பெருங்கோயில்களில் பலர் பணிபுரிந்திருக்கின்றனர்.

கூத்துகளைத் தவிரக் கோயில்களில் பல நாடகங்கள் நடந்தன என்றும் அறிகிறோம். தஞ்சையில் ராஜராஜேச்வரம் என்னும் நாடகம் நடந்தது.

# கோயில்கள் இலக்கணம்

கோயில்கள், விமானம், இடைக்கட்டு, முன்மண்டபம், மஹாமண்டபம், திருச்சுற்று, பரிவாரக்கோயில், கோபுரவாயில் எனப் பல பகுதிகளைக் கொண்டது. கோயிலை எடுப்பதற்கு முன்னர் உரிய நிலத்தைத் தேர்ந்தெடுத்துச் சமன்செய்வர். அங்கு எடுக்கவிருக்கும் கோயிலின் அளவையொட்டி நிலத்தில் ஒரு சதுரம் வரைவர். அதை பக்கத்திற்கு எட்டாக மொத்தம் 64 சதுரங்களாகவோ அன்றி பக்கத்திற்கு ஒன்பது சதுரங்களாக 81 சதுரங்களாகவோ அமைப்பர். இவற்றில் நடுவில் உள்ள சதுரங்களில் விமானத்தையும், ஓரங்களில் உள்ள சதுரங்களில் திருச்சுற்று, பரிவாரக்கோயில் முதலியவற்றையும் அமைப்பர். இடைப்பட்ட சதுரங்கள் வெளியாக இருத்தல் வேண்டும். இவற்றை "மர்மத்தானங்கள்" என்றும் அங்கு எந்த கட்டடமும் எடுத்தல் கூடாது என்றும் கூறுவர். திருச்சுற்றை நீண்ட சதுரமாக அமைக்கச் சதுரத்தை இரட்டிப்பர். ஒவ்வொரு சதுரத்திற்கும் உரிய தெய்வங்கள் யாவை என்று உரிய நூல்கள் குறிக்கின்றன.

இக்கட்டடங்களை அமைக்க ஸ்தபதியர் சிறந்த எளிமையான முறையை வகுத்துள்ளனர். இவற்றைப் பின்பற்றி எவ்வளவு பெரிய கோயிலாக இருப்பினும், எவ்வளவு உயர்ந்த கோயிலாக இருப்பினும் எளிதில் அவர்களால் எழுப்பிவிட முடியும். நாம் சொற்களையும் சொற்றொடர்களையும் அமைக்க எழுத்துக்களை வகுத்து அவற்றை மாற்றித் தொகுப்பதால் எவ்வாறு பல்வேறு சொற்களையும் தொடர்களையும் அமைக்க முடியுமோ அதேபோன்று ஸ்தபதியர் கட்டடங்களை எழுப்பப் பல்வேறு ஆதாரப் பகுதிகளை வகுத்துள்ளனர். அவற்றை ஒன்றோடொன்று கூட்டியும், குறைத்தும், இணைத்தும் பல்வேறு விதமான கட்டடங்களை அவர்கள் எழுப்பும் திறன் பெற்றுள்ளனர். கட்டடம் எழுப்புவதில் ஆதாரப் பகுதிகளாக உள்ளவை 1. அதிட்டானம் (பீடம்), 2. சுவர் (கால்), 3. பிரஸ்தரம்

(கூரை), 4. கழுத்து (கிரீவம்), 5. சிகரம் (தலை), 6. குடம் (ஸ்தூபி) என்பவையாகும். இவ்வங்கங்களை அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என மனித உடல் அங்கங்களுக்கு உவமிப்பர்.

## அதிட்டானம் (அடி)

இது உபானம், ஜகதி, குமுதம், பத்மம், அந்தரி, வாஜனம், பட்டிகை என பல பகுதிகளை உடையது. இவற்றை மாற்றி மாற்றி அமைப்பதால் பல்வேறு வகையான அதிட்டானங்களை அமைக்கலாம். அதிட்டானத்தில் சிறப்பாக இருவகை உண்டு. "பாத பந்த அதிட்டானம்" (பாதக்கட்டு) என்றும் "பத்ம பந்த அதிட்டானம்" (தாமரைக்கட்டு) என்றும் இருவகைப்படும். அதிட்டானத்தின் கீழ் சில கோயில்களில் "உப பீடம்" என்னும் பகுதி அமைக்கப்படும். தஞ்சைப் பெருங்கோயில், கங்கைகொண்ட சோழீச்வரம் ஆகிய கோயில்களில் இதைக் காணலாம். கட்டடத்தின் உயரத்தை அதிகப்படுத்துவதற்கும், அழகு அளிப்பதற்கும் உப பீடத்தை அமைப்பர். பல கோயில்களில் உப பீடம் இன்றி அதிட்டானம் மட்டும் அமைக்கப்பட்டிருக்கும். அதிட்டானம்தான் மேலுள்ள கட்டடம் முழுவதையும் தாங்குகிறது.

## சுவர் (கால்)

அதிட்டானத்தின்மேல் உள்ள பகுதி "சுவர்" அல்லது "கால்" என்று அழைக்கப்படும். இப்பகுதி வெறும் நெடுஞ்சுவராக இருந்தால் அழகு இராது. ஆதலின் ஆங்காங்கே அரைத்தூண்களும், கோட்டங்களும், மகர தோரணங்களும் அமைக்கப்பட்டு அழகுற எடுக்கப்படும். கருவறை உள்ள பகுதியாயின் எந்தத் திக்குகளில், எந்தக் கோட்டங்களில் எத்தெய்வங்கள் வைக்கப்படவேண்டும் என்ற நியதி உண்டு.

## பிரஸ்தரம் (கூரை)

சுவரின் மேல் வரும் கூரையே அறையை மூடும் அங்கமாகும். இது பூதவரி, கொடுங்கை, யாளிவரி என மூன்று பகுதிகளை உடையது. இதன் மேல் ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தளங்கள் அமைக்கப்படுவதுண்டு.

### கிரீவம் (கழுத்து)

மேலே அமைக்கப்படும் தலையின் (சிகரத்தின்) அமைப்பை ஒட்டிக் கழுத்து சதுரமாகவோ, வட்டமாகவோ, எண்பட்டையாகவோ அமைக்கப்படும். இதில் நான்கு திசைகளிலும் நான்முகன், விஷ்ணு, சிவன், முருகன் அல்லது இந்திரன், ஆகிய தெய்வங்களின் உருவங்கள் வைக்கப்படும். தென்திசையில் சிவனும், மேற்குத் திசையில் திருமாலும், வடதிசையில் நான்முகனும் பெரும்பாலும் காணப்படும். கிழக்குத் திசையில் சில இடங்களில் முருகனும், சில இடங்களில் இந்திரனும் காணப்படுவதுண்டு. இவை தவிர குறிப்பிட்ட மாற்றங்களை உடைய வேறு சில கோயில்களும் காணலாம். இடைப்பட்ட பகுதிகள் வெளியாக இருக்கும் அல்லது திசைக் காவலர்களின் உருவங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

### சிகரம் (தலை)

கழுத்துக்கு மேல் அமையும் பகுதியைச் சிகரம் என்று அழைப்பர். இது சதுரமாகவோ, எண்பட்டையாகவோ, வட்டமாகவோ அல்லது தூங்கானை வடிவிலோ காணப்படும். சிகரத்தின் அமைப்பைக் கொண்டு கோயிலைப் பல்வேறு வகையாகப் பிரிப்பர். எண்பட்டைச் சதுரமாக இருந்தால் அதைத் 'திராவிட சிகரம்' என்றும், சதுரமாக இருந்தால் அதை 'நாகர சிகரம்' என்றும், வட்டமாக இருந்தால் 'வேஸர சிகரம்' என்றும் அழைப்பர். இப்பெயர்கள் உருவங்களை அறிந்து கொள்ள இடப்பட்ட இடுகுறிப் பெயர்களாகும். இவ்வமைப்பு அனைத்தும் தமிழகத்தில் காணப்படுகின்றன.

### குடம் (ஸ்தூபி)

சிகரத்தின் மேல் குடம் போலும், அதன்மேல் குவிந்த தாமரை போலும் உள்ள பகுதியைக் குடம் அல்லது கலசம் அல்லது ஸ்தூபி என்றழைப்பர். இது கல்லாலோ, சுதையாலோ, உலோகத்தாலோ செய்யப்பட்டிருக்கும்.

### நிலை (தளம்)

பிரஸ்தரத்திற்கு மேல் ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலைகள் அமைக்கப்படுவதுண்டு. ஒரு நிலை உள்ள கோயிலைச் 'சிறு கோயில்' (அல்ப பிராஸாதம்) என்று அழைப்பர். பிற கோயில்களை நிலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து,

"இருநிலை விமானம்", "மூன்று நிலை விமானம்" என்று பெயரளிப்பர். ஒவ்வொரு நிலையிலும் சாலைகளும், கூடங்களும் மாலை போல் சுற்றியமைக்கப்பட்டிருக்கும். நீண்ட சதுர அமைப்புடையதைச் சாலையென்றும், சதுர அமைப்புடையதைக் கூடமென்றும் அழைப்பர். சில கோயில்களில் கருவறையின் மேல் நிலைகளில், ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு கருவறைகளுமாக மூன்று கருவறைகளுள்ள கோயில்கள் உண்டு. மாமல்லபுரத்திலுள்ள தர்மராஜ இரதம், காஞ்சியிலுள்ள வைகுந்தநாதர் கோயில், உத்தரமேரூரிலுள்ள சுந்தரவரதர் கோயில் முதலியவற்றில் இதுபோல் மூன்று கருவறைகளைக் காணலாம். கீழ்நிலையில் கருவறையின்றி மேல்நிலையில் மட்டும் கருவறை அமைக்கப்பட்டால் அதை 'மாடக் கோயில்' என்பர். நின்று உறங்கும் யானை போல் அமைக்கப்பட்ட கோயிலைத் 'தூங்கானைமாடம்' என்பர். இதுதவிர வேறு சில அமைதிகள் உடைய கோயில்களும் உண்டு. கருவறையும், மேலுள்ள கட்டடப் பகுதியும், 'விமானம்' எனவும் 'ஸ்ரீகோயில்' எனவும் அழைக்கப்படும். வாயிலை அலங்கரிக்கும் கட்டடத்தைக் 'கோபுரம்' என அழைப்பர். கருவறை உள்ள கட்டடத்தைக் 'கோபுரம்' என்று அழைக்கக்கூடாது.

வாயிலை அலங்கரித்து நிற்கும் அழகிய கட்டடப் பகுதிக்குக் 'கோபுரம்' என்று பெயர். இது பல நிலைகளை உடையதாய் இருக்கும். ஏழு நிலை, ஒன்பது நிலை முதலிய பல நிலைகளை உடைய கோபுரங்கள் உண்டு.

மண்டபங்களை எடுக்க அதிட்டானம், கால், பிரஸ்தரம் ஆகிய மூன்று பகுதிகளே தேவைப்படும் மண்டபங்கள் கருவறையின் முன் இணைக்கப்பட்டிருந்தால் அதை 'முன்மண்டபம்' என்றும், அதுவே பெரிய அளவிலிருந்தால் 'மகாமண்டபம்' என்றும் அழைப்பர். கோயிலைச் சுற்றி எடுக்கப்பட்ட சுவருக்குத் 'திருச்சுற்று மதில்' என்றும், அதையொட்டி மாளிகை எடுக்கப்பட்டிருந்தால் அதைத் 'திருச்சுற்று மாளிகை' என்றும் அழைப்பர்.

# தமிழ்நாட்டுக் கோயில்கள் வரலாறு

## பல்லவர் காலம்

### குடைவரைக் கோயில்கள்

சங்ககாலத்தில் கோயில்கள் எவ்வாறு இருந்தன என்பதை 'சங்ககாலக் கலை' என்னும் பகுதியில் காணலாம். ஆனால் தமிழகத்தில் எஞ்சியுள்ள கோயில்களில் மிகவும் தொன்மையானவை பல்லவர் காலத்திலிருந்துதான் காணப்படுகின்றன. அதற்கு முன்பிருந்தவை காலத்தாலும் திருப்பணிகளாலும் உருமாறியுள்ளன.

பல்லவர் காலக் கோயில்களை 1. குடைவரைக் கோயில்கள், 2. ஒற்றைக் கற்கோயில்கள், 3. கட்டடக் கோயில்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். இவற்றையே குடைவித்த கோயில்கள். செதுக்குவித்த கோயில்கள், கட்டுவித்த கோயில்கள் எனவும் கூறலாம்.

பல்லவர் கோயில்களில் மிகவும் தொன்மையானவை மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்தவை. இம்மன்னன் தன் நாட்டின் பல பகுதிகளில் மலைகளைக் குடைவித்து கோயில்கள் அமைத்திருக்கிறான். அவற்றில் மண்டகப்பட்டு என்ற ஊரில் திருமாலுக்கும், நான்முகனுக்கும், சிவபிரானுக்கும் ஆகக் குடைவித்த கோயிலொன்று உண்டு. "இக்கோயில் மரமின்றி, சுதையின்றி, உலோகமின்றி, செங்கலின்றி தோற்றுவித்தேன்" எனக் கூறுகிறான். ஆதலின் இதற்கு முற்பட்ட கோயில்கள் இவை அனைத்தையும் கொண்டு அமைக்கப்பட்டன என்பது தெளிவு.

மகேந்திரன் காலக் குடைவரைக் கோயில்கள் நீண்ட சதுரமான மண்டபம் போல் அமைக்கப்பட்டு உள்ளன. இவற்றை "மண்டபக் கோயில்கள்" என்றும் அழைக்கலாம். பெரும்பாலானவற்றில் வாயிற்காவலர் சிலைகள் மட்டும் உள்ளன. திருச்சியில் மலையின் மேல் இவன் குடைவித்த கோயில் ஒன்று உள்ளது. அதில் "பெருக்காறு சடைக்கணிந்த பெருமான்" ஆன கங்காதரமூர்த்தியின் எழில் சிற்பம் சிறப்பாக உள்ளது. இவன் குடைவித்த பல கோயில்களில் தனது பட்டங்களைக் கல்வெட்டுகளில் பொறித்து

வைத்துள்ளான். இவன் தோற்றுவித்துள்ள குடைவரைக் கோயில்கள் மண்டகப்பட்டு, மாமண்டூர், பல்லாவரம், வல்லம், திருச்சி, சிங்கவரம் ஆகிய பல ஊர்களில் உள்ளன.

இவனுக்கு அடுத்து வந்த முதலாம் நரசிம்மவர்மனாகிய 'மாமல்லன்' மாமல்லபுரத்தில் இருக்கும் குடைவரைக் கோயில் களையும், ஒற்றைக் கற்கோயில்களையும் செய்தவன் என்று இதுகாறும் கருதிவந்தனர். இக்கருத்து தவறு என இப்போது கண்டு இவற்றைத் தோற்றுவித்தவன் இரண்டாம் நரசிம்மவர்மனாகிய 'இராஜ சிம்மனே' என்று காட்டப்பட்டுள்ளது. திருக்கழுக்குன்றத்தில் உள்ள ஒரு குடைவரைக் கோயிலில் "வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தரையனின்" கல்வெட்டு ஒன்று உள்ளது. ஆதலால் இக்குகைக் கோயில் அவன் காலத்தைச் சார்ந்ததாக இருக்கக்கூடும். மாமல்லபுரத்தில் பல குகைக் கோயில்களும், ஒற்றை கற்கோயில் களும், சில கட்டடக் கோயில்களும் உள்ளன. குகைக் கோயில்களில் பெரும்பாலானவை மண்டபக் கோயில்களாக விளங்குகின்றன. இங்குள்ள குகைக் கோயில்களில் சிறப்புடையவையாக நான்கு குகைக் கோயில்களைக் கூறலாம். 'ஆதிவராகக் குகை', 'மகிஷமர்த்தினி குகை', 'வராகக்குகை', 'மும்மூர்த்திக் குகை' ஆகிய இந்நான்கு மண்டபக் கோயில்களிலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சிற்பங்கள் உள்ளன. வராகக் குகையும், ஆதிவராகர் குகையும் திருமாலுக்கு உரியவையாகும். மகிஷமர்த்தினி குகை சிவபிரானுக்குரியது. மும்மூர்த்திக்குகை என்று அழைக்கப்படுவது முருகப்பிரானுக்கும், திருமாலுக்கும், சிவபிரானுக்கும் எடுக்கப்பட்டது. இதன் அருகில் கொற்றவையின் உருவமும் உண்டு.

மாமல்லபுரத்துக்கு அருகில் சாளுவன் குப்பம் என்ற இடத்தில் இரண்டு குகைக் கோயில்களுள்ளன. ஒன்றில் வெளிமுகப்பு முழுவதிலும் யாளியின் முகம் செதுக்கப்பட்டுள்ளது. ஆதலின் இதை ஊரார் 'புலிக்குகை' என்பர். இது குகைக் கோயில்களின் அமைப்பிலேயே வியத்தகு வடிவுடையது. மாமல்லபுரத்தைத் தவிர தளவானூர் என்ற இடத்தில் உள்ள குகைக் கோயிலும் இம்மன்னன் காலத்தது. பின்னர் வந்த 'தந்திவர்மன்' என்ற மன்னன் காலத்திலும் ஒரு சில குடைவரைக் கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## ஒற்றைக் கற்கோயில்கள்

பல்லவர்கள் மலையைக் குடைவித்து மண்டபக்கோயில் அமைத்ததோடன்றிக் குன்றுகளைச் செதுக்கிக் கோயில்களாகவும் அமைத்துள்ளனர். இவ்வகையைச் சேர்ந்த அனைத்தும் மாமல்ல புரத்திலேயே உள்ளன. பஞ்சபாண்டவ ரதம் என்று அழைக்கப்படும் ஐம்பெரும் தளிகளும் இவ்வகையைச் சார்ந்தவையே. இவை பல கோயில் அமைப்புகளை நமக்குக் காட்டுகின்றன. இவற்றில் தர்மராஜ ரதம் என்பது மூன்று நிலையும், எண்பட்டைச் சிகரமும் உடைய கோயில். சிவபிரானுக்கு உரியது. அடுத்து நீண்ட சாலை வடிவில் உள்ள கோயில் பீமரதம் என்றழைக்கப்படுவது. இது திருமாலுக்கு உரியதாய் இருக்கலாம். அடுத்து அர்ஜுன ரதம் என்று அழைக்கப்படும் கோயில் இருநிலைகளை உடையது. எண்பட்டைச் சிகரமுடையது சிவபிரானுக்குரியது. இதற்கு அடுத்து உள்ளது குடிசை வடிவில் இருக்கிறது. கொற்றவைக்கு அமைக்கப்பட்ட கோயில் இவை நான்கும் ஒரே குன்றிலிருந்து செதுக்கப்பட்டவை. இவற்றின் எதிரே உள்ள கோயிலை சகதேவ ரதம் என்பர். இது தூங்கானை மாட வடிவில் உள்ளது.

இவை தவிர மாமல்லபுரத்தில் கணேச ரதம் என்னும் ஒரு ஒற்றைக் கற்கோயிலும், பிடாரி ரதங்கள் என்னும் இரு கோயில்களும், வலையன்குட்டை ரதம் என்னும் ஒரு கோயிலும் இங்கு உள்ளன. இவையனைத்தும் குன்றைச் செதுக்கி அமைத்த ஒற்றைக் கற்கோயில்களாகும். இவற்றைச் செதுக்குவதில் ஒரு முறை உண்டு. கட்டடக் கோயில்களை எடுக்கக் கீழிருந்து கற்களை ஒன்றொன்றாக அடுக்கி மேலே எடுத்துச்செல்ல வேண்டும். ஆனால் ஒற்றைக் கற்கோயில்களை அமைக்க மேலிருந்து படிப்படியாகக் கீழே செதுக்கிவரவேண்டும். இதைக் காண்பிக்கும் வகையில் ஓர் ஒற்றைக் கற்கோயில் மகிஷமர்த்தினி குகைக்கு எதிரில் தொடங்கப் பட்டுள்ளதைக் காணலாம். இவ்வொற்றைக் கற்கோயில்கள் அனைத்தும் அன்று நிலவியிருந்த கோயில் வகைகளுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

## கட்டடக் கோயில்கள்

பல்லவர் காலக் கட்டடக் கோயில்களில் மிகவும் தொன்மையாக எஞ்சியுள்ளது காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள 'கூரம்' என்ற இடத்தில் உள்ளதாகும். இதை முதலாம் பரமேச்வரவர்மன் காலத்தில் 'வித்யாவிநீதன்' என்பவன் எடுத்தான். இதற்கு "வித்யாவிநீத பல்லவபரமேச்வர கிருஹம்" எனப் பெயர். இது தூங்கானை மாட வடிவில் அமைந்துள்ளது. இதன் அடிப்பகுதி மட்டுமே எஞ்சியுள்ளது. பரமேச்வரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் இராஜசிம்மன் காலத்தில்தான் சிறந்த கட்டடக் கோயில்கள் எடுப்பிக்கப்பட்டன. இவன் எடுத்த கோயில்கள் காஞ்சிபுரம், மாமல்லபுரம், பனைமலை, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் எஞ்சி யுள்ளன. மாமல்லபுரத்தில் கடற்கரையோரத்தில் உள்ள கடற்கரைக் கோயில் உலகப்புகழ் வாய்ந்தது. இந்தக் கோயில்களின் விமானங்கள் மிகவும் உயர்ந்து பல நிலைகளோடு கட்டப்பட்டுள்ளன. இதைச்சுற்றிலும் திருச்சுற்றும், ஒரு பெரும் மண்டபமும் உள்ளது. மிகவும் எழில் வாய்ந்த சூழ்நிலையில் அமைந்திருப்பதால் இது வருவோர் அனைவருடைய கவனத்தையும் கவருகிறது. மாமல்லபுரத்திலேயே மற்றொரு கட்டடக்கோயில் மகிஷமர்த்தினி குகையின் மேலே இருக்கிறது. இதன் மேல்பகுதி வீழ்ந்துவிட்டது. இதுதவிர முகுந்தநாயனார் கோயில் என்ற ஒரு கோயிலும் இங்கு உண்டு.

பல்லவர்களுடைய கட்டடக் கோயில்களிலேயே மிகவும் உன்னதச் சிறப்பும் எழிலும் வாய்ந்தது காஞ்சி கைலாசநாதர் ஆலயம். இதை 'இராஜசிம்மேச்வரம்' என்று கல்வெட்டுகள் கூறும். அன்று கட்டப்பட்ட கற்கோயில்களில் மிகவும் பெரிய கோயில் இதுதான். ஆதலின் இதற்குப் 'பெரிய திருக்கற்றளி' என்ற பெயர் உண்டு. பெரிய விமானமும், சிறு சிறு ஆலயங்களைக் கொண்ட திருச்சுற்றும் உள்ளன. சுவர் முழுவதும் சிவபிரான், உமையன்னை, முருகப்பிரான், திருமால் இன்னபிற உருவங்கள் எழில்மிகுச் சிற்பங்களாகத் திகழ்கின்றன. இது இந்நாட்டிலுள்ள கோயில்களில் பரிவாரக் கோயில்களும், பிற தெய்வங்களின் கோயில்களும் முழுமையாயுள்ள ஓர் ஒப்பற்ற பெருங்கோயிலாகும். இக்கோயிலின் முகப்பில் இராஜசிம்மன் மகன் மகேந்திரன் என்பவனால் கட்டப்பட்ட மற்றொரு சிறு கோயிலும் இருக்கிறது. அதற்கும் முன்னர் சிறு சாலையோடு

கூடிய நுழைவாயில் இருக்கிறது. பெருங்கோபுர அமைதி இங்கு இல்லை. பனைமலைக் கோயில் சற்று மாறுபட்ட அமைப்பை உடையதாக இருக்கிறது. இக்கோயிலில் சிற்பங்கள் அதிகம் இல்லை. ஆனால் சிறந்த ஓவியங்கள் நிறைந்து இது திகழ்ந்திருக்க வேண்டும். காஞ்சியில் இன்னும் சில பல்லவர்காலச் சிறு கோயில்கள் உள்ளன. அவற்றில் சில இராஜசிம்மன் காலத்தவையாகக் கருதப்படுகின்றன. திருச்சிக்கு அருகில் திருப்பத்தூர் என்னுமிடத்தில் பல்லவர் கோயில் ஒன்று இருக்கிறது. அது காஞ்சி கோயில்களைப் போன்று இருக்கிறது. கைலாயநாதர் என்றழைக்கப்படும் அக்கோயிலும் இராஜசிம்மன் காலத்ததாகக் கருதப்படுகிறது.

எட்டாவது நூற்றாண்டின் மத்தியில் ஆண்ட நந்திவர்மன் பல்லவ மல்லன் காலத்தில் எடுக்கப்பட்ட சில கோயில்கள் காஞ்சியில் உள்ளன. அவனால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் வைகுந்தநாதர் கோயில் என்னும் பரமேச்வர விண்ணகரம் சிறப்புடையது. ஒன்றின்மேல் ஒன்றாக மூன்று கருவறைகள் உடைய இக்கோயிலின் விமானம் பெரும் விமானமாகும். இக்கோயிலைச் சுற்றிலும் உள்ள திருச்சுற்றில் பல்லவர்களுடைய வரலாறு சிற்பமாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது. உத்தரமேரூரில் உள்ள சுந்தரவரதர் கோயிலும் இம்மன்னன் காலத்ததே.

மேலே குறிக்கப்பட்டுள்ள பல்லவர்காலக் கோயில்களில் பெரும்பாலானவை மணற்கல்லால் கட்டப்பட்டவை. இவற்றில் விமானங்கள்தான் மிகவும் உயர்ந்து நிற்கும். ஆயினும் அவை 35 அல்லது 40 அடிக்கு மேல் இருக்கமாட்டா. கற்களை அடுக்கிச் சுவர்களை எடுப்பித்த பிறகு அச்சுவர்களிலேயே சிற்பத்தைச் செதுக்குவது இவர்கள் கடைப்படித்த ஒரு மரபாகும். இதை நோக்கும்போது செங்கற்களால் சுவரை எழுப்பி, சுவரிலேயே சுதை உருவங்களைச் செய்து மண்ணீடு என்று பண்டைய நூல்கள் குறிக்கும். சங்ககாலத்தில் தமிழகத்தில் மண்ணீட்டாளர் சிறந்த நிலை வகித்து வந்தனர். அதே கலையைப் பல்லவர் காலத்தில் கல்லில் அமைத்தனர். இவர்கள் மணற்கல்லைத் தேர்ந்தெடுப்பதற்கு இதுவே காரணமாக இருந்திருக்கக்கூடும். சிற்பங்களைத் தனியே செய்து சுவரில் பொருத்தாமல் சுவரிலேயே செதுக்கிவிடுவது சங்க

காலத்திலிருந்து தொடர்ந்து வந்த மண்ணீட்டாளர் கலையே. இவ்வாறு செதுக்கப்பட்ட சிற்பங்களின் மேல் சுண்ணாம்புச் சாந்து பூசி, வண்ணம் தீட்டியுள்ளனர்.

திருவதிகையில் வீரட்டானம் என்னும் கோயில் பல்லவ மன்னன் பரமேச்வரன் காலத்தில் கட்டப்பட்டது. நிருபதுங்கவர்மன் காலத்தில் இது திருப்பணி செய்யப்பட்டது. இக்கோயிலின் அமைப்பில் ஒரு சிறப்பைக் காண்கிறோம். இதன் அடிப்பகுதி மட்டும் கருங்கல்லால் ஆனது. மேல்பகுதி முழுவதும் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. சுவரின் புறத்தே சுதை உருவங்கள் உள்ளன. இக்கோயிலின் அமைப்பைக் கொண்டுதான் தஞ்சைப் பெருங்கோயில் கட்டப்பட்டது என்று சொல்லும் அளவுக்கு இதன் அமைப்பு உள்ளது. இது சுமார் 80-லிருந்து 100-அடி உயரம் இருக்கும். பல்லவர் காலக் கோயில்களில் மிகவும் உயரமானது இதுவே. பல்லவர் காலக் கோயில்களில் உயர்ந்த வாயிற் கோபுரம் என்பதே இல்லை எனலாம்.

## பாண்டியர் காலம்

பல்லவர்கள் தமிழகத்தின் வடபகுதியை ஆண்டபோது, பாண்டியர்கள் தென்பகுதியை ஆண்டனர். அவர்களும் ஏராளமான மலைகளைக் குடைவித்து மண்டபக் கோயில்களை எழுப்பியுள்ளனர். இவர்களது கோயில்கள் திருமெய்யம், குன்றக்குடி, மலையடிபட்டி, குன்னாண்டார் கோயில், குடுமியாமலை, கழுகுமலை, திருப்பரங் குன்றம், ஆனைமலை, திருமால்புரம் முதலிய ஊர்களில் காணப்படுகின்றன. இன்னும் சிறப்பாகக் குறிப்போமானால் பல்லவர்களைக் காட்டிலும் பாண்டியர்கள் குடைவரைக் கோயில்களை அதிகமாகவே தோற்றுவித்துள்ளனர். பாண்டியர் குகைக் கோயில்களிலும் சிற்பங்கள் அதிகம் காணப்படுகின்றன. சிவபிரானுக்கும், திருமாலுக்கும் எடுத்த கோயில்கள் இங்கு அதிகம் உள்ளன. திருகோகர்ணம், திருப்பரங்குன்றம் அகிய இடங்களிலுள்ள சிற்பங்கள் மிக எழில் வாய்ந்தவை. மதுரைக்கு அருகில் உள்ள ஆனைமலையில் நரசிம்மப் பெருமானுக்கு ஒரு குகைக் கோயில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பராந்தக நெடுஞ்சடையனின் உத்தர மந்திரியாய் இருந்த 'மாறங்காரி' என்பவனால் அக்கோயில்

எடுப்பிக்கப்பட்டது என்றறிகிறோம். அதற்கருகில் முருகப் பெருமானுக்கு குடைவிக்கப்பட்டக் கோயிலொன்று இருக்கிறது. திருப்பரங்குன்றத்தில் பராந்தக நெடுஞ்சடையனின் தானைத்தலைவன் 'சாமந்த பீமன்' என்பான் சிவபிரானுக்கு ஒரு மண்டபக் கோயில் குடைவித்துள்ளான் இக்கோயில் திருமால், முருகன், கொற்றவை, கணபதி, சிவபிரான் ஆகிய தெய்வங்களுக்காக அமைக்கப்பட்டது.

## வெட்டுவான் கோயில்

பல்லவர்கள் மாமல்லபுரத்தில் சிறந்த ஒற்றைக் கற்கோயில்களைச் செதுக்கி அமைத்துள்ளனர். அதேபோன்று பாண்டியர்களும் ஓர் ஒற்றைக் கற்கோயிலைத் தோற்றுவித் துள்ளனர். அக்கோயில் கழுகுமலை என்னுமிடத்திலுள்ள 'வெட்டுவான்' கோயிலாகும். பல்லவர்கள் ஒரு சிறு குன்று முழுவதையும் செதுக்கி அதையே கோயிலாக அமைத்தனர். ஆனால் பாண்டியர்கள், ஒரு மலையின் ஒரு பகுதியை மட்டும் செதுக்கித் தனித்தாக்கி அதில் கோயிலைச் செதுக்கியிருக்கின்றனர். இதில் எழில்மிகு சிற்பங்கள் உள்ளன. இக்கோயில் முழுமையாகச் செதுக்கப்படாமல் பாதியிலேயே நின்றுவிட்டது. எல்லோராவில் உள்ள கைலாயநாதர் கோயில் இதனைப்போல் செதுக்கப்பட்டதுதான். இதன் அழகினாலும், அமைப்பினாலும் வெட்டுவான் கோயிலை 'தென்னகத்தின் எல்லோரா' என்று அழைப்பர்.

இதுதவிர பாண்டியர்கள் பல மலைகளில் பல சமணச் சிற்பங்களைச் செதுக்கி வைத்துள்ளனர். பாண்டியர் கால கட்டடக் கோயில் என்று சொல்லும் அளவுக்கு எதுவும் எஞ்சவில்லை.

## அதியமான் கோயில்கள்

பல்லவரும் பாண்டியரும் ஆண்ட அதே காலத்தில், தகடூரைத் தலைநகராகக் கொண்டு அதியர் ஆண்டு உள்ளனர். அவர்களில் சோமன் என்னும் அதியேந்திரன் நாமக்கல்லில் இரு குகைக் கோயில்களைக் குடைவித்துள்ளான். இரண்டும் திருமாலுக்கு உரிய கோயில்களாகும். இவற்றில் ஒன்று நரசிம்மப் பெருமானுக்கும், மற்றது பள்ளிகொண்ட பெருமானுக்கும் எடுக்கப்பட்டவையாகும். இரண்டிலும் அழகிய சிற்பங்களுள்ளன.

## சோழர் காலம்

சுமார் கி.பி. 850-இல் தஞ்சாவூரை முத்தரையர் என்பவர்களிடமிருந்து கைப்பற்றிச் சோழப் பேரரசை நிறுவியவன் விஜயாலய சோழன் ஆகும். அதிலிருந்து சுமார் 250 ஆண்டுகள் தமிழகத்தின் பெரும்பகுதியைச் சோழர்கள் ஆண்டனர். இக்காலமே தமிழக கோயில் வரலாற்றில் பொற்காலம் எனலாம்.

சோழர் காலத்தில் விஜயாலயன் காலம் தொடங்கி இராஜராஜன் காலம் வரை கோயிற்கலையில் ஒரு குறிப்பிட்ட கட்டம் எனலாம். இக்காலத்தில் பெரும்பாலான கோயில்கள் பல்லவர்கால இறுதியில் எந்த அமைப்பில் இருந்தனவோ அவை போலவே அமைக்கப்பட்டன. பாடல் பெற்ற பல கோயில்கள் இதற்கு முன்னர் செங்கல்லால் கட்டப்பட்டவையாய் இருந்தன போலும். அவை இக்காலத்தில் முற்றிலும் கருங்கல்லால் மாற்றி அமைக்கப்பட்டன. இவை 'கற்றளிகள்' என அழைக்கப்பெற்றன. இக்காலக் கோயில்கள் அதிக உயரமின்றிச் சற்றேறக்குறைய 30 அடி உயரத்திற்குள்ளாகக் கட்டப்பட்டன. காஞ்சிபுரத்தில் பல்லவ மன்னன் இராஜசிம்ம பல்லவனால் கட்டப்பட்ட கைலாயநாதர் கோயில்தான் கற்கோயில்களிலேயே மிகவும் பெரியதாக கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை இருந்தது. ஆதலின் அதற்கு பெரிய திருக்கற்றளி என்று பெயர் இருந்தது.

கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட சோழர்காலக் கோயில்கள் அதிக உயரமில்லாவிட்டாலும் கலை அழகு மிகுந்தவை. இவற்றில் பலவற்றின் அடிப்பகுதியில் (அதிட்டானத்தில்) இராமாயணம் மற்றும் சிவபுராணக் காட்சிகள் சிறுசிறு சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. இச்சிற்பங்கள் மிகச் சிறியவையாகக் காணப்பட்டப் போதிலும் ஒப்பற்ற கலைப்படைப்புகளாகும். இதுபோன்ற சிற்பங்களை, குடந்தைக் கீழ்க்கோட்டம், திருப்புறம்பியம் சிவன் கோயில், திருச்சின்னம்பூண்டிச் சடையார் கோயில், பசுபதி கோயில் என்னும் புள்ளமங்கை, நனிபள்ளி என்னும் புஞ்சை முதலிய கோயில்களில் காணலாம்.

இக்காலக் கோயில் விமானச் சுவர்களில் பல தேவகோட்டங்கள் அமைக்கப்பட்டு, அதில் எழிலார்ந்த தெய்வீகச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. முக்கியமாக வாயிலைக் காத்து நிற்கும்

துவாரபாலர் சிலைகள் மிகமிகச் சிறந்த வனப்புடையவை. பிக்ஷாடனர், நடராஜர், உமையொருபாகன், லிங்கோத்பவர், தக்ஷிணாமூர்த்தி, கொற்றவை முதலிய சிற்பங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

இக்காலக் கோயில்களில் ஒரு கோட்டத்தில் அகத்திய முனிவரின் சிற்பத்தைக் காணலாம். சில கோயில்களில் அரசன், மாதேவியர் முதலியோரின் உருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. குடந்தைக் கீழ்க்கோட்டம், ஸ்ரீநிவாசநல்லூர், திருவாரூர் அரநெறீச்சுரம் முதலிய கோயில்களில் இதுபோன்ற சிறந்த உருவச் சிலைகளைக் காணலாம். இவை தவிர கோயில் எடுப்பித்தவர் சிவலிங்கத்தைப் பூசிப்பதாகவும் பல கோயில்களில் உருவச் சிற்பங்களைக் காணலாம். முக்கியமாகச் செம்பியன் மாதேவியார் எடுப்பித்த கோயில்களில் அத்தேவியார் சிவபிரானை வழிபடுவது போன்றும், அத்தேவியாரின் கணவர் கண்டராதித்த சோழர் வழிபடுவது போன்றும் சிற்பங்கள் உள்ளன.

இக்காலக் கோயில்களில் தேவகோட்டங்களின் மேலே உள்ள மகரதோரணங்களும் மிகமிக அழகானவை. சிற்ப வேலைப்பாடுகள் சிறந்த அவற்றின் நடுவில் சிவபிரானின் பல்வேறு மூர்த்தங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இக்காலத்தில் சதுரம், எண்பட்டை, வட்டம் (முறையே நாகரம், திராவிடம், வேசரம்) ஆகிய மூன்று அமைதிகளிலும் சிகரங்கள் கட்டப்பட்டு விளங்குகின்றன. கழுத்தில் திசைக்காவலர்களின் சிற்பங்களோ பிற சிற்பங்களோ காணப்படுகின்றன. ஒரே திருச்சுற்றில் இரண்டு அல்லது மூன்று கோயில்கள் ஒரே உயரத்திற்குக் கட்டப்படுதலும் உண்டு.

### விஜயாலயன்

விஜயாலயன் முத்தரையரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றினான் என்று கண்டோம். அந்த வெற்றியின் நினைவாக அங்கு நிசும்பசூதனிக்கு ஒரு கோயில் எடுத்தான். ஆனால் அவன் எடுத்த அக்கோயில் இன்று தஞ்சையில் இல்லை. ஒரு சிற்பம் அவன் எடுத்த நிசும்பசூதனியின் சிலையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. புதுக்கோட்டைக்கு அருகில் நார்த்தாமலை என்ற குன்றில் ஒரு கோயில் உள்ளது. அது தமிழகக் கோயில்

அமைப்பிலேயே தனித்தன்மை வாய்ந்தது. இக்கோயில் இரண்டு சுவர்களைக் கொண்டது. வெளிச்சுவர் சதுர அமைப்பிலும், உட்சுவர் வட்டவடிவிலும் உள்ளன. விமானத்தின் மேல் தளங்கள் சதுரமும், வட்டமுமாக அமைந்துள்ளன. இக்கோயில் மழையினால் இடிந்து விழுந்துவிட்டது என்றும், மல்லன் விடுமன் என்பவன் இதைப் புதுப்பித்தான் என்றும் துவாரபாலர் சிலைக்கு அடியிலுள்ள ஒரு கல்வெட்டு கூறுகிறது. இக்கோயில் விஜயாலய சோழன் பெயரால் ஏற்பட்ட சிறந்த கோயிலாகும். திருத்தணிக்கு அருகில் விளக்கணாம்பூண்டி என்ற ஊரில் விசாலீச்சுரர் கோயில் என்று ஒரு கோயில் இருக்கிறது. அது அதிட்டானம் வரையில் கருங்கல்லாலும் மேல்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டதாகும். அக்கோயிலும் விஜயாலய சோழீச்சுரம் என்று கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. இதுவும் விஜயாலய சோழன் பெயரால் தோன்றிய கோயில் எனலாம்.

## ஆதித்தன்

விஜயாலய சோழனின் மகன் ஆதித்த சோழன் தொண்டைநாடு பாவிய இராஜகேசரி என்று பட்டம் கொண்டிருந்தான். அவன் சக்யாத்ரி மலையிலிருந்து கீழைக்கடல் வரையில் காவேரியின் இருமருங்கிலும் ஏராளமான கற்கோயில்களைக் கட்டினான் என்று அன்பில் செப்பேடுகள் கூறுகின்றன. ஆதித்த சோழன் கட்டிய பல கற்கோயில்கள் இன்னும் எஞ்சியுள்ளன. குடந்தைக் கீழ்க்கோட்டம், ஸ்ரீநிவாசநல்லூரில் உள்ள குரங்கநாதர் கோயில் முதலியன ஆதித்த சோழன் காலக் கோயில்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். திருப்புறம்பியத்தில் உள்ள கோயில் ஆதித்தேச்சுரம் என்று பெயர் பெற்றது.

## பழுவேட்டரையர்

ஆதித்த சோழன் காலத்தில் மற்றுமொரு சிறந்த மரபைக் காண்கிறோம். இம்மன்னனுக்கு உறுதுணையாக நின்ற சில குறுநில மன்னர்கள் தங்கள் தலைநகர்களில் கோயில்களை எழுப்பியுள்ளனர். பழுவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பழுவேட்டரையர்கள் தங்களது தலைநகரான பழுவூரில் கோயில் எடுப்பித்துள்ளனர். பழுவூர் இக்காலத்தில் மேலப்பழுவூர் என்றும் கீழப்பழுவூர் என்றும் இடைப்பட்ட பகுதி (கீழையூர்) என்றும் விளங்குகிறது. இம்மூன்று பகுதிகளிலும் பழுவேட்டரையர்கள் எடுத்த கோயில்கள் இருக்கின்றன.

கீழப்பழுவூரில் உள்ளது திருவாலந்துறை மகாதேவர் கோயில். மேலப்பழுவூரில் சுந்தரேச்சுவரர் கோயில் உள்ளது. இடைப்பகுதியில் அகத்தீச்சுரம் என்ற கோயில் உள்ளது. பழுவேட்டரையர்கள் காலத்தில் இம்மூன்று பகுதிகளும் ஒன்றாகவே விளங்கின. இது "மன்னு பெரும் பழுவூர்" எனப் பெயர் பெற்றுத் திகழ்ந்தது.

இவற்றுள் அகத்தீச்சுரம் என்று பெயர் பெற்ற கோயில் மிகவும் சிறந்தது. இது "அவனிகந்தர்ப்ப ஈச்சுரகிருஹம்" என்று கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. ஒரே திருச்சுற்றில் இரண்டு விமானங்கள் இங்கு கட்டப்பட்டுள்ளன. ஒன்று 'வடவாயில் ஸ்ரீகோயில்' என்றும், மற்றது 'தென்வாயில் ஸ்ரீகோயில்' என்றும் பெயர் பெற்றிருந்தன. இரண்டும் மேற்கு நோக்கிய கோயில்களாகும். இரண்டும் அடியிலிருந்து முடிவரை கருங்கல்லாலான கோயில்களாகும். ஒன்று சதுரமான சிகரமும், மற்றது வட்டமான சிகரமும் கொண்டுள்ளன. இவற்றில் அழகிய சிற்பங்கள் உள்ளன. கோபுரத்தை நோக்கியுள்ள கோயிலின் முன்மண்டபம் மிகவும் அழகு வாய்ந்தது.

## கொடும்பாளூர்

கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு இருக்கு வேளிர் என்ற குறுநிலத் தலைவர்கள் ஆண்டனர். அவர்கள் சோழர்களின் நெருங்கிய உறவினர்களாகவும், அவர்களுக்கு உறுதுணையாயும் வாழ்ந்தவர்கள். அவர்களில் விக்ரமகேசரியாகிய பூதி என்னும் மன்னன் தன் பெயரால் ஒரு கோயில் எடுப்பித்தான். இக்கோயிலுக்கு 'விக்ரமகேசரீச்சுரம்' என்று பெயர். இக்கோயிலில் மூன்று விமானங்கள் ஒரே திருச்சுற்றில் கட்டப்பட்டன. பூதி தன் பெயராலும், வரகுணா, கற்றளி என்ற தன் இரு மனைவியர் பெயராலும் இம்மூன்று விமானங்களையும் எழுப்பினான் எனக் கல்வெட்டு கூறுகிறது. இவற்றை 'விமானத்ரயம்' (மூன்று விமானங்கள்) என்று கல்வெட்டு கூறுகிறது. இக்கோயில்களே இப்பொழுது 'மூவர் கோயில்' என்று பெயர் பெற்று விளங்குகின்றன. இம்மூன்று விமானங்களில் ஒன்று இடிந்து போய்விட்டது. இரண்டு மட்டும் எஞ்சியுள்ளன. இவற்றில் அழகிய சிற்பங்கள் உள்ளன. மூன்று விமானங்களும் சதுரமான சிகரத்தைக் கொண்டிருந்தன.

## பராந்தகன்

ஆதித்த சோழனின் மகன் மதுரை கொண்ட பரகேசரி என்று பெயர் பெற்ற பராந்தக சோழன் காலத்திலும் பல கற்கோயில்கள் கட்டப்பட்டன. இவை ஆதித்த சோழன் கால மரபைப் பின்பற்றியே கட்டப்பட்டு விளங்குகின்றன. காளஹஸ்திக்கு அருகில் தொண்டைமாநாடு என்ற இடத்தில் ஆதித்த சோழன் இறந்தான். அங்கு அவனுக்கு பராந்தகன் ஒரு பள்ளிப்படை நிறுவினான். பராந்தகன் காலக் கோயில்களில் பசுபதி கோயில் என்று பெயர் வழங்கும் புள்ளமங்கை சிவாலயம் மிகவும் எழில் வாய்ந்தது. திருவாவடுதுறை, திருவாமாத்தூர், நங்கவரம், திருமால்புரம், எறும்பூர், காட்டுமன்னார்குடி முதலிய ஊர்களில் உள்ள கோயில்கள் பராந்தகன் காலத்தவையாகும்.

பராந்தக சோழனுக்குப் பிறகு கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன், உத்தமசோழன் முதலியோர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களும் ஆதித்த சோழன் கால மரபைப் பின்பற்றியே கட்டப்பட்டன.

## செம்பியன் மாதேவி

இக்காலக் கோயில்களைக் குறிக்கும்போது கண்டராதித்த சோழனின் தேவியார், உத்தமசோழனின் தாயார், செம்பியன் மாதேவியாரைச் சிறப்பாகக் குறிக்க வேண்டும். தம் வாழ்நாள் முழுவதும் பாடல் பெற்ற பல தலங்களைக் கற்றளியாக மாற்றி அமைப்பதிலும், கோயில்களுக்கு ஏராளமான பொருள்களை வாரி அளிப்பதிலுமே செலவழித்தார். வடக்கே காஞ்சிபுரம் பகுதியில் இருந்து தெற்கே நாகப்பட்டினம் வரையில், இவ்வம்மையார் கோயில் களுக்குப் பல பொருட்கள் கொடுத்ததைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவ்வம்மையார் எடுப்பித்த கோயில்கள் செம்பியன் மாதேவி, கோனேரிராஜபுரம், ஆடுதுறை, திருக்கோடிகாவல், குற்றாலம், திருநறையூர். கண்டராதித்தம், விருத்தாசலம், திருவெண்ணைநல்லூர் முதலிய இடங்களில் உள்ளன. கோனேரி ராஜபுரம் என்பது முன்பு திருநல்லம் என்று பெயர்பெற்ற தலமாகும். இங்கு செம்பியன்மாதேவியார் தம் கணவரான கண்டராதித்த தேவரின் நினைவாக ஒரு பள்ளிப்படை எடுப்பித்தார். இக்கோயிலில் கண்டராதித்த சோழர் சிவபிரானை வழிபடுவதாக ஒரு சிற்பம்

உள்ளது. செம்பியன்மாதேவியார் தன் பெயரால் செம்பியன்மாதேவி என்று ஓர் ஊரை அமைத்து அங்கு ஒரு கோயிலை எழுப்பியுள்ளார். இவ்வம்மையார் எடுப்பித்த கோயில்களில் சிற்பங்கள் சிறந்து காணப்படுகின்றன.

## இராஜராஜன்

இராஜராஜன் காலம் வரையில் கோயில்கள் மிகவும் சிறிய அளவில் கட்டப்பட்டன என்று கண்டோம். கற்கோயிலாகக் கட்டப்பட்டவை சுமார் முப்பது அடி உயரமே கட்டப்பட்டன. சில கோயில்களின் விமானங்கள் பிரஸ்தரத்துக்கு மேல் செங்கல்லாலும் கட்டப்பட்டன. மேல்தளங்கள் செங்கல்லால் கட்டப்பட்ட கோயில்கள் சற்று அதிக உயரம் கட்டப்பட்ட போதிலும் நாற்பது அடிக்கு மேல் எந்தக் கோயிலும் கட்டப்படவில்லை. இராஜராஜன் அரியணை ஏறிய பின்னரும் இதுபோன்று எளிய, அதிக உயரம் அற்ற கோயில்கள் பல இடங்களில் கட்டப்பட்டன.

இராஜராஜன் தமிழகத்தை ஆண்ட ஒப்பற்ற பெருமன்னன். அவனது ஆற்றலுக்கும், அறிவுக்கும், திறனுக்கும், அன்புக்கும் ஈடு இணையே இல்லை. அவனுக்கு அருள்மொழி என்றே இயற்பெயர். தமிழகத்தை ஆண்ட மன்னர்களிலேயே தலையாய மன்னன் அவனே. சுருங்கச்சொன்னால் இந்தியாவிலேயே அன்று ஆண்ட மன்னர்களில் அவனை ஒப்பவர் யாரும் இல்லை. அவனது ஆற்றலையும், திறனையும், பக்திப்பெருக்கையும் பிரதிபலிக்கும் வகையில் அவன் எடுப்பித்ததுதான் தஞ்சைப் பெருங்கோயில். அதைத் தென்திசை மேருவெனத் தோற்றுவித்தான் என்று அவனது கல்வெட்டுகளில் இருந்து அறிகிறோம்.

சுற்றுவட்டாரங்கள் எங்கும் கல் என்பதே இல்லாத தஞ்சையில் கருங்கல்லைக் கொண்டே 200 அடி உயரத்திற்கு விண்ணிழி விமானமாகத் தோற்றுவித்து அதற்கு இராஜராஜேச்சுரம் எனப் பெயரளித்து மகிழ்ந்தான். அவனது ஆணையை மேற்கொண்டு திருச்சுற்றையும் கோபுரத்தையும் அமைத்தான் அவனது சேனாதிபதி கிருஷ்ணன் இராமன் என்னும் மும்முடி சோழ பிரம்மாராயன். ஏராளமான சிற்பங்களும், எண்ணிறந்த செப்புத் திருமேனிகளும், எழில் ஓவியங்களும் நிறைந்த இக்கோயில் அன்றைய இந்தியாவிலேயே மிகப்பெரியதாக, உயர்ந்ததாக எடுக்கப்பட்ட கோயில் ஆகும்.

உட்சுவர், புறச்சுவர் என இரு சுவர்களின் மேல் விமானம் எழுப்பப்பட்டுள்ளது. இடைப்பகுதியில்தான் வண்ண ஓவியங்களும், சிவபிரான் புரிந்ததாகச் சித்திரிக்கப்பட்டுள்ள 108 நாட்டியக் கரணங்களும் உள்ளன. புறச்சுவரில் சிவபிரானின் பல்வேறு உருவங்கள் பிற தெய்வ உருவங்களுடன் காணப்படுகின்றன. விமானத்தின் முன்னர் பெரும் மண்டபம், இடையில் இருமருங்கும் செல்ல வழியும், படியும், வழியைக் காத்து நிற்கும் துவாரபாலகர் சிலைகளும் உள்ளன. மண்டபத்தின் புறச்சுவரிலும் பல்வேறு உருவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

விமானத்தின் உயரத்திற்கும் அமைப்பிற்கும் ஏற்ற அகன்ற பரந்த திருச்சுற்று, திருச்சுற்றைச் சூழ்ந்து வரும் திருச்சுற்று மாளிகை. இம்மாளிகையில் உரிய திக்குகளில் திசைக் காவலர்களுக்குச் சிற்றாலயங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

## இராஜேந்திர சோழன்

தஞ்சையில் இராஜராஜன் தோற்றுவித்த மாபெருங்கோயிலைப் போலவே இவன் மகன் இராஜேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் கோயிலைத் தோற்றுவித்தான். இது தஞ்சைக் கோயிலை விடச் சற்று உயரம் குறைந்தது எனினும் கட்டட அமைப்பில், நுணுக்கத்தில் மிகமிகச் சிறந்தது. பல்வேறு அங்கங்களை இணைத்துப் புதுமை மிக்கதாய்க் கட்டப்பட்டுள்ளது இக்கோயில். இக்கோயிலில் கட்டட நுணுக்கத்தைப் போல சிற்பங்களும் மிகச் சிறப்பாக விளங்குகின்றன. கங்கைகொண்டசோழபுரத்திலும் விமானமே மிகவும் உயர்ந்ததாக விளங்குகிறது. இதன் முன்னர் இருந்த மஹாமண்டபத்தின் பெரும்பகுதி இடிந்து போய் அதன் கற்கள் கீழணை கட்ட எடுத்துச் செல்லப்பட்டன. இப்போதுள்ள மண்டபம் பின்னர் சீர் செய்யப்பட்டது. இக்கோயிலைச் சுற்றி இரண்டு நிலைகளை கொண்ட திருச்சுற்று இருந்தது. அதன் ஒரு பகுதியே இப்போது எஞ்சியுள்ளது. கோயிலுக்கு முன் நின்ற கோபுரத்தின் ஒரு பகுதியே எஞ்சியுள்ளது.

கங்கைகொண்ட சோழீச்சுரத்தின் விமானத்தில் தெய்வீக உருவங்கள் மிகவும் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. தஞ்சை விமானத்தைக் காட்டிலும் சற்று மாறுபட்ட அமைப்பை உடைய விமானம் கீழ் நிலையில் சதுரமாகவும், மேல் நிலைகள் எண்பட்டை

யாகவும், சிகரம் வட்டமாகவும் அமைக்கப்பட்ட அழகிய விமானமாகும். இங்குள்ள சிவலிங்கம் மிகவும் பெரியது. பெருஉடையார் என்ற பெயருக்கு ஏற்ப அமைந்துள்ளது.

இராஜேந்திர சோழன் காலத்தில் கட்டப்பட்ட பிற கோயில்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றில் திருவொற்றியூர், கூழம்பந்தல் முதலிய இடங்களில் உள்ள கோயில்கள் புகழ் பெற்றவை.

இராஜேந்திர சோழனுக்குப் பின்னர் வந்த சோழ மன்னர்கள் காலத்திலும் பல கற்கோயில்கள் கட்டப்பட்டன. முக்கியமாக முதற் குலோத்துங்கன் காலத்தில் பல கற்கோயில்கள் எடுக்கப்பட்டன. அவற்றில் மேலக்கடம்பூர் என்னுமிடத்தில் உள்ள ஒரு கோயில் வனப்பு உடையது. அது ஒரு தேர் போன்ற அமைப்புடன் காணப்படுகிறது. சக்கரங்கள் மீது நிற்கும் ஒரு தேரைக் குதிரைகள் இழுத்துச் செல்வது போல் அது அமைந்துள்ளது.

சோழர் காலப் பெருங்கோயில்களில் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள தாராசுரம் கோயிலும் மிகச்சிறந்தது. இக்கோயிலை இரண்டாம் இராஜராஜ சோழன் எடுப்பித்தான். இக்கோயிலும் இதன் மண்டபமும் திருச்சுற்றும், பலிபீடமும் மிகமிக எழில் வாய்ந்தவை. இங்கும் விமானம் ஓங்கி வளர்ந்து காணப்படுகிறது.

சோழர் காலக் கோயில்களில் மிகவும் உயர்ந்ததாகவும் சிறந்ததாகவும் கட்டப்பட்ட கடைசிக் கோயில் திரிபுவனத்தில் இருக்கும் திரிபுவனவீரேச்சுரமாகும். இதை திரிபுவன வீரன் என்னும் பெயர் பெற்ற மூன்றாம் குலோத்துங்க சோழன் கட்டினான். இது தஞ்சாவூரையும் கங்கை கொண்ட சோழபுரத்தையும் விட உயரத்தில் குறைந்தது. தஞ்சைக் கோயிலைப் போன்ற அமைப்புடையது.

சோழர் காலத்திற்குப் பின்னர், கோயிற்கட்டட அமைப்பில் புதிய திருப்பம் ஏற்பட்டது. சிறப்பாக இதுகாறும் கோயில்களில் கருவறையின் மேல் நின்ற பகுதியான ஸ்ரீவிமானமே மிகவும் உயர்ந்ததாகக் கட்டப்பட்டது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலிருந்து கோபுரங்கள் தனிச்சிறப்பைப் பெற்றன. ஆதலின் கோபுரங்களின் வளர்ச்சியை வரும் கட்டுரையில் காணலாம்.

◈♦◈

# தமிழ்நாட்டுக் கோபுரங்கள்

தமிழ்நாட்டில் கோயில் என்றாலே கோபுரங்கள்தான் நம் கண் முன்னே நிற்கும். பெரும்பாலோர் கோயில் என்றாலே கோபுரத்தைத்தான் கொள்வர். அந்த அளவுக்குத் தமிழகமெங்கும் கோயில்கள்தோறும் வானளாவ ஓங்கி நிற்கும் வகையில் கோபுரங்கள் எடுக்கப்பட்டுள்ளன. வேறு எந்நாட்டிலும் இல்லாத அளவுக்குத் தமிழகம் எங்கும் தெய்வீகச் சூழ்நிலை நிரம்பியதாக்கி இக்கோபுரங்கள் விளங்குகின்றன. 'கோபுரம்' என்னும் சொல்லே தமிழகத்தின் தனிச்சொல் என்பர்.

கோபுரம் என்பது கோயிலின் வாயிலை அலங்கரித்து நிற்கும் கட்டட அமைப்பாகும். இது பண்டைய காலத்தில் இவ்வளவு சிறப்பாக இல்லை. தமிழகத்தில் கட்டடப்பகுதிகள் பல்லவர் காலத்திலிருந்து தான் காணக்கிடைக்கின்றன எனக் கண்டோம். மிகவும் தொன்மையான கோபுரம் எனக் குறிப்பிடத்தக்கது கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட பல்லவ மன்னன் இராஜசிம்மன் எடுத்த கோயில்களில்தான் காணப்படுகின்றன. மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலிலும், காஞ்சி கைலாயநாதர் கோயிலிலும் இவற்றைக் காண்கிறோம். இவ்விரு கோயில்களிலும் கோபுரங்கள் மிகச் சிறியவையாக உள்ளன. கருவறையை அலங்கரிக்கும் விமானம் மிகவும் உயரமாக இருக்க, கோபுரம் மிகமிகச் சிறிதாக உள்ளதைக் காண்கிறோம். வாயில் நிலைக்கு மேல் ஒரு சிறிய சாலை வடிவு மட்டும் காணப்படுகிறது. இவற்றை "துவார சாலை" என்றே குறிப்பர்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் உத்தரமேரூர் என்ற இடத்தில் ஒன்றின் மேல் ஒன்றாக மூன்று கர்ப்பக்ருஹத்தை உடைய திருமால் கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் ஒவ்வொரு கருவறைக்கும் எதிரில் ஒரு சிறு கோபுர அமைப்புக் காணப்படுகிறது. இதற்குப் பின்னர் பல்லவர் காலக் கோபுரம் என்று கூறும் அளவுக்கு குறிப்பிடத்தக்கது ஏதும் எஞ்சவில்லை.

சோழர் காலத் தொடக்கத்தில் கோபுரங்கள், விமானங்களை விடச் சிறியவையாகவே கட்டப்பட்டன. எஞ்சியுள்ள சில கோபுரங்களின் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும், மேற்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டு விளங்குகின்றன. இவற்றில் ஒருசிலவாகிலும் முழுமையும் கல்லால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். மேற்பகுதி பழுதடைந்த காரணத்தாலும், பிற்காலத்தில் கோபுரங்கள் உயர எழுப்பப்பட வேண்டும் என்ற காரணத்தாலும் மேலே செங்கற்களைக் கொண்டு கட்டியுள்ளனர் போலும். மேலப்பழுவூர், கீழப்பழுவூர் முதலிய ஊர்களில் இக்காலக் கோபுரங்களைக் காணலாம். இவற்றின் வாயிலில் வாயிற் காவலர் சிலைகளைக் காண்கிறோம்.

இராஜராஜ சோழன் தஞ்சையில் பெருங்கோயிலை எடுத்த போது ஒரு புதிய மரபைத் தோற்றுவித்துள்ளதைக் காண்கிறோம். இராஜராஜன் காலத்திலும் விமானம் மிகவும் உயரமாகவே கட்டப்பட்டது. இருப்பினும் விமானத்தின் முன்னர் இரண்டு கோபுரங்கள் கட்டப்பட்டன. வெளியில் உள்ளது உயரமாகவும் உள்ளே உள்ளது உயரம் குறைவாகவும் கட்டப்பட்டுள்ளது. இராஜராஜேச்சுரத்தில் இரு கோபுரங்களும் திருவாயில் எனப் பெயர் பெற்றிருந்தன. ஒன்று 'கேரளாந்தகன் திருவாயில்' எனவும் மற்றது 'இராஜராஜன் திருவாயில்' எனவும் பெயர் பெற்றிருந்தன.

விமானத்தின் முன்னர் இரு கோபுரங்கள் எடுப்பது சோழர் கால இறுதிவரை தொடர்ந்து வந்தது. கங்கைகொண்டசோழபுரத்தில் விமானத்தின் முன்புறம் ஒரு கோபுரம் மட்டும் எஞ்சியுள்ளது. அதிலும் ஒரு பகுதியே தற்போது எஞ்சியுள்ளது. தாராசுரத்தில் விமானத்தின் முன்னர் இரண்டு கோபுரங்கள் உள்ளன. கடைசியாக இவ்வாறு இரு கோபுரங்கள் திரிபுவனத்தில் மூன்றாம் குலோத்துங்கனால் எடுக்கப்பட்டன. இங்கும் கோபுரங்களின் அமைப்பு தஞ்சையைப் போலவே உள்ளதைக் காண்கிறோம்.

சற்றேறக்குறைய இதே காலத்தில் அதாவது இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து கோயிலின் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப்பெறும் மரபு தொடங்கியது. தில்லையில் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் 12, 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டன. இக்கோபுரங்களின் கீழ்ப்பகுதிகள் கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டன. இவை ஏழு நிலைகள் உடையவையாகக் கட்டப்பட்டன. ஆதலின் இவை

திருநிலை ஏழு கோபுரம் (எழுநிலைக்கோபுரம்) எனப் பெயர் பெற்றன. இக்கோபுரங்கள் சுமார் 100 அடி உயரம்தான் எழுப்பப்பட்டன. அடிப்பகுதி பரந்து கட்டப்பட்டது.

இவ்வாறு எழுப்பப்பட்ட கோபுரங்களில் சில புதிய அமைப்புகளைக் காண்கிறோம். கல்லால் கட்டப்பட்ட கீழ்ப்பகுதி இரு பிரிவுகளாகக் காணப்படுகிறது. இவற்றில் கீழ்ப்பகுதியில் பல பரிவார தெய்வங்களின் உருவங்களும் மேற்பகுதியில் முக்கிய தெய்வத்தின் பல தோற்றங்களும் சிற்பங்களாக இடம்பெற்றுள்ளன. அவற்றின்கீழ் சில கோபுரங்களில் அத்தெய்வங்களின் பெயர்கள் பொறித்து வைக்கப்பட்டுள்ளன. தில்லையில் கீழை மற்றும் மேலைக்கோபுரம், தாராசுரத்தில் வெளிக்கோபுரம் ஆகியவற்றில் அத்தெய்வங்களின் பெயர்கள் பொறித்து வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மேலும் நுழைவாயிலின் இருமருங்கும் உள்ள நிலைக்கால்களில் பரதநாட்டியத்தில் உள்ள 108 கரணங்கள் சிற்பங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. தில்லையில் கீழைக் கோபுரத்திலும் மேலைக்கோபுரத்திலும் நாட்டியக் கரணங்கள் சிற்பமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பரத மாமுனியின் நாட்டிய நன்னூலில் உள்ள அந்தந்த கரணத்தைக் குறிக்கும் செய்யுட்கள், கல்வெட்டாகக் கீழே பொறிக்கப்பட்டுள்ளன. பொதுவாக இக்கோபுரங்களின் மேற்பகுதியில் சுதை உருவங்கள் அதிகம் இல்லை.

சோழர் காலத்திற்குப் பிறகு தமிழகத்தை விஜயநகரப் பேரரசர்கள் ஆண்டனர் அவர்கள் புகழ்வாய்ந்த கோயில்கள் அனைத்திலும் மிகவுயர்ந்த கோபுரங்களை எழுப்பினர். ஏற்கனவே இருந்த திருச்சுற்றுகளுடன் பெரும் திருச்சுற்றுகளை எடுத்து அவற்றின் வாயிலை அலங்கரிக்க வானளாவும் கோபுரங்களை எழுப்ப ஆரம்பித்தனர். காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் இதுபோன்ற உயர்ந்த கோபுரங்கள் எடுக்கப்பட்டன. 150 அடி உயரத்திற்கு மேல் இக்கோபுரங்கள் எடுக்கப்பட்டன. இக்காலக் கோபுரங்கள் அனைத்துமே கீழ்நிலை கல்லாலும் மேல் நிலை செங்கல்லாலும் எடுக்கப்பட்டன. மேல்நிலையில் சுதை உருவங்கள் அதிகம் இல்லை.

விஜயநகர மன்னர்களில் மிகச்சிறந்த உயர்ந்த கோபுரங்களை எடுத்தவர் கிருஷ்ணதேவராயர் ஆவார். அவரே காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை முதலிய இடங்களில் 180 அடி உயரத்திற்கு மேல்

கோபுரங்களை எழுப்பியுள்ளார். அவர் காலத்தில் கோபுரப் பணி மிகவும் சிறந்திருந்தது. ஆதலின், அவர் எடுத்த கோபுரங்களை 'ராயர் கோபுரம்' என்று மக்கள் அழைக்கத் தலைப்பட்டனர். சில இடங்களில் மிகவும் பெரிய கோபுரம் எடுக்க அடிப்பகுதியைக் கல்லால் எடுத்திருக்கிறார். அதற்குள் அவர் காலம் முடிவடைந்துவிடவே பணி மேற்கொண்டு நடக்கவில்லை. இவ்வாறு பாதியில் நின்று போன கோபுரங்களையும் மக்கள் ராயர் கோபுரம் என்று அழைக்கலாயினர். பொதுவாக விஜயநகர மன்னர்கள் காலத்தை கோபுரக் காலம் என்றே கூறலாம்.

விஜயநகர மன்னர்களின் பிரதிநிதிகளாக வந்த நாயக்க மன்னர்களும் உயர்ந்த கோபுரங்களை எழுப்பியுள்ளனர். மதுரையில் திருமலை மன்னன் ஒப்பற்ற கோபுரத்தை எடுத்தான். அதில் ஆயிரக்கணக்கான சுதை உருவங்களை வைத்து அலங்கரித்தான். திருமலை மன்னன் மதுரையில் திருப்பணி செய்ததை மதுரைத் திருப்பணிமாலை மிக அழகாகச் சித்தரிக்கிறது.

*உரக்க வெகு ரொக்கங் குடுத்துப் படங்குதூ*
*ணுத்திர முதற் பழங்கல்*
*ஒடிந்தன பிடுங்கி நலமாயமைந்துக் காரை*
*யோடு சீரண மகற்றி*
*அரைத்த சுண்ணாம்பை வெல்லச்சாறு விட்டுநன்*
*றாய் குழைத்துச் செங்கலும்*
*அடுக்காப் பரப்பிக் கடுக்காயோ டாமலக*
*மரிய தான்றிக் காயுழுந்*
*தொருக்காலிருக் காலிடித்து நன்னீரினி*
*லூறிய கடுஞ்சாறும் விட்*
*டுழி காலங்களினு மசையாத வச்சிரக்*
*காரையிட் டோங்கு மம்மை*
*சிரக்காலம் வாழவே மீனாட்சி கோயிலுஞ்*
*செப்பமிடு வித்து நன்றாய்ச்*
*செய்வித்த புண்ணியஞ் சதகோடி புண்ணியஞ்*
*திருமலை மகீபனுக்கே*

◈♦◈

# தமிழ்நாட்டுச் சிற்பங்கள்

தமிழ்நாட்டில் சிற்பக்கலை தொன்றுதொட்டுச் சிறந்த நிலை வகித்து வந்துள்ளது. மண்ணாலும், மரத்தாலும், தந்தத்தாலும், சுதையாலும், செம்பு முதலிய உலோகங்களாலும், கல்லாலும் செய்யப்பட்ட சிற்பங்கள் ஏராளம் உள்ளன. சங்ககாலத்தில் நிகழ்ந்த சிற்பக்கலையைப் பற்றிச் சங்ககாலக் கலை என்ற பகுதியில் காணலாம்.

## மண் சிற்பங்கள்

மண்ணாலான சிற்பங்கள் தமிழகத்தில் பழங்காலத்தில் மிகவும் போற்றப்பட்டு வந்தது. மண்ணையிட்டு செய்யப்பட்டவை ஆதலின் அவற்றிற்கு 'மண்ணீடு' என்ற பெயர் உண்டு. மண்ணீட்டில் அழகிய சிற்பங்களைச் செய்பவர்களை 'மண்ணீட்டாளர்' என்று நம் இலக்கியங்கள் கூறும். மண்ணீடு என்று கூறும்போது களிமண்ணால் பாவை செய்து தீயிலிட்டுச் சுடப்பட்டதையும் மண்பொம்மை என்றே கூறுவர். தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த காவிரிப்பூம்பட்டினம், உறையூர், காஞ்சி, அரிக்கமேடு, கொற்கை ஆகிய இடங்களில் நடந்த அகழாய்வுகளில் பண்டைய சுடுமண் பாவைகள் கிடைத்துள்ளன. இவற்றின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும் இவற்றின் அழகு போற்றத்தகுந்ததாக உள்ளது.

இதற்குப் பின்னர் பல்லவர் காலத்தவை அல்லது சோழர் காலத்தவை என்று குறிக்கத்தக்க மண்பாவைகள் ஏதும் கிடைக்க வில்லை. மதுரை வீரன், வேடியப்பன், சுடலைமாடன் முதலிய ஊர்த்தெய்வங்களின் கோயில்களில் உயரமாகவும் எழிலாகவும் அமைக்கப்பட்ட மண்ணாலான குதிரை, யானைகளின் உருவங்களும் தமிழகத்தில் ஏராளம் உண்டு. இவற்றின் காலத்தைக் கணிக்க முடியாவிட்டாலும் இவற்றின் அழகைப் போற்றாமல் இருக்கமுடியாது. இக்கலை தொடர்ந்து வந்திருக்கிறது என்பதற்கும் இவை எடுத்துக்காட்டு. இந்திய நாட்டில் வேறெங்கும் இல்லாத அளவுக்குத்

தமிழகத்தில் மண்பொம்மைக்கென்றே நவராத்திரிதோறும் தனிவிழா நடத்துகிறோம். இதில் ஏராளமான சுடுமண் பாவைகள் இடம்பெறுவது அனைவரும் அறிந்ததே.

## சுதையாலான உருவங்கள் (Stucco)

மண்ணாலான சிற்பங்களைப் போலவே சுதையால் ஆன சிற்பங்களும் ஏராளம் தமிழகத்தில் உண்டு. சுண்ணாம்பை நன்கு அரைத்துக் கரும்புச்சாறு, வெல்லச்சாறு. நெல்லிக்கனியின் சாறு முதலியவற்றை ஊற்றி அரைத்து வஜ்ஜிரம் போல் செய்து அவற்றைக் கொண்டு உருவங்கள் செய்வது பண்டைய மரபு. உருவங்களைச் செய்வதற்கு ஏதுவாக உள்ளே வலிய மரத்தாலான முளை ஒன்று வைக்கப்பட்டு செங்கல் கம்பிகள் முதலியவற்றையும் பொருத்தி, சுண்ணாம்புச் சாற்றைப் பூசி, மேலே சுதை பூசி (சுண்ணாம்புச் சாந்து) உருவங்கள் அமைக்கப்படும். இவற்றையே சுதையாலான உருவங்கள் என்கிறோம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த அகழாய்வில் சில சுதை உருவங்கள் கிடைத்துள்ளன. பல்லவர் காலத்தில் செங்கல்லால் எழுப்பப்பட்ட கோயில்களில் சுதை உருவங்கள் ஏராளம் செய்து வைக்கப்பட்டன. திருவதிகைப் பெருங்கோயிலின் அடிப்பகுதி கருங்கல்லாலும், கருவறையின் சுவர்கள் செங்கல்லாலும் கட்டப்பட்டு விளங்குகின்றன. இவற்றின் வெளிப்புறங்கள் அனைத்தும் அழகிய சுதை உருவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் பல்லவர் காலத்தில் கட்டப்பட்டது. நிருபதுங்கவர்மன் காலத்தில் புதுப்பிக்கப் பட்டது என்று அங்குள்ள கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். இந்த மரபு பண்டைய மரபு என்பது தெளிவாகிறது. செங்கல்லால் சுவர்களை எழுப்பிட அவற்றின் புறங்களில் சுதையால் உருவம் செய்து அவற்றிற்கு வண்ணம் பூசுதல் அக்காலத்தில் சிறந்த கலையாக இருந்திருக்கவேண்டும். இதே கலையைப் பின்பற்றிப் பல்லவ மன்னர்கள் கோயில்களை எழுப்பியிருக்கிறார்கள்.

திருவதிகையில் காணப்படும் சுதை உருவங்களுக்குப் பிறகும் இக்கலை தொடர்ந்து வந்திருக்க வேண்டும். ஆயினும் காலத்தை அறுதியிட்டுக் கூறும் சுதை உருவங்கள் ஏதும் இல்லை. விஜயநகரப் பேரரசர்கள் உயர்ந்த கோபுரங்களை எடுக்கத் தலைப்பட்டபோது அவற்றில் அவர்களுக்குப் பின்வந்த நாயக்க மன்னர்களே

கோபுரங்களின் மேல் நிலைகளில் ஆயிரக்கணக்கான சுதை உருவங்களை வைத்து அலங்கரித்தவர்கள் ஆவர். மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் விளங்கும் கோபுரங்கள் சிலவற்றில் ஏராளமான சுதை உருவங்கள் திருமலை மன்னன் காலத்தில் வைக்கப்பட்டன. இவ்வெழிலார்ந்த சுதை உருவங்கள் அண்மையில் புதுப்பிக்கப்பட்டதால் அப்பண்டைய சுதை உருவங்களை நாம் இனி கண்டு மகிழ முடியாது.

## கற்சிற்பங்கள்

தமிழகத்தில் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கல்லாலான சிற்பங்கள் ஏதும் இதுகாறும் கிடைக்கவில்லை. ஒரு சில நடுகற்கள் கி.பி. 5, 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் கருதப்படுகின்றன. அவற்றில் இறந்துபட்ட வீரனின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றையே பண்டைய சிற்பங்களாகக் கூறலாம். இதற்கடுத்துப் பல்லவர் காலத்திலிருந்துதான் கற்சிற்பங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. பல்லவர்காலச் சிற்பங்கள் இரு வகைப்படும். பாறைகளிலேயே செதுக்கப்பட்ட சிற்பங்கள் என்றும், கட்டடங்களை அழகு செய்யும் சிற்பங்கள் என்றும் இரு வகைப்படும். இவற்றில் பாறையைச் செதுக்கிக் குடைவரைக் கோயில்களாகவும், ஒற்றைக் கற்கோயில்களாகவும் அமைந்தவற்றில் பாறைச் சிற்பங்களைக் காண்கிறோம். இவற்றில் பெரும்பாலானவை மாமல்லபுரத்தில் இருக்கின்றன. மாமல்லபுரத்திற்கும் முற்பட்ட குடைவரைக் கோயில்கள் மகேந்திரவர்மனால் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவற்றில் வாயிற் காவலர்களின் சிலைகள் மிகவும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. திருச்சியில் மலையின் மேலுள்ள குடைவரைக் கோயிலில் கங்கைவார் சடைகரந்தாராகக் காணப்படும் சிவபெருமானின் சிற்பம் போற்றத்தகு எழிலும் சிறப்பும் வாய்ந்தது.

பல்லவர் காலப் பெரும் படைப்புகள் என்று உலகத்தாரால் போற்றப்பட்டவை மாமல்லபுரத்துச் சிற்பங்களாகும். இவற்றில் குடைவரைக் கோயில்களிலும், இரதக் கோயில்களிலும், பாறை களிலும், கட்டடக் கோயில்களிலும் சிற்பங்கள் உள்ளன. மாமல்ல புரத்தில் குடைவரைக் கோயில்களில் மகிஷமர்த்தினி குகை, ஆதிவராகர் குகை, வராகர் குகை, மும்மூர்த்தி குகை ஆகிய

குகைக் கோயில்களில் எழிலார்ந்த சிற்பங்கள் உள்ளன. இவை அனைத்திலும் மகிஷமர்த்தினி குகையில் உள்ள இரு சிற்பங்கள் பல்லவர்களின் ஒப்பரும் படைப்புகளாகும். ஒரு புறத்தே சீறிப்பாயும் சிங்கத்தின் மீதமர்ந்து கையிலே வாள்பிடித்து கணங்கள் சூழ ஆணவமே உருக்கொண்ட மகிஷாசுரனைப் பாய்ந்து வீழ்த்துகின்ற பாவையாகக் கொற்றவை காண்பிக்கப்பட்டுள்ளாள். இச்சிற்பம் அசையாத கல்லிலே ஆரவாரம் நிறைந்த போரின் சீற்றத்தை அப்படியே சித்தரிக்கிறது. இதற்கு எதிரில் சீற்றத்திற்கு நேர்மாற்றமாக அமைதியே உருவாக ஆழ்கடலில் அரவணையில் படுத்துறங்கும் அம்மானின் தோற்றமாக மற்றொரு அற்புதப் படைப்பு உண்டு.

*"கள்வா! கடல் மல்லைக் கிடந்த கரும்பே!*
*வள்ளால் உந்தனை எங்ஙனம் நான் மறக்கேனே"*

எனத் திருமங்கை மன்னன் உருகிப் பாடிய கடல்மல்லைக் கிடந்த கரும்பின் உருவம் இது. இவ்விரு சிற்பங்களும் பக்கச்சுவர்களை அலங்கரிக்க, நடுவில் கருவறையை அலங்கரிக்கும் பெருமானாக அன்னையோடு அமர்ந்த அப்பனாக அன்னையின் தொடைமீதமர்ந்து விளையாடும் குமரப் பெருமானை உடன்கொண்டவராக, சோமாஸ்கந்த மூர்த்தியாக விளங்குகின்ற சிவபெருமானின் தோற்றமும் அற்புதப் படைப்பே.

இதற்கு அருகிலுள்ள ஏனப்பெருமானின் குகையிலும் பல ஒப்பரும் சிற்பங்கள் உள்ளன. இதை ஆதிவராகர் குகை என்று கூறுகிறார்கள். இதன் கர்ப்பகிருஹத்தில் ஆதி முன் ஏனப்பெருமானாக விளங்கிய பன்றி முகத்தோன் சிலை உள்ளது. அருகில் உள்ள சுவர்களில் திருமகள், கொற்றவை, நான்முகன், கங்காதரர் முதலிய சிற்பங்கள் உள்ளன. தெய்வீகத் திருவுருவங்களைத் தவிர இங்கு இரண்டு மன்னர்களுடைய உருவங்களும், எழிலே உருவாய் அவர்களது அருகில் நிற்கின்ற தேவியர் உருவங்களும் உள்ளன. வராகர் குகை என்ற பெயர் பெற்ற குகையிலும் "அந்தரம் ஏழினோடு செல உய்த்த பாதம்" உடையாரான திரிவிக்கிரம மூர்த்தியின் உருவும், ஆழ்கடல் புகுந்து நிலமங்கையை எடுத்த வராக மூர்த்தியின் உருவமும், கொற்றவை, திருமகளின் சிற்பங்களும் உலகப் புகழ் வாய்ந்தவை. இதேபோன்று மும்மூர்த்தி குகைகளிலுள்ள சிற்பங்களும் அழகுற வடிக்கப்பட்டவை.

இங்கு இரதங்கள் என்று கூறப்படும் கற்கோயில்களின் புறத்தே பல சிற்பங்கள் கவின்பெற அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் அர்ஜுன இரதம் என்னும் கோயிலிலும், தர்மராஜ இரதம் என்னும் கோயிலிலும் உள்ள சிற்பங்கள் மிகச் சிறந்தவை. அர்ஜுன இரதத்தில் கிழக்குச் சுவரிலும், தெற்குச் சுவரிலும் உள்ள பெண்களின் உருவங்கள் பல்லவர் காலப் பெண்கள் எவ்வளவு எழில் மிக்கவர் களாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்பதற்குச் சான்றுகள். இடை மெலிந்து கொடிகள் போல் காட்சியளிக்கும் இப்பூங்கொடிகளின் எழில் பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்தும் உருவங்களாகும். தர்மராஜ இரதத்தின் மேல் இரு நிலைகளிலும் உள்ள தெய்வத் திருவுருவங்களின் அமைதியும் முகத்திலே தோன்றும் பொலிவும் பல்லவச் சிற்பிகளின் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டுகள்.

அகன்ற பாறையில் இயற்கையாக அமைந்த இடைவெளியை வானத்திலிருந்து விழும் கங்கையாறாகக் கற்பித்து, அதன் கரையில் கையை உயர்த்திக் காலைத் தூக்கி கடுந்தவம் புரியும் பார்த்தனுக்குப் பாசுபதம் அளிக்கும் பரமனைப் படைத்து விண்ணில் உலவும் தேவர், கந்தர்வர், இயக்கர், கின்னரர், சித்தர், சாரணர் முதலியோர் விண்ணிலே பறந்து வந்து இப்பெரும் காட்சியைப் போற்ற, கானகத்தே வாழும் கானவர்களும், கடிந்து செல்லும் விலங்குகளும், நாட்டகத்தே வாழும் நல்லோரும், களிறும் பிடியும் இவ்வரும் காட்சியிலே தங்களை மறந்து நிற்க, கீழ் உலகிலிருந்து வெளிப்போந்து கைகூப்பித் தொழுகின்ற நாகர்களது உருவையும் தாங்கி நிற்கின்ற இவ்வரும் படைப்பு அனைத்துலகையும் இணைத்து வருவோர் அனைவரையும் கலை இன்பத்தில் ஆழ்த்தும் கல்லிலே தோன்றும் கவிதையாகும். பண்டைய உலகில் விலங்குகளை மிகச் சிறப்பாக உயிர்த்துடிப்பு உள்ளவையாகச் சிற்பங்களிலே வடித்துள்ளதை மாமல்லபுரத்தில்தான் காணலாம். இதைப் போன்ற மற்றொரு பாறைச் சிற்பமும் அரைகுறையாகச் செதுக்கப்பட்டு மாமல்லையில் காணப்படுகிறது.

மேற்குறித்த சிற்பங்கள் பாறையில் இருந்த இடத்திலேயே செதுக்கப்பட்டவை ஆகும். கற்கோயில்களைப் பல்லவர்கள் எடுத்த போதும் சிற்பங்களைத் தனித்தனியாகச் செதுக்கி பொருத்தாமல்

சுவரை முதலில் எழுப்பி அவ்விடத்திலேயே சிற்பங்களைச் செதுக்கியுள்ளது மேற்குறித்த மரபைப் பின்பற்றியே ஆகும். இவ்வாறு சுவரில் இருந்த இடத்திலேயே சிற்பங்களைச் செய்வது, மண்ணீட்டாளரின் கலையைப் பின்பற்றியதாகும். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரையில் செங்கல்லால் சுவர்களை எழுப்பி அதிலேயே சுதையால் உருவங்களைச் செய்வது மரபு என்று கண்டோம். அதே கலையைப் பல்லவர்கள் கல்லிலே மாற்றி அமைத்ததை அவர்களது கட்டடக் கோயில்களில் காணலாம்.

பல்லவர்களது கட்டடக் கோயில்களில் மிகவும் சிறந்த எழில் வாய்ந்த சிற்பங்கள் காஞ்சியில் இராஜசிம்மனால் தோற்றுவிக்கப்பட்ட கைலாயநாதர் கோயிலில் உள்ளன. இங்கு சிவபெருமானின் பல்வேறு தோற்றங்களும், தேவியர்களின் தோற்றங்களும், திருமால், நான்முகன், முருகன், கொற்றவை முதலியவர்களின் தோற்றங்களும் பல்வேறு நிலைகளில் படைக்கப்பட்டுள்ளன. உள்ளே விளங்குகின்ற பெருமானின் பேரருளை நினைந்து நினைந்து கூத்தாடிப் பெருமிதம் கொள்வார்களாகச் சிறுசிறு கணங்கள் விமானத்தின் அடியிலே சித்தரிக்கப்பட்டுள்ளனர். சிவபிரான் புரிந்த ஆடல்களைத் தாங்கி நிற்கும் கயிலயங்கிரியைக் காட்டிலும் சிறந்ததாகத் தோற்றுவிக்கப் பட்டது இக்கோயில் என்று அங்குள்ள கல்வெட்டுக் கூறுகிறது. தென்னிந்தியாவில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இவ்வளவு மகத்தான கோயிலை யாரும் எடுப்பித்ததில்லை. அன்று தமிழகத்தில் இருந்த சிற்பங்கள் அனைத்திலும் மிகப்பெரிய சிற்பங்கள் இக்கோயிலில்தான் தோற்றுவிக்கப்பட்டன.

இதேபோன்று சற்றுக் காலத்தால் பிற்பட்ட காஞ்சி வைகுந்தநாதர் கோயிலிலும் அழகிய சிற்பங்கள் உள்ளன. இங்கு பல்லவர்களது வரலாறு முழுவதும் சிற்பமாகச் செதுக்கப் பட்டுள்ளதைக் காணலாம். இச்சிற்பங்கள் கல்லால் ஆனவை. ஆயினும் சுண்ணாம்புச் சாந்து பூசி அழகிய வண்ணம் பூசப்பட்டு மிளிர்ந்தன. பொதுவாகக் கூறுமிடத்து சிற்ப வல்லமையில் பல்லவருக்கு ஈடாகத் தமிழகத்தில் யாரையும் கூறமுடியாது. பல்லவர்களது கோயில்கள் அழகிய சிற்பங்கள் போலவே காட்சியளிக்கும். எளிமையான அமைப்பும், அணிகலன்கள் அதிகமின்றி இயற்கையழகு மிளிர, ஒப்பற்ற சிற்பங்களைப் பல்லவர் தோற்றுவித்தனர்.

பல்லவர்களது சிற்பங்களைப் போலவே கி.பி. 6, 7, 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட பாண்டிய மன்னர்களும் குகைக் கோயில்களில் சிற்பங்களை அமைத்துள்ளனர். திருமெய்யம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் பாண்டியர்களது சிற்பங்களைக் காணலாம். சற்றேறக்குறைய கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் கழுகுமலையில் ஒற்றைக் கற்கோயில் செதுக்கப் பட்டுள்ளது. இதில் பாண்டியர்களது சிற்பக்கலையின் உன்னத படைப்புக்களைக் காணலாம். பாறைகளில் செதுக்கப்பட்ட சிற்பங்களைத் தவிர தனியாகச் செதுக்கி வைக்கப்பட்ட பாண்டியர் சிற்பம் ஒரு சிலவே கிடைத்துள்ளன.

அதியமான் மன்னர்களால் நாமக்கல் என்ற இடத்தில் தோற்றுவிக்கப்பட்ட இரண்டு குடைவரைக் கோயில்களில் நல்ல அழகிய சிற்பங்கள் இருக்கின்றன.

சுமார் கி.பி. 850-லிருந்து தஞ்சையை ஆண்ட சோழர்கள் எடுத்துள்ள கோயில்களில் அழகிய சிற்பங்கள் உள்ளன. இவற்றில் கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் தோற்றுவிக்கப்பட்டவை பெரும்பாலும் சிவாலயங்களில் இன்றும் எஞ்சியுள்ளன. கருவறையின் கோட்டங்களை அலங்கரிக்கும் இவை தெய்வங்களின் பல்வேறு உருவங்களைச் சித்தரிக்கின்றன. ஒரு சில அரசர், அரசமாதேவியர் முதலியோரின் உருவங்களாகவும் காணப்படுகின்றன. சிறப்பாகக் குடந்தைக் கீழ்க்கோட்டம், ஸ்ரீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயில், பசுபதி கோயில் என்னும் புள்ளமங்கை, திருவாரூர் அறநெறீச்சுரம் முதலிய கோயில்களில் மிகச்சிறந்த சிற்பங்கள் இருக்கின்றன. இவற்றில் குடந்தைக் கீழ்க்கோட்டத்திலும், ஸ்ரீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயிலிலும் உள்ள உருவச் சிலைகள் வியத்தகும் வகையில் ஒப்பரும் படைப்புகளாகும். கொடியிடையார்களாக உயர்ந்து எழில் உருவாக தாம் நிற்குமிடத்திலிருந்து வெளியே வந்து வருவோர்களை வரவேற்பவர்கள் போல் உயிருள்ள மங்கையர்களாக படைக்கப்பட்டுள்ள சில பெண்களின் சிற்பங்கள் உலகக் கலைப் படைப்புகளிலேயே மிகச்சிறந்தவை என்று பல நாட்டோராலும் போற்றப் பட்டவை. முக்கியமாகக் குடந்தைக் கீழ்க்கோட்டத்திலுள்ள மங்கையரின் உருவத்திற்கு ஈடு இணையே கிடையாது. தமிழக சிற்பக் கலை சிறப்பாகச் சோழர்களது கலை மிகவும் உன்னத நிலையை எட்டிப்பிடித்தது என்பதற்கு இச்சிலைகள் எடுத்துக்காட்டுகள்.

இதே காலத்தில் பல கற்கோயில்களின் வாயில்களை அலங்கரிக்கும் துவாரபாலகர்களது சிலைகளும் மிகச் சிறப்பாக செய்து வைக்கப்பட்டுள்ளன. கி.பி. 9, 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர்காலக் கோயில் என்றால் அங்கு துவார பாலகர்களது சிலைகளைக் காணத்தவறக்கூடாது. அவ்வளவு அற்புதப் படைப்புக்கள் அவை.

இக்காலக் கோயில்களில் மற்றுமொரு சிறப்பும் உண்டு. இக்கோயில்களின் அதிட்டான வர்க்கங்களில் சிவபுராணம், இராமகாதை முதலிய புராண இதிகாசக் காட்சிகள் தொடர்ந்து சிறுசிறு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிறப்பாகக் குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் இராமாயணம் முழுவதும் தொடர்ந்து பல சிற்பங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 9,10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில்களில் பல்லவர் காலக் கோயில் போல் அல்லாமல் சிற்பங்கள் தனித்தனி யாகச் செதுக்கப்பட்டுக் கோட்டங்களின் உள்ளே பொருத்தி வைக்கப் பட்டுள்ளன. இங்கு கட்டடமும் சிற்பமும் சமநிலை வகிக்கின்றன. இக்காலக் கோயில்களைக் கண்ணுறும்போது கட்டடமும் தெரிகிறது. அதிலிருந்து தனித்ததொரு அழகுடையதாய்ச் சிற்பங்களும் தெரிகின்றன. பல்லவர் காலத்தில் கட்டடமும் சிற்பம்போல் காட்சியளிக்கிறது என்று முன்னர் கூறினோம்.

தஞ்சையில் மாபெரும் கோயிலைத் தோற்றுவித்த இராஜராஜன் காலத்திலிருந்து ஒரு மாறுதலைக் காண்கிறோம். இராஜராஜன் கருங்கல்லால் வானளாவும் கட்டடத்தை எழுப்பினான். அவனது கவனம் முழுவதும் கட்டடத்தில் தலையாய் நின்றது. அவன் கட்டுவித்த கோபுரங்களையும் விமானங்களையும் ஏராளமான சிற்பங்கள் அலங்கரித்த போதிலும் அவை கட்டடத்திற்கு அங்கமாகக் கட்டடத்தின் பெருமிதத்திலே மறைந்து காணப்படுகின்றன. இதனைப் பின்பற்றி வந்த இராஜேந்திர சோழனும் கட்டடச் சிறப்பிற்கு முதலிடம் அளித்தபோதிலும் கங்கைகொண்டசோழபுரத்திலுள்ள சிற்பங்கள் அழகில் ஒப்பற்றவையாய்க் காணப்படுகின்றன. சிறப்பாகக் கலைமகளின் சிற்பமும், சண்டிக்கு அருள்பாலித்த அண்ணலாக சண்டீச்வர பிரசாத தேவராகத் தோற்றமளிக்கும் சிவபிரானின் சிற்பமும் மிக வனப்புடையவை. தாராசுரத்தில் இரண்டாம்

இராஜராஜன் தோற்றுவித்த இராஜராஜேச்சுரம் கோயிலிலும் தில்லையின் வாயில்களை அலங்கரிக்கும் கோபுரங்களில் வைக்கப்பட்ட சிற்பங்களும் பிற்காலச் சோழர் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும். இருப்பினும் பிற்காலச் சோழர் சிற்பங்கள் கட்டடத்தின் அங்கமாக இடம்பெறுகின்றனவே அன்றி தங்களது தனித்தன்மையை இழந்துவிட்டதைக் காணலாம்.

சோழர் கால இறுதியில் போசள மன்னர்கள் திருச்சிக்கு அருகில் கண்ணனூர் (சமயபுரம்) என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டபோது திருவரங்கப் பெருமானின் கோயிலில் குழலூதும் பிள்ளைக்கு ஒரு கோயில் எடுப்பித்துள்ளார்கள். அங்கு அழகிய ஆயர் மகளிரின் சிற்பங்கள் பல்வேறு நிலைகளில் காணப்படு கின்றன. சிறப்பாக ஒரு ஆயர் மகள், திருவரங்கப் பெருமானின் மீது ஆறாக் காதல் கொண்டவள், தன் நினைவிழந்து உடலிலே உடையேதுமின்றி தன் நிலை அழிந்து அரங்கத்து அம்மானையே நினைந்து நினைந்து நிற்க, எதிரில் வந்த தோழி இவள் நிலையை உணர்த்த, நாணம் மேலிட நிற்கின்றாளாகக் காண்பிக்கப்பட்டுள்ளாள்.

*"என்னையும் நோக்கி எந்தன் அல்குல் நோக்கி*
*ஏந்து இளம் கொங்கையும் நோக்குகின்றார்*
*அன்னைஎன் நோக்கும் என்று அஞ்சுகின்றேன்*
*அச்சோ ஒருவர் அழகியவா"*

என்ற திருமங்கை மன்னனின் பாசுரத்தையும்

*"தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"*

என்ற அப்பர் பிரானின் அடிகளையும் இது நினைவூட்டும்.

கி.பி. 14, 15, 16-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட விஜயநகரப் பேரரசர்கள் பல சிற்பச் செழுமை வாய்ந்த மண்டபங்களைத் தோற்றுவித்துள்ளனர். இம்மண்டபங்களின் தூண்களில் பல சிற்பங்கள் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. சிறப்பாகக் குதிரை மீதும், யாளி மீதும் அமர்ந்து பாய்ந்து வரும் வீரர்களின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. விஜயநகர மன்னர்கள் காலத்தில் அரபு நாட்டிலிருந்து ஏராளமான குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. ஆதலின் இதைப்

பிரதிபலிப்பதாக ஏராளமான குதிரை வீரர்களின் சிற்பங்கள் கல்யாண மண்டபங்களை அலங்கரிக்கின்றன. விஜயநகர மன்னர்கள் தெலுங்கு, கன்னடப் பகுதிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். ஆதலின் அப்பகுதியிலிருந்த சில உருவ அமைப்புகளையும், ஆடை அணிகலன்களையும் இவர்களது சிற்பங்களில் காணலாம். விஜயநகரக் காலத்திற்கு முன்னர் தமிழகச் சிற்பங்களில் மாதர்களின் மார்பகங்கள் திறந்தே காண்பிக்கப்பட்டிருக்கும். புடவையால் மேற்பகுதி மூடப்பட்டு இருக்காது. விஜயநகரர் காலத்திலிருந்துதான் புடவை மாதர்களின் மேல்பகுதியை மறைத்து காண்பிக்கப்படுவது சிற்பங்களில் காணப்படுகிறது.

விஜயநகர மன்னர்களின் தானைத் தலைவர்களாக வந்த நாயக்கர்கள் மதுரை, ஸ்ரீவில்லிப்புத்தூர், கிருஷ்ணாபுரம், திருநெல்வேலி, கும்பகோணம், திருச்சி முதலிய இடங்களிலும் பல சிற்பங்களைத் தோற்றுவித்துள்ளனர். இவர்களது சிற்பங்கள் பெரும்பாலும் தூண்களை அலங்கரிப்பவையாக உள்ளன. 5 அல்லது 6 அடிக்கு மேல் உயர்ந்தவையாக உடலைப் பல்வேறு கோணங்களில் வளைத்து முத்தாலும், மணியாலுமான பல அணிகளை அணிந்தவையாக இவை காட்சியளிக்கின்றன. இவற்றில் குறவன், குறத்தி முதலிய சிற்பங்கள் மிக எழில் வாய்ந்தவை. முதன்முறையாகப் பாண்டிநாட்டுப் பகுதியில் திருவிளையாடற் புராணத்தின் அடிப்படையில் பல சிற்பங்கள் இக்காலத்தில் இருந்துதான் தோற்றுவிக்கப்பட்டன. மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்துச் சிற்பங்கள் உலகப்புகழ் வாய்ந்தவை. நாயக்கர் காலச் சிற்பங்களுக்கு இவை நல்ல எடுத்துக்காட்டுகள்.

இதற்குப் பின்னர் நாட்டுக்கோட்டை நகரத்தார் சிற்பப் பணிபுரிந்துள்ளனர். பொதுவாகக் கூறுமிடத்து பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ள சிற்பங்கள் அழகு குன்றித்தான் விளங்குகின்றன.

◈♦◈

# செப்புத் திருமேனிகள்

தமிழ்நாட்டில் கோயில்களில் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டுள்ள செப்புத் திருமேனிகள் உலக மக்களின் கவனத்தை கவர்ந்துள்ளன. இவை எழில் மிகுந்து கலை நிறைந்து காணப்படுவதால் விலை மதிப்பில்லாச் செல்வங்களாகத் திகழ்கின்றன.

## வரலாறு

செம்பில் சிறந்த உருவங்களைப் படைக்கும் கலை, சங்க காலத்திலிருந்தே சிறந்து வந்திருக்கின்றது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆதிச்சநல்லூர் என்ற இடத்தில் அகழாய்வில் செம்பாலான பல பொருள்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் "அன்னை தெய்வம்" ஒன்றின் உருவம் கிடைத்துள்ளது. அதுதான் இதுகாறும் கிடைத்துள்ளவற்றில் மிகவும் தொன்மையானது. அத்துடன் கோழி, நாய் போன்ற செம்பாலான உருவங்களும் கிடைத்துள்ளன. இவை கிறிஸ்துவிற்கு முன்னர் சுமார் 700 ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

பின்னர் பல்லவர் காலத்திலிருந்து பல செப்புப் படிமங்கள் கிடைத்துள்ளன. சில அறிஞர்கள் பல்லவர் காலத்தில் செப்புப் படிமங்கள் இல்லை எனக் கருதுகின்றனர். ஆனால் இக்கருத்து ஏற்புடையதல்ல. கிடைத்துள்ள பல செப்புப் படிமங்களின் அமைதியைக் கொண்டே அவை பல்லவர் காலத்தவை எனத் திட்டவட்டமாகக் கூறலாம். கோயில்களிலே செம்பாலான தெய்வப் படிமங்களை அலங்கரித்து வீதியில் உலாவாக எடுத்துச் செல்வது தேவாரத் திருப்பதிகங்களில் குறிக்கப்பட்டுள்ளது. ஆதலின் செப்புப் படிமங்கள் வழக்கிலிருந்தன என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

காவிரிப்பூம்பட்டினத்தில் மேலையூர் என்ற பகுதியில் ஓர் அழகிய 'மைத்ரேயர்' உருவம் கண்டெடுக்கப்பட்டது. அது இப்பொழுது சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது. அது செம்பால் செய்யப்பட்டது. மேலே தங்க முலாம் பூசப்பட்டு விளங்குகிறது. சுமார் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. கோவை மாநகருக்கு அருகில் உள்ள சிங்காநல்லூர் என்ற இடத்தில் ஓங்கி உலகளந்த உத்தமன் ஆகிய திரிவிக்கிரமனின் செப்புத்

திருமேனி ஒன்று வழிபாட்டில் உள்ளது. எழில் வாய்ந்த அவ்வுருவம் பல்லவர்களது சிற்ப அமைதியை நினைவூட்டுகிறது. பாண்டிக் கொடுமுடியில் கோயிலில் வழிபாட்டிலுள்ள திருமாலின் சிலை ஒன்றும், கூரம் என்ற இடத்தில் கிடைத்த நடமாடும் பெருமானின் உருவம் ஒன்றும் சற்றேறக்குறைய இக்காலத்தைச் சார்ந்தவை. சென்னை அருங்காட்சியகத்தில் உள்ள அம்மை அப்பனாய் விளங்கும் 'சோமாஸ்கந்தர்' உருவம் ஒன்று ஈடில்லா எழில் வாய்ந்தது. திருவாலங்காடு என்ற இடத்தில் இவ்வுருவம் கிடைத்தது. அப்பன் அமர்ந்திருக்கும் ஏற்றமும், அன்னையின் எழில் உருவாம் அருள் வடிவும் பார்க்கப் பார்க்க பரவசம் ஊட்டுபவை.

## செப்புக் கலையின் பொற்காலம்

சோழப் பெருமன்னர்கள் பெருங்கோயில்கள் பல எடுத்தனர். அவற்றிற்கு ஏராளமான செப்புத் திருமேனிகளைச் செய்தளித்துள்ளனர். ஆதித்த சோழன், பராந்தக சோழன் ஆகிய மன்னர்களின் காலத்தே செய்தளிக்கப்பட்ட செப்புத் திருமேனிகள் அழகானவை. அவர்களால் எடுக்கப்பட்ட கோயில்களில் உள்ள சிற்பங்களை இவை ஒத்து விளங்குகின்றன. பராந்தக சோழனின் மகன் கண்டராதித்த சோழன் சிறந்த சிவபக்தி பூண்டவர். இவரது தேவியார் செம்பியன் மாதேவியார் என்ற புகழ்மிக்க சோழப் பேரரசியாவார். இத்தேவி பல கோயில்களுக்குப் பொன்னாலும், வெள்ளியாலும், செம்பாலும் செப்புத் திருமேனிகள் செய்தளித்துள்ளார். இவர் செய்து வைத்துள்ள பல செப்புத் திருமேனிகளைக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. தமிழகத்தில் உள்ள செப்புத் திருமேனிகளில் மிகவும் எழில் வாய்ந்தவை செம்பியன் மாதேவியால் செய்தளித்தவையாகும் என்று வரலாற்று அறிஞர்கள் கருதுவர். நன்னிலம் வட்டத்தில் கோனேரிராஜபுரம் என்ற இடத்தில் இத்தேவி செய்து வைத்த ஒப்பற்ற செப்புத் திருமேனிகள் இன்றும் உள்ளன. தஞ்சை மாவட்டத்தில் பல கோயில்களில் இத்தேவியார் அளித்த செப்புத் திருமேனிகள் உள்ளன.

### ஆடவல்லான்

தமிழகம் தோற்றுவித்த சிறந்த கலைப் படைப்புகளில் "ஆடவல்ல பெருமானாக - நடராஜ மூர்த்தியாக" உள்ள உருவே உலகோர் அனைவரின் கருத்தையும் கவர்ந்திருக்கிறது. நடராஜ

உருவிலே 'வீசி எடுத்த பாதம்' என்றும், 'குஞ்சித திருவடி' என்றும் 'சதுர நடம்' என்றும் பல்வேறு தாண்டவங்கள் உண்டு. இவை அனைத்திலும் தில்லையில் ஆடுகின்ற 'ஆனந்தத் தாண்டவம்' என்னும் ஆடவல்லான் அமைதியே மிகவும் வனப்புடையது. இவ்வுருவைக் கண்டே உலகம் வியக்கிறது. ஆனந்தத் தாண்டவம் புரியும் ஆடவல்ல பெருமானின் செப்புத்திருமேனி இல்லாத கோயிலே தென்னகத்தில் இல்லை. இவ்வுருவம் பராந்தக சோழனுடைய காலத்திலிருந்துதான் காணப்படுகிறது என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். அப்பர் பெருமான் காலத்திலிருந்தே இவ்வுருவம் சிறந்து விளங்கியது என்று மற்றும் பிறர் குறிப்பர். எப்படியிருப்பினும் தமிழ்நாட்டுக் கோயில்களில் காணப்படும் ஆடவல்ல பெருமானின் அற்புதத் திருமேனிகளை ஆயிரக்கணக்கில் செய்து அகம் மகிழ்ந்தது தமிழகம்.

உத்தமசோழனும், அவரது தேவியாரும் பல செப்பு உருவங்களைச் செய்து கோயில்களுக்கு அளித்திருக்கின்றனர். தமிழகமே வியக்கும் வண்ணம் தஞ்சையில் பெருங்கோயிலைத் தோற்றுவித்த "இராஜராஜப் பெருந்தகை" பல சிறந்த தெய்வ உருவங்களை செம்பில் வடித்து அளித்திருக்கிறான். உருவங்களுடைய அமைதியைத் தெளிவாகக் கல்வெட்டிலும் குறித்து வைத்திருக்கிறான். இவ்வாறு அளிக்கப்பட்ட பல செப்பு உருவங்களைத் தஞ்சைப் பெருங்கோயிற் கல்வெட்டுகள் பல குறிக்கின்றன. உருவங்களின் அமைதியை எவ்வளவு சிறப்பாகக் கல்வெட்டில் குறித்துள்ளனர் என்பதற்குக் கீழ் உள்ள கல்வெட்டு சான்று கூறும்.

## கல்வெட்டு

> "கீழ் கிடந்த முயலகனோடும் கூட பாதாதி கேசாந்தம் முக்காலே அரைக்கால் முழு உசரமும் ஸ்ரீஹஸ்தம் நாலும் ஜடைமேல் கங்கா பட்டாரகியும், ஜடை ஒன்பதும் பூமாலை ஏழும் உடைய கனமாக எழுந்தருளுவித்த ஆடவல்லார் திருமேனி ஒன்று: ரத்தின நியாசம் செய்து இவர் எழுந்தருளி நின்ற மூவிரல் உசரமுடைய பத்மம் ஒன்று: ஐவிரல் உசரத்தில் அரைமுழ நீளத்து பதிற்றுவிரல் அகலமுடைய பீடம்"

இராஜராஜன் காலத்தில் திருவெண்காடு கோயிலில் பல அழகிய செப்பு உருவங்கள் செய்து வைக்கப்பட்டன. அவற்றில் சில இப்போது கிடைத்துள்ளன. 'ஏறு ஊரும் பெருமான்' ஆன விருஷவாகன தேவர்' சிலையும், அவரின் தேவி 'உமா பரமேச்வரி' சிலையும் மிகச்சிறந்த அழகுடையவை. சிறந்த தமிழகக் கலைஞனால் தோற்றுவிக்கப் பட்டவை. இதுதவிர 'மலைமகள் மணவாளன்', 'பிச்சை உகக்கும் பெருமான்', 'கரிய கஞ்சுகன் ஆன வைரவன்', 'சண்டேசன்', 'ஆடவல்லான்', 'வெண்காட்டில் உறையும் பெண் காட்டும் உருவான்' முதலிய உருவங்களும் அங்கு கிடைத்துள்ளன. அவற்றில் பல கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. இவை இராஜராஜன், அவன் மகன் முதல் இராஜேந்திரன் அவன் மகன் முதல் இராஜாதிராஜன் ஆகிய மன்னர்களின் காலத்தில் செய்தளிக்கப்பட்டவை. இராஜேந்திர சோழன் தோற்றுவித்த கங்கைகொண்டசோழபுரத்துப் பெருங்கோயிலில் முருகப்பெருமானுடைய செப்புச் சிலை ஒன்று உள்ளது. அது இராஜேந்திர சோழன் காலத்தில் செய்தளிக்கப்பட்டது. இதுபோன்று பின்னர் வந்த சோழப் பேரரசர்களும் செப்புத் திருமேனிகளைச் செய்துள்ளனர். இதன் பின்னர் ஏராளமான செப்பு உருவங்கள் செய்தளிக்கப்பட்ட போதிலும் அவை அவ்வளவு எழில் வாய்ந்தவை அல்ல.

## இருவகை

செப்புத் திருமேனிகள் இருவகைப்படும். முழுவதும் கனமாகச் செய்யப்பட்ட செப்புத் திருமேனிகள் என்றும் உள்ளே பொள்ளலாகச் செய்யப்பட்ட திருமேனிகள் என்றும் இருவகைப்படும். தமிழகத்தில் செய்யப்பட்ட திருமேனிகள் அனைத்தும் முழுதும் கனமாகச் செய்யப்பட்ட செப்பு உருவங்களாகும். பல வாகனங்கள் கனப்பொள்ளலாகச் செய்யப்பட்டவை.

## தேன்மெழுக்கு முறை

செப்புப் படிமங்களைச் செய்யும் கலை இன்றும் தமிழகத்தில் நிலைத்துள்ளது. எந்த உருவைச் செய்ய வேண்டுமோ அவ்வுரு போல் முதலில் தேன் மெழுகினால் செய்வர். மெழுகினால் ஆன உருவின் மேல் 'புற்றுமண்' பூசி நிழலிலே உலர வைப்பர். இதன் பின்புறத்தே தலையிலும், இடையிலும், அடியிலும் துளைகள் இருக்கும். இது நன்கு உலர்ந்த பின்னர் தீயிலே இடுவர். மண்ணின்

உள்ளே மெழுகிருந்த பகுதி அச்சாக நிற்கும். பெரும்பகுதி செம்பும், மிகச்சிறிய அளவில் பித்தளை, தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகியவற்றையும் கலந்து உருக்கி அச்சின் பின் நடுவிலுள்ள துளையின் வழியாக ஊற்றுவர். தலையிலும் அடியிலும் உள்ள துளையின் வழியாக உலோகக் குழம்பு வெளிப்படும். அப்பொழுது அச்சு முழுவதும் உலோகம் பரவி இருக்கிறது என்று அறிவர். இதைக் குளிர வைப்பர். ஊற்றிய உலோகம் கெட்டியாகும். பின்னர் அச்சை உடைத்து வார்ப்பை வெளியில் எடுப்பர். பின்னர் சிற்றுளி கொண்டு திறனுக்கு ஏற்பச் செதுக்கி எழிலுற அமைப்பர். இம்முறையை 'தேன் மெழுக்கு முறை' என்பர். இவ்வாறு செய்யப்பட்ட உருவம் முழுவதும் கனமாக இருக்கும். ஐந்து உலோகக் கலவை ஆனதால் 'பஞ்சலோகம்' என்பர்.

நடுவில் பொள்ளல் உடையதாகச் செய்யவேண்டின், முதலில் மண்ணைப் பிடித்து, அதன்மேல் மெழுகால் உருவை அமைத்து, அதன்மேல் மண் பூச வேண்டும். இதைத் தீயிலிட்டால் வெளியேயும் உள்ளேயும் மண் உருவு இருக்க, இடையிலுள்ள மெழுகு மட்டும் உருகிவிடும். இவ்வச்சில் உலோகத்தை உருக்கி ஊற்றினால் கனப்பொள்ளலான உருவம் கிடைக்கும்.

தமிழகத்தில் செப்பு உருவங்கள் செய்யும்போது மண்ணாலான அச்சை உடைத்து விடுவதால் மற்றுமொரு உருவம் அதே அச்சிலிருந்து செய்யமுடியாது. அதற்கு மீண்டும் மெழுகினால் உருவம் பிடித்து, மண் இட்டு, அச்சு செய்து பின்னர்தான் மற்றொரு உருவம் பெறமுடியும். இவ்வாறு ஒவ்வொரு உருவத்திற்கும் தனித்தனியாக அச்சு செய்வதால் இது சிறந்த கலையாகப் போற்றப்படுகிறது. தமிழகக் கலைக்கும், இந்தியாவின் வடபாற் கலைக்கும் மற்றுமொரு வேறுபாடும் உண்டு. தமிழகத்தில் மெழுகினால் செய்யப்பட்ட உருவம் எளிமையாகவே அமைக்கப்படும். நுண்ணிய வேலைப்பாடுகள் அந்நிலையிலே இருக்கமாட்டாது. உலோகத்தால் உருவத்தை வார்த்த பிறகு நுண்ணிய வேலைப்பாடுகள், ஸ்தபதியின் ஆற்றலுக்கேற்ப உளி கொண்டு செதுக்கி அமைக்கப்படும். ஆனால் இந்தியாவின் வடபாகத்தில் மெழுகாலான உருவிலேயே நுண்ணிய வேலைப்பாடுகள் அனைத்தும் செய்து முடிக்கப்படும். உருவம் வார்த்த பின்னர் அதிக செதுக்கும் வேலை இருக்காது.

தமிழகத்து நூல்களில் சிறந்த குறிப்பு ஒன்று காணப்படுகிறது. ஓர் ஊரில் தெய்வ உருவை செம்பினால் செய்ய விழையும்போது, மெழுகினால் செய்த உருவை அலங்கரித்து ஊர் முழுவதும் வலமாக எடுத்துச் செல்வர். பின்னரே மண்ணிட்டு அச்சு செய்வர். இவ்வாறு ஊர்வலமாக எடுத்துச் செல்வதால் ஊரார்களின் ஒப்புதலையும், அவர்கள் விரும்பினால் வேண்டிய மாற்றங்களையும் செய்ய வாய்ப்புண்டு. உருவம் முழுவதும் வார்த்து செதுக்கியமைத்து அதன் பின்னர் அவற்றை உரிய பீடங்களிலே அமைக்கும்போது பல இரத்தினக் கற்களைப் பீடத்திலிட்டு பின்னர் தெய்வ உருவை அப்பீடத்தில் பொருத்துவர். இதற்கு 'இரத்தின நியாசம் செய்தல்' என்று பெயர். எவ்வாறு கருவறையில் தெய்வச் சிலைகளை பிரதிஷ்டை செய்கிறோமோ, அதுபோல செப்பு உருவங்களுக்கும் பிரதிஷ்டை செய்வதாய் இச்செயல் அமையும்.

உருவைத் தெய்வமாக மாற்றும் கடைசிச் செயல் கண் திறப்பது ஆகும். கலை நிறைந்த ஸ்தபதி உளியால் கண்ணைச் செதுக்கியவுடன் அச்சிலை தெய்வமாகக் கொள்ளப்படும். கண் திறப்பது சிறந்த விழாவாகக் கொண்டாடப்படும். அப்பொழுது அவ்வழகிய செப்புத் திருமேனியை வடித்த ஸ்தபதிக்கு பட்டாடைகள் அளித்து மலர்மாலைகள் அணிவித்து பொன்னும் பொருளும் கொடுத்து கௌரவிப்பர். கலைக்கு முதலிடமளித்த நாடல்லவா!

இவ்வாறு செய்தளிக்கப்பட்ட செப்புத் திருமேனிகள்தான் தமிழகக் கோயில்களில் ஏராளமாகக் காணப்படுகின்றன.

# தமிழ்நாட்டு ஓவியங்கள்

தமிழர்கள் காதல், வீரம் என்ற இரு செயல்களிலும் சிறந்து விளங்கியதைப் போன்றே கலைப்படைப்புகளிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியம் ஆகிய கவின்மிகு கலைகள் சங்ககாலந்தொட்டு வளர்ந்தோங்கி வந்துள்ளன.

## பல்லவர் கால ஓவியங்கள் (கி.பி. 600-900)

கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டில் மறைந்திருந்த ஓவியக் கலைக்குப் புத்துயிர் கொடுக்கப் பல்லவப் பேரரசு தோன்றிற்று. இதன் இரண்டாவது பேரரசன் முதலாம் மகேந்திரவர்மன் ஆவான். கலையார்வம் மிக்கவன். அழகுக்கலையில் தேர்ச்சிப் பெற்றவன். மகேந்திரவர்மன் காலத்தில் கட்டடக்கலையும், சிற்பக்கலையும், ஓவியக்கலையும் உன்னத நிலையிலிருந்தன.

திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயில், பல்லாவரம் குகைக் கோயில், காஞ்சி ஏகாம்பரேச்சுரர் கோயில் பௌர்ணமி மண்டபம் இன்னபிற இடங்களிலுள்ள கல்வெட்டுகள் மகேந்திரனைச் 'சித்திரகாரப்புலி' எனப் புகழ்கின்றன. இவன் எடுப்பித்த கோயிலும், அக்கோயில் சிற்பமும், சித்திரமும் இம்மன்னன் சித்திரக்கலையில் நன்கு தேர்ச்சிப் பெற்றவன் என்பதைக் காட்டுகின்றன. இதனால் இவன் சித்திரக்கலையில் நன்கு தேர்ச்சிப் பெற்றவன் என்பது தெளிவு. மேலும் 'தக்ஷிண சித்திரம்' என்னும் ஓவிய நூலுக்கு இவ்வரசன் உரை எழுதினான் என மாமண்டூர் குகைக் கோயில் கல்வெட்டுகள் மூலம் அறியக் கிடக்கின்றது.

பல்லவர் கால ஓவியங்கள் பனைமலைக் கோயிலிலும், திருமலைக் கோயிலிலும், மாமல்லபுரத்துக் குடைவரைக் கோயிலிலும், மாமண்டூர்க் கோயிலிலும், காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் எஞ்சியுள்ள சிதைந்த பகுதியின் சின்னங்களைக் காணலாம்.

## பனைமலை

'அத்யந்தகாமன்' என்று புகழ்பெற்ற இராஜசிம்ம பல்லவன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட பனைமலைக் கோயிலிலுள்ள பார்வதியின் ஓவியம் பல்லவர் கலைத் திறனுக்கோர் எடுத்துக்காட்டு. இப்பனைமலைப் பார்வதியின் ஓவியம் காஞ்சி கைலாயநாதர் கோயிலில் உள்ள பார்வதியின் சிற்பத்தை ஒத்துள்ளது நோக்கத்தக்கது. தலையில் மணிமகுடமும், கழுத்தில் மணிமாலையும், காதினில் குழையும் அணிந்துள்ள இப்பெண் தெய்வம் தன் வலக்காலால் நின்று கொண்டிருக்கும் காட்சி கவின்மிகு காட்சியாகும்.

இப்பெண்தெய்வம் தன் இடையில் அணிந்து உள்ள மேலாடை பூவேலைப்பாடு கொண்டது. அவள் தோற்றம், ஆடிய காலும் அதிற் சிலம்போசையும் கேட்டு தன்னை மறந்து லயித்து நிற்கும் கோலமாகும்.

அந்நாதனின் களிநடனத்தைக் கண்டுகளித்துத் தன்னை மறந்த நிலையில் நிற்கும் இப்பெண் தெய்வத்தை அவள்தம் கண்கள் காட்டி நிற்கின்றன. இக்கலைப் படைப்பு கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமராவதி சிற்பங்கள் போலவும், கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அஜந்தா ஓவியங்களைப் போலவும் காட்சியளிக்கிறது. இத்தெய்வத்தின் மகுடத்தின்மேல் அழகுவாய்ந்த குடை ஒன்று தீட்டப்பட்டுள்ளது. இவ்வோவியத்தைத் தீட்டிய ஓவியன், நீலவண்ணத்தில் குடையையும், கருப்புநிற மென்கோட்டால் மகுடத்தையும் இளமஞ்சள் வண்ணத்தால் முகத்தையும், இளஞ்சிவப்பு நிறத்தில் உடலையும், சிவப்பும் மஞ்சளும் கலந்த வண்ணத்தால் மேலாடையையும் சித்தரித்துள்ள பாங்கு வியக்கத்தக்கது.

## காஞ்சி

இராஜசிம்மன் காலத்தைச் சார்ந்த மற்றொரு படைப்பு காஞ்சி கைலாயநாதர் கோயில். இக்கோயில் கூர்முனைச் சிகரமும், தூண்கள் கொண்ட தட்டையான மண்டபமும் கொண்டது. இதைச் சுற்றிலும் தொடராகச் சிறு சிறு ஆலயங்கள் உள்ளன. இக்கோயில் திருச்சுற்றுகளில் உள்ள அறைகள் முழுதும் ஒரு காலத்தில் ஓவியம் தீட்டப்பட்டிருக்க வேண்டும். ஒரு சில அறைகளில் மட்டுமே ஓவியங்களின் பகுதிகள் முன்பு கண்டுபிடிக்கப்பட்டன. இத்திருச்சுற்று களில் அண்மையில் மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையினர்

இரசாயன முறையில் பல பகுதிகளைத் தூய்மை செய்துள்ளனர். இதன் பயனாகப் பல சிற்பங்களின் மேல் எஞ்சியுள்ள ஓவியங்களும், சுவரில் தீட்டப்பட்ட ஓவியங்களும் வெளிக்கொணரப்பட்டுள்ளன. கொற்றவை, இலக்குமி முதலிய எழிலார்ந்த சிற்பங்களின் மேல் தீட்டப்பட்ட வண்ணங்கள் இப்பொழுது தெளிவாகத் தெரிகின்றன. தென்புறத்தும், மேல்புறத்தும் உள்ள சிற்றறைகளின் சுவர்களில் தீட்டப்பட்ட ஓவியங்களும் இவ்வாறு தூய்மை செய்யப்பட்டு உள்ளன. இவற்றில் இருந்து ஓர் அரிய உண்மை வெளியாயிற்று. பல்லவர் காலத்தில் இருந்து இதுவரை நான்கு முறை இக்கோயிலில் ஓவியப்பணி நடந்திருக்கிறது என்றும், முன்னர் இருந்த ஓவியங்களின் மேல் மீண்டும் ஓவியங்கள் பூசியிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது. இவ்வாறு நான்கு அடுக்கு ஓவியங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் மேற்குப்புறத்தே இருக்கும் அறைகளின் அடிப்பகுதியில் பல்லவர் காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்கள் மிகவும் எழில் வாய்ந்தவையாக விளங்குகின்றன.

எழில் வாய்ந்த சோமாஸ்கந்தரின் உருவம் ஒன்று 41-வது அறையில் தீட்டப்பட்டுள்ளது. இது ஓவியனின் கைவினைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. சிவனும் பார்வதியும் அமர்ந்த நிலையில் உள்ளனர். சிவனுக்கும் பார்வதிக்கும் நடுவில் கந்தர் உள்ள காட்சி சித்திரிக்கப்பட்டு உள்ளது. பார்வதிக்கு அருகில் பணிப்பெண் ஒருத்தி அமர்ந்த நிலையில் உள்ளாள். இந்த ஓவியத்தின் எழில் வாய்ந்த மேற்பகுதி சிதைக்கப்பட்டாலும், மற்ற பகுதியில் உள்ள ஓவியங்கள் பல்லவர் காலக் கலைப்படைப்பைப் பாராட்டும் வகையில் அமைந்துள்ளதைக் காணலாம்.

அரை மனித உருவமும், அரைப் பறவை உருவமும் கொண்ட கின்னரர் கின்னரியைக் குறிக்கும் ஓவியம் கந்தர்வக் கலைஞர்களைப் போல் காட்சியளிக்கிறது. மாமல்லையிலும், மாமண்டூரிலும் இன்றும் சில அழிந்த ஓவியத்தின் பகுதியைக் காணலாம்.

## பாண்டியர் கால ஓவியங்கள் (கி.பி. 700-900)

பல்லவ வேந்தர்களைப் போல் முற்காலப் பாண்டியர்களும் ஓவியக் கலையை வளர்த்தனர். அரிகேசரி பராங்குசன், மாறவர்மன், இராஜசிம்மன், நெடுஞ்சடையன் இன்னபிற வேந்தரும் கவின் கலையை வளர்த்தனர். பாண்டியர்களின் கலைப்படைப்புகள் பல்லவர் பாணியை ஒத்துள்ளது மிகவும் நோக்கத்தக்கதாகும்.

## திருமலைப்புரம்

முற்காலப் பாண்டிய ஓவியங்களை திருநெல்வேலி மாவட்டத்து திருமலைப்புரம் குகைக்கோயிலில் காணலாம். இக்கோயில் மகேந்திரன் காலத்துக் கோயில்களான மாமண்டூர், மண்டகப்பட்டு கோயில்களை ஒத்துக் காணப்பட்டாலும், இங்கே பாண்டியரின் தனிப்பாணி தெரியாமலில்லை. இங்கே கண்ணுள் வினைஞரால் தீட்டப்பட்டுள்ள தாமரையும், பறவைகளும், மனித, தெய்வ உருவங்களும் பாண்டியர் காலத்து ஓவியப் புலவரின் கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

## சித்தன்னவாசல்

சித்தன்னவாசல் புதுக்கோட்டைக்கு வடமேற்கே ஒன்பது கல் தொலைவில் உள்ள ஒரு சிறு கிராமம். அங்கு ஒரு பெரும் செங்குத்தான மலையில் குடையப்பட்ட மண்டபம் ஒன்று உண்டு. அது சித்து அண்ணல் வாயில் என்று பெயர் கொண்ட சமண அருகரது கோயில் ஆகும்.

சித்தன்னவாசல் குகைக் கோயிலைத் தோற்றுவித்தவன் மகேந்திரவர்ம பல்லவன் என இதுகாறும் ஆராய்ச்சியாளர் கருதினர். ஆனால் அங்கு இருந்த குகையைத் திருப்பணி செய்வித்து இன்று உலகமே வியக்கும் ஓவியங்களைத் தோற்றுவித்தவர் மதுரையைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் என்று அங்குள்ள கல்வெட்டுகள் நிரூபிக்கின்றன. அவ்வாசிரியரின் பெயர் "மதுரை ஆசிரியர் இளம் கௌதமன்" என்பது. மதுரையைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஆண்ட அவனிபசேகர ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் காலத்தில் இவர் சித்தன்னவாசல் குகையைப் புதுப்பித்தார் என்னும் செய்தி அழகிய தமிழ்ப்பாவில் அங்கு பொறிக்கப்பட்டுள்ளது.

> "*திருத்திய பெரும்புகழ் தேவ தரிசனத்து*
> *அருந்தவ முனிவனைப் பொருட்செல்வன்*
> *அறன்கிளர் நிலைமை இளம் கௌதமன் எனும்*
> *வளங்கெழு திருநகர் மதுரை ஆசிரியர்*
> *அவனிப சேகர சீர்கெழு செங்கோல் சிரீ வல்லபன்*

என்று கல்வெட்டு கூறும்.

இக்குகைக் கோயிலில் உள்ளே ஒரு சதுரமான அறையும், வெளியே ஒரு நீண்ட தாழ்வாரமும் அமைக்கப்பட்டுள்ளன. சுவரின்

மேற்பரப்பு சமமாக பொளியப்பட்டுள்ளது. அதன்மீது சுண்ணாம்புக் கலவை பூசி பின்னும் அதன்மேல் சுண்ணாம்புச் சாந்து தீட்டி அதை வழவழப்பாகத் தேய்த்து அது காய்வதற்குள் சித்திரக் கோடுகளும், வண்ணங்களும் தீட்டப்பட்டுள்ளன. அவற்றில் அழிந்தது போக மற்றப் பகுதிகள் குகையின் நடு மண்டப விதானம், உண்ணாழிகை, தூண்கள் போன்ற பகுதிகளில் மட்டும் காணப்படு கின்றன. இவ்வோவியங்கள் 1919-20-ல் முதல் முதலாக கோபிநாத் ராவ், தூப்ரே இவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அறிஞர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

## தாமரைத் தடாகம்

நடு மண்டபத்தின் மேல்விதானத்தில் காணப்படுவதே சிறந்த ஓவியம். இது அல்லியும், தாமரையும் நிறைந்து வளர்ந்த கண்ணைக் கவரும் தாமரைத் தடாகம். இது ஓவியனின் எண்ணமும் கைப்புனைந்த வண்ணமும் ஒருங்கு இணைந்த படைப்பு. இயற்கையை மிஞ்சும் இத்தடாகத்தில் தாமரை இலைகள் பசுமையாகப் பரந்து விரிந்து காட்சி அளிக்கின்றன. தன்னுடலை மேகலையால் மறைக்கும் பெண்ணைப் போல், தண்ணீரை தன்னுடையால் (இலையால்) மறைக்கும் தாமரை இலைகள் ஒரு புறம் செந்தாமரையும், வெண்தாமரையும் மலர்ந்து விரியும் காட்சி ஒரு புறம் அல்லியும் ஆம்பலும் அலர்ந்து அழகூட்டும் காட்சி ஒரு புறம் அங்கே, அழகான அன்னப்பறவைகள் தடாகத்தில் நடைபயிலும் காட்சி ஒரு புறம் இத்தடாகத்தில் யானைகள் இறங்கி விளையாடுகின்றன. தாமரைத் தண்டுகளை முறித்து ஓடுகின்றன. எருமைகள் மூழ்கிப் புனலாடுகின்றன. விண்ணுலகைக் காண வரும் வெண்மீன்கள் அதை இரை தேடக் காத்திருக்கும் அன்னங்கள் கையிலே தாமரையைத் தாங்கி வரும் கந்தர்வர்கள் இவ்வாறு எங்கும் அழகுக் கோலம் கொண்டு காட்சியளிக்கிறது.

இத்தாமரைத் தடாகத்தின் ஒரு புறத்தில் நீள் செவிகளுடன் கோவணந்தரித்து இரு மனிதர்கள் காணப்படுகின்றனர். இவ்விருவரில் ஒருவர் தன் இடக்கரத்தில் பூக்குடலைத் தாங்கி, வலக்கரத்தில் தாமரை மலர்களைக் கொய்கிறார். இரண்டாமவர் இடக்கரத்தில் தாமரையைத் தாங்கி வலக்கரத்தில் சமண முத்திரையிட்டுக் காட்டுகிறார்.

மூன்றாம் மனிதரும் உளர். இம்மூவரிலும் வனப்பு வாய்ந்தவரும் இவரே. இவர்தம் இடத்தோளில் தாமரை மலர்களைத் தாங்கியும், வலத்தோளில் அல்லி மலரைத் தாங்கியும், அழகாகக் காட்சியளிக்கிறார். இவ்வுருவங்களின் பாணி, எழில் தோற்றம், நிற்கும் நிலை, மேனியின் வடிவம், கண்களின் பார்வை, கரிய கேசம் இவையாவும் தன்னகத்தே கொண்ட இம்மூன்று கந்தர்வர்களும் சமணர்களாகத்தான் இருக்கவேண்டும்.

இத்தாமரைத் தடாகம் அமணர் சுவர்க்கங்களில் ஒன்றாகிய சமவ சரண மண்டபத்திற்குப் போகும் வழியில் உள்ள தாமரைத் தடாகத்தைக் குறிப்பது என்பர். இத்தடாகத்தை நோக்கின் சமண சமய நூல்கள் கூறும் 'காதிகா பூமி' என்னும் அகழியா! அல்லது கந்தர்வலோகத் தடாகமா! என்று வியக்கும் அளவில் அமைந்துள்ளது.

## ஆடல் அணங்குகள்

அடுத்து நம் கண்ணைக் கவரும் ஓவியம் அர்த்தமண்டபத் தூண்களில் நாட்டியமாடும் அரம்பையர்கள், நடமாடும் இவ்விரண்டு ஓவியங்களின் மலர் முகத்தை, கலைநயத்தை நோக்கின் இவர்கள் அரம்பையரா! ஆடலணங்கா விண்மகளிரா! தேவலோகக் கன்னிகளா அல்லது ஓவியச் செந்நூல், உரைநூல் கிடைக்கையும் கற்றுத் துறை போகிய பொற்றொடி நங்கையா! என வியக்கும் அளவில் அமைந்துள்ளது. இவ்வுயிரோவியங்களை உற்று நோக்கும்பொழுது, சீவக சிந்தாமணியில் தோன்றும் தேசிகப் பாவையும், சிலப்பதிகாரத்தில் தோன்றும் மாதவியும் நம் கண்முன்னே தோன்றி களிநடனம் புரிந்து காவியச் சாயல் வீசிச் செல்கின்றனர்.

இவ்வோவியத்தில் அழகிய நாடகக் கணிகை ஒருத்தி நடனம் செய்கிறாள். இவள் தன் இடக்கரத்தை கஜஹஸ்த நிலையில் உடலுக்குக் குறுக்கே தொங்கவிட்டு, தன் வலக்கரத்தை மடக்கி, அக்கரத்தால் அழகு பெற அபய முத்திரை காட்டுகிறாள். தென்றலென நடமாடும் இவள் எழிற் கோலம் தென்புறத் தூணில் காட்சி அளிக்கிறது.

அடுத்து வலப்புறத் தூணில் நடமாடும் மற்றொரு பெண் அணங்கின் ஓவியம் நம் கண்ணைக் கவர்கிறது. இவள் நிருத்தத்தில் இடக்கரத்தை ரேசிதமாக நீட்டி, தன் வலக்கரத்தை மடக்கி, அக்கரத்தால் அபய முத்திரை காட்டி உடலைப் பங்கித்து நிற்கும் காட்சி ஓவியனின் திறனுக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு.

இவ்விரு நடிகையரும் நாட்டியக் கச்சணிந்து பல அணிகலன் பூண்டு காட்சியளிக்கின்றனர். இவர்களின் விரல்களில் மோதிரமும், கரங்களில் காப்பும், வளையலும், முழங்கையின் மேல் கடகமும், கழுத்தினில் மணிகள் பதிந்த முத்தாரமும், காதினில் கல்லிழைக்கப் பெற்ற காதணியும், குழையும், கொண்டையிட்ட கூந்தலில் தாழை மடல்களும், நெற்றியில் சுட்டியும், உடலின்மேல் மெல்லிய மேலாடையும் தரித்துள்ளனர். இந்நடன மாதர்க்கு 'மூக்கணி' இல்லை. இவ்வாறு சிற்பங்களில் காணப்படும் பல்லவ அரசியர்க்கும் 'மூக்கணி' இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. இப்பாணி அமராவதிச் சிற்பங்களை நினைவூட்டுகிறது. இக்காட்சி அரங்கின் மேல் அரம்பையர் போன்று, அழகி கூத்தாடும் காட்சியாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது. இந்நங்கையரின் அழகு, வண்டு விழியானதோ, வான்பிறை நுதலானதோ, கொவ்வை இதழானதோ, வெண்முல்லை பற்களானதோ, கார்மேகம் கூந்தலானதோ, பாம்பு நெளியும் கரங்களானதோ, அன்னம் நடையானதோ என எண்ணும் அளவிற்கு அமைந்துள்ளது.

இவ்வோவியங்கள் பாண்டியர் காலத்துப் பெண்பாவைகள் அணிந்த அணிகலன்களையும், ஆடலணங்குகள் அணிந்து வந்த சிறப்பு அணிகலன்களையும், அவர்தம் கூந்தல் அலங்காரத்தையும், அணி செய்யப்பட்ட மெல்லிய மேலாடையையும், ஒன்பான் சுவையை வெளிப்படுத்தும் மெய்ப்பாட்டையும் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

## அரசன் அரசி ஓவியங்கள்

வலப்புறத் தூணின் உட்பகுதியிற் அரசன் அரசியின் ஓவியங்கள் உள்ளன. இவை மார்பளவு வரை காணப்படுகின்றன. அரசன், தலையில் மணிமகுடமும், காதுகளில் மகரக் குழையும், கழுத்தில் மணிமாலையும் அணிந்துள்ளான். அரசியின் கூந்தலின்மேல் ஒரு வகை மகுடம் அழகு செய்கிறது. அவள் காதுகளில் வளையங்கள் காணப்படுகின்றன. இந்த உருவங்கள் பாண்டிய வேந்தனையும் தேவியையும் குறிப்பனவாக இருக்கலாம். அரசனின் பெருந்தன்மையும், பெருந்தோற்றமும் கொண்ட முகத்தை நோக்கும்போது ஒரு மாபெரும் பேரரசனின் தோற்றத்தைக் காண்கிறோம்.

மேற்குறிப்பிட்டவை தவிர, உட்புறம் எங்கும் பல வண்ணச் சித்திரங்களே இருக்கின்றன. ஓவியக் கலையில் மற்றுமொரு சிறப்பு இங்கே காண்கிறோம். அதாவது நடனக் கலையையும் இவை சித்தரிக்கின்றன. இக்கோயில் சமணக் கோயில் ஆதலின் பல தீர்த்தங்கரர் சிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன. ஆகவே சித்தன்ன வாசல் ஓவியம், சிற்பம், நடனம் என முக்கலைகளையும் சிறப்பிக்கும் கலைக்கூடமாக விளங்குகிறது.

## சேரர் கால ஓவியம் (கி.பி. 800-900)

கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டில் தொண்டைமண்டலத்தில் உருவாக்கப் பட்ட கலைப்பாணி கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டிலும், சேர நாட்டிலும் பரவத் தொடங்கியது. சேர நாட்டில் ‘கவியூர்’, ‘திருவள்ளரா’ இன்னபிற இடங்களில் உள்ள குகைக்கோயில்கள் கட்டடக் கலை அமைப்பில் பல்லாவரம், மகேந்திரவாடி குகைக்கோயிலை ஒத்துள்ளன. அவ்வாறே அங்குள்ள ஓவியமும் பல்லவ, பாண்டிய பாணியை பிரதிபலிக்கின்றன.

### திருநந்திக்கரை

திருநந்திக்கரை குகைக்கோயிலில் உள்ள சேரர் கால ஓவியங்கள் கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இங்குள்ள மாபுருஷரின் ஓவியம் சிறப்பு வாய்ந்தது. தலையில் மணிமுடியும், கழுத்தில் மணிமாலையும் கொண்டு கம்பீரத்தோற்றம் அளிக்கும் இம்மாபுருஷரின் புருவத்தை ஓவியன் ஒரே கோட்டில் வில் போன்று தீட்டியுள்ள பாங்கு வியக்கத்தக்கது. இம்மாபுருஷரின் ஓவியம், காஞ்சி கைலாயநாதர் கோயிலில் தீட்டப்பட்டுள்ள மாபுருஷரின் ஓவியத்தை ஒத்துள்ளது.

## சோழர் கால ஓவியம் (கி.பி. 900-1800)

### தஞ்சை

சோழர் கால வனப்பு மிக்க ஓவியங்களில் இன்று நாம் காணுமாறு இருப்பவை தஞ்சைப் பெருங்கோயில் ஓவியங்களேயாகும். அவை தஞ்சைப் பெரிய கோயிலின் உண்ணாழியின் உட்சுவர்களில் எழுதப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஓவியங்கள் மறைக்கப்பட்டு அவற்றின்மீது நாயக்கர் கால ஓவியம் எழுதப்பட்டன.

மறைக்கப்பட்டிருந்த சோழர் கால ஓவியங்களைப் பேராசிரியர் திரு எஸ். கே. கோவிந்தசாமி அவர்கள் 1930-ஆம் ஆண்டு கண்டுபிடித்து அறிஞர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

## கயிலைக் காட்சி

இங்கு கயிலைக் காட்சியொன்று கவின்கோலம் கொண்டு காட்சியளிக்கிறது. சிவபெருமான் புலித்தோலின் மீது அமர்ந்திருக்கிறார். அவரைச் சுற்றிலும் தேவரும் பூதகணங்களும் புடைசூழ்ந்து காணப்படுகின்றன. இவ்வோவியத்தின் கீழ் சுந்தரர் வெள்ளை யானை மீது ஏறி கைலாயம் செல்கிறார். சேரமான் பெருமாள் புரவியில் ஏறிச் செல்கிறார். யானைக் கடல்நீரைக் கடந்து செல்கிறது. அச்செயலைக் கடல் மீன்கள் பார்த்து நிற்கின்றன. யானையும், புரவியும் விரைந்து செல்கின்றன. கயிலைக்குச் செல்லும் வழியில் விண்ணக மகளிர் தோன்றுகின்றனர். கயிலையை அடைந்த சுந்தரரும், சேரமானும் கை கூப்பித் தொழுகின்றனர். அம்மையை அருகில் கொண்ட அண்ணல் ஆனந்தக் காட்சியளிக்கிறார். இவ்வரலாற்று ஓவியம் சேரநாட்டுத் தலைநகரான கொடுங்களூரை விட்டு, அதன் அரசனான சேரமான் பெருமான், சுந்தரருடன் கயிலை செல்லும் காட்சியைக் காட்டுகிறது என்பர். இவ்வோவியத்தில் சேரமான் முடியழகும் அவர்தம் புரவியின் அணி அழகும் பார்க்கத் தகுந்தவை.

அடுத்து அன்னையும், அண்ணலும், ஆதவனும், திங்களும் பங்கு கொள்ளும் காட்சி அங்கே அரக்கருடன் சமர் தொடுத்த முப்புரம் எரித்த அண்ணல் ஒரு புறம் அண்ணலை எதிர்க்கும் அரக்கர்கள் மறுபுறம் அம்மாற்றத்தால் ஏற்படும் சிவனின் தோற்றத்தில் உள்ள சீற்றத்தை வெளிப்படுத்தும் ஓவியக் காட்சி ஒரு புறம் தீட்டப்பட்டுள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப் பட்ட வரலாறு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் கிழவேதியராகத் திருமண மண்டபத்தில் வந்து நிற்கிறார். அவரது கரங்களில் தாழங்குடையும், பனை ஓலையும் காணப்படுகின்றன. மணமண்டபத்தில் மறையவர் பலர் கூடி நிற்கின்றனர். மணமகனாரான சுந்தரர் தமது மணத்தைத் தடுக்க வந்த கிழவரை வியப்போடு பார்க்கின்ற பார்வை அழகாகத் தீட்டப்பட்டுள்ளது.

## நாட்டிய மகளிர்

இதையடுத்து வனப்பு மிக்கவை சோழர்கால நடன மகளிரைக் குறிக்கும் ஓவியமாகும். பலவகை இன்னிசைக் கருவி கொண்டு தேவகணங்கள் இசை எழுப்புகின்றனர். அவ்விசைக்கேற்ப நாட்டிய மகளிர் தன்னுடலைப் பங்கித்து நடமாடுகின்றனர். குழல் ஊத, யாழ் இசைக்க, முழவதிர, ஆடலணங்குகள் முத்திரை காட்டி, கண் அசைத்து, கழுத்தை வளைத்து, மென்கரம் மடக்கி நடனமாடு கின்றனர். இந்நடனத்தை கலைக்கண் கொண்டு நோக்கின்,

"*தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித்*
*தூங்கக்*
*கைவழி நயனம் செல்லக் கண்வழி*
*மனமும் செல்ல*
*ஐயநுண் இடையார் ஆடும் நாடக*
*அரங்கு கண்டார்*"

என்ற கம்பனின் காவியச் சாயலை நினைவுபடுத்துகின்றது. இந்நடனத்தை ஆடுபவர் இராஜராஜன் வரவழைத்த பதியிலார் நானூற்றுவரைச் சேர்ந்தவரோ; அல்லது உயிர் பெற எழுதப்பெற்ற ஓவியப்பாவையோ என எண்ணத் தோன்றுகிறது. இதில் உடைச் சிறப்பு, முகப்பொலிவு, உருவமைப்பு இசைக்கருவிகள் இவையனைத்தையும் இவ்வோவியத்தில் கண்டுகளிக்கலாம். இந்த உன்னத ஓவியம், ஓவியனின் நாட்டிய இயல் திறமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

அடுத்து நம் கண்ணைக் கவரும் ஓவியம் இன்குரல் யாழ் இடையில் தழுவிய நல்லிசை மகளிரின் தோற்றம், இத்தகைய யாழ் ஏந்தி நடம் பயிலும் நங்கையரின் அழகை நோக்கின், மாமன்னன் இராஜராஜ சோழனின் அரசவைக் குருவான கருவூர்த்தேவர் விரித்துரைக்கும் மகளிரை நினைவுபடுத்துகிறது.

"*காழகில் கமழும் மாளிகை மகளிர்*
*கங்குல் வாயங்குலி கெழும*
*யாழொலி சிலம்பும் இஞ்சி சூழ் தஞ்சை*
*இராச ராசேச்சரத் திவர்க்கே*"

என்றும்,

*"மின்னெடும் புருவத்தின் மயில னையார்*
*விலங்கல்செய் நாடக சாலை*
*இன்நடம் பயிலும் இஞ்சி சூழ்*
*தஞ்சை இராச ராசேச்சரத்திவர்க்கே"*

எனச் சோழர் கால இலக்கியங்கள் சித்திரிக்கும் இலக்கியப் பாங்கினை ஒப்பிட்டு நோக்கின் இவ்வெழிலார்ந்த ஓவியத்தின் கலைத்திறத்தை, கவின் நயத்தைக் கண்டுகளிக்கலாம்.

மற்றும் மாமன்னன் இராஜராஜனும், கருவூர்த்தேவரும் உள்ள ஓவியம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது.

தஞ்சை ஓவியங்கள் அஜந்தா, பாக், ஈழத்து சிகிரியா, தமிழகத்துச் சித்தன்னவாசல் இன்னபிற இடங்களில் அலையலையாகப் பயின்று வந்த கலைப்பாணியின் தொடர்ச்சியைக் காட்டுகிறது எனக் கலை நூலறிஞர் கருதுகின்றனர்.

## விஜயநகரர் கால ஓவியம் (கி.பி. 1400-1700)

தமிழ்நாட்டில் பல இடங்களில் விஜயநகரர் கால ஓவியங்கள் உள்ளன. காஞ்சி, காளத்தி, குடந்தை, திருவரங்கம், திருப்பதி, திருவண்ணாமலை, தில்லை, திருவீழிமிழலை, திருவாருர், ஓமலூர் இன்ன பிற இடங்களில் விஜயநகரர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

### திருவரங்கம்

திருவரங்கம் கோயிலில் வேணுகோபாலர் சந்நதி முகமண்டப மேல் விதானத்தில் ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவ்வோவியங்கள் முற்கால விஜயநகரர் காலத்தவையாகும். இவ்வோவியங்கள் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையால் கண்டுபடிக்கப்பெற்று, அரசு அருங்காட்சியகத்தால் இரசாயன முறையில் தூய்மை செய்யப்பெற்று உள்ளது.

இங்கு குழலூதும் வேணுகோபாலனையும், அண்ணலைச் சூழ்ந்த ஆநிரைகளையும், கோகுலனைச் சூழ்ந்த கோகுலத்து கோபியரின் எழில் கோலமும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

விதானத்தின் நடுவேயுள்ள வேணுகோபாலனின் ஓவியம் எழிலார்ந்த படைப்பாகும். இங்கே ஆயர்குலம் போற்றும் அண்ணல் தன் திருக்கரத்தால் ஏழு விரலிடையிட்ட இன்னிசை வங்கியமெடுத்துத் தாழுமலர் வரிவண்டு தாது பிடிப்பன போலக் கரம் அசைத்து, தூய பெரும் தனித்துளையில் தன் அதரம் வைத்துக் குழல் ஊதும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. இத்துளைக் கருவி குழல் கொண்டு எழுப்பிய அன்புறு கானத்தில், எடுத்த குழற் கருவியில் எம்பிரான் ஏழிசையைத் தொடுத்த முறையில், அவ்விசையைச் சுருதி பெற வாசித்த வகையில், இவ்வின்னிசை கானத்தில் எவ்வுயிரும் என்பொடு கரைந்துருகும் நிலையில், தாய் முலையைப் பற்றும் இளங்கன்றினமும், தானுணவு மறந்தொழிந்த நிலையில், ஆவினமும் ஆடுமயிலும் தனை மறந்த நிலையில், யாளி முதலாம் கான் விலங்கு மயிர் முகிழ்த்து வந்தணையும் காட்சி ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளது. இவற்றை நோக்கின்,

"*சிறுவிரல்கள் தடவி பரிமாறச் செங்கண்கோடச்,*
*செய்யவாய் கொப்பளிப்பக்,*
*குறுவியர்ப் புருவங் கூடலிப்பக் கோவிந்தன்*
*குழல்கொண் டூதினபோது,*
*பறவையின் கணங்கள் கூடுதுறந்து வந்துசூழ்ந்து,*
*படுகாடு கிடப்பக்*
*கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச்*
*செவியாட் டகில்லாதே"*

எனப் பாசுரங்கள் படமாக்கப்பட்டுள்ளனவா என வியக்கத் தோன்றும். இத்தகைய அழியாத காவியத்தை ஓவியமாகத் தீட்டிய கலைஞன் அவ்வோவியத்தை நோக்கும் ஒவ்வொரு ஆத்மாவின் உள்ளத்தையும் அமைதியுறச் செய்கிறான். அடுத்த ஓவியத்தில் கோகுலத்து கோபியர் காபாலனைச் சூழ்ந்து நிற்கும் காட்சியும், அண்ணலின் அரவணைப்பில் உள்ள அணங்குகளின் அழகுக் கோலமும் அழகாகத் தீட்டப்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாகக் கார்முகில் ண்ணனை நோக்கிய கருங்கயற் கன்னியர் தம் கண்ணோடு னமும் கூட்டி, தெள்ளிய முறுவல் காட்டி நிற்கும் காட்சியை தாரணமாகக் கூறலாம்.

ஆய்ச்சியர் குல அணங்குகள் கண்ணனின் குழந்தைப் பருவம் தொட்டே அவனிடம் அன்பு செலுத்தி வந்தனர். கண்ணபிரான் தெய்வப்பிறவியாகத் தோன்றியதால் அவனிடம் புனிதமான ஈர்ப்பு சக்தி உள்ளடங்கியிருந்தது. அம்மகளிர் அணிந்துள்ள ஆபரணங்களை நோக்கின்,

*"சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே*
*பாடகமே யென்றினைய பல்கலனும் யாமணிவோம்"*

என்ற பாவையர்கள் பாடும் பாசுரங்களை நினைவுபடுத்துகின்றன. கோபாலனைச் சூழ்ந்துள்ள கோகுலத்து கோபிகைகள்,

*"சீவிச் சிலர்குழற் பின்னலிட்டுச் சிலர்*
*சிங்காரக் கொண்டைச் செருகுமிட்டுக்*
*காவியக் கண்களில் மையிட்டுப் பொட்டிட்டு"*

அழகான ஆடைகளை அணிந்துள்ளனர். கட்டமிட்ட சேலையும் அதனைக் கட்டியுள்ள முறையும் கார்மேகவண்ணனைக் கவரும் காட்சியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அச்சேலையின் அழகுநோக்கின் ஆவியன்ன அவிர் நூல் கலிங்கமா, அல்லது புகைவிரித்தன்ன பொங்கு துகிலா என இலக்கிய உணர்வுடன் எண்ணவேண்டியுள்ளது. அச்சேலையில் முறையாக அமைக்கப்பட்டுள்ள புள்ளியும் வண்ணமும் மார்கழி மாதத்தில் மங்கையர்கள் பழகும் வண்ணக் கோலத்தையும் மிஞ்சுவனவாக உள்ளன.

இவை அக்கால ஆடைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டு கின்றன. அதுமட்டுமல்லாமல் அக்கால துன்ன வினைஞரின் திறத்தையும் அதைத் தீட்டிக் காட்டிய கண்ணுள்வினைஞரின் சிறப்பையும் நன்கு உணர்த்துகின்றன.

இத்தகைய எண்ணத்தைக் கவரும் எடுப்பான சித்திரங்கள் சிதைந்த நிலையில் இருந்தன. இவை மீண்டும் இருந்த நிலையில் கொண்டுவரப்பட்டு இரசாயன முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளன.

திருவரங்கம் கோயிலில் உள்ள மற்ற விஜயநகரர் ஓவியங்கள் காலத்தால் பிற்பட்டவை ஆகும். ஆலிலையில் அமர்ந்த கண்ணனையும், காளியன் என்ற பாம்பின் மேல் நடமாடும் கண்ணனையும், பெருமாளையும், நாச்சியாரையும் சித்தரிக்கும் ஓவியங்கள் சிறப்புடையனவாகும்.

## திருவீழிமிழலை

தஞ்சை மாவட்டம், திருவீழிமிழலை சிவன்கோயில் மண்டபத்தின் மேல் விதானத்தில் உள்ள ஓவியங்கள் சிறப்புவாய்ந்தவை. இவை கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை யாகும். இங்குள்ள ஓவியங்கள் தமிழ்நாடு தொல்லியல் துறையால் கண்டுபிடிக்கப்பட்டது.

இங்கு குழலூதும் வேணுகோபாலனையும், காளியன் என்னும் நஞ்சுண்ட நாகத்தின் மேல் நடமாடும் நாயகனாகக் காளிய கிருஷ்ணனையும் சித்தரிக்கும் ஓவியம் புகழ் வாய்ந்ததாகும்.

ஒருபுறத்தில் கிருஷ்ணன் தன் இடக்கரத்தால் ஐந்து தலை அரவத்தின் வாலைப் பிடித்து, இடக்காலை அவ்வரவத்தின் மகுடத்தில் ஊன்றி, வலக்காலை மேலே தூக்கி நடமாடும் காட்சி தீட்டப் பட்டுள்ளது. கிருஷ்ணனின் இருபுறத்திலும் ருக்மணியும் சத்யபாமாவும் தத்தம் கரங்களில் தாமரையும் அல்லியும் தாங்கி நிற்கின்றனர். அம்மையர் அருகில் நங்கையர் இருவர் பசுங்கொடியைத் தாங்கி நிற்கின்றனர். இவ்வோவியம்,

*"காளியன் பொய்கை கலங்கப்பாய்ந்திட்டு - அவன்*
*நீள்முடி ஐந்திலும் நின்ற நடஞ்செய்து*
*மீள அவனுக் கருள்செய்த வித்தகன்"*

கோலத்தை நம் மனக்கண் முன் கொண்டு வருகிறது.

அடுத்து வேணுகோபாலனின் ஓவியம். இங்கே மழை முகில் வண்ணன் செங்கமல மலர் சூழ் வண்டினம் போல ஊதுகின்ற குழலோசையைக் கேட்டு, மேய்தல் மறந்து, மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர, அவன் முகம் நோக்கி நிற்கும் ஆநிரைகள் ஒரு புறம் காட்சியளிக்கின்றன. மலர்க்கூந்தல் முடித்த மங்கையர்கள் உடை நெகிழ, ஒரு கரத்தால் துகில் பற்றி, மறுகரத்தால் உடல் மறைத்து, தம்மை மறந்து நிற்கும் காட்சி மறுபுறம் சித்தரிக்கப்பட்டுள்ளது. கார்மேகவண்ணனின் இருபுறமும் கன்னியர்களின் கூட்டம் தீட்டப்பட்டுள்ளது. கண்ணனின் இடப்புறமுள்ள மூன்று கோபியர் களின் எழிற்கோலம், இத்தாலியக் கலைஞன் மைக்லேஞ்சலோவின் படைப்புகளை மிஞ்சுவனவாக உள்ளன.

*"தூய வாயிற் குழலோசை வழியே*
*கோவ லர் சிறுமி யரிளங் கொங்கை*
*குதூக லிப்பஉட லுள விழ்ந்து எங்கும்*
*காவ லுங்கடந் துகயிறு மாலை*
*யாசி வந்து கவிழ்ந்துநின் றனனே"*

என வரும் பெரியாழ்வாரின் பாசுரத்தை நினைவுபடுத்துகிறது. இவ்வோவியங்கள் பிற்காலச் சோழர் சிற்பங்களையும், லேபாக்ஷி ஓவியங்களையும் ஒத்துள்ளன.

## காஞ்சி

காஞ்சி வரதராசப் பெருமாள் கோயில் மேல் திருச்சுற்றில் விஜயநகரர் காலத்து ஓவியங்கள் இருக்கின்றன. இங்கு கண்ணனுடைய திருவிளையாட்டுகள் பல ஓவியங்களாகத் தீட்டப் பட்டுள்ளன. கிளியின் மேல் ரதி தேவி அமர்ந்துள்ள காட்சியும், ரதியும், மன்மதனும் உள்ள காட்சியும் காணத்தக்கவை. இவை அச்சுத தேவராயர் காலத்து ஓவியமாக இருத்தல் கூடும். இங்கு ஆண்டாள் ஊஞ்சல் மண்டபத்தின் மேல் விதானங்களில் காளீயமர்த்தனனின் தோற்றமும் திருமாலும் தேவியரும் உள்ள காட்சியும், விஜயநகர அரசுச் சின்னத்தைப் பிரதிபலிக்கும் ஓவியமும் வித்யாதரர் பல்லக்கில் செல்லும் காட்சியும் தீட்டப்பட்டுள்ளன.

தர்மபுரி மாவட்டம் அதமன் கோட்டையில் உள்ள ஒரு கோயிலில் இராமாயணக் காட்சிகள் முழுமையும் மேல் விதானத்தில் தீட்டப்பட்டுள்ளன. சேலம் மாவட்டம் ஓமலூரில் உள்ள கோயிலில் விஜயநகரர் கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

திருவரங்கம் கோயிலில் உள்ள பல கோபுரங்களில் விஜயநகரர் கால ஓவியங்கள் இன்றும் காணலாம். உத்திரமேரூர் சுந்தரவரதப் பெருமாள் கோயிலில், மேல் இரு கருவறைகளிலும் விஜயநகரர் கால அழகிய ஓவியங்கள் இருக்கின்றன. கல்கி, நாரதர், தும்புரு, ஆயுதபுருடர்கள், பாரதி முதலிய தெய்வ உருவங்களை இவை அழகாகச் சித்தரிக்கின்றன.

## நாயக்கர் கால ஓவியம் (கி.பி. 1700-1800)

விஜயநகர மன்னர்களைப் பின்பற்றி அவர்கள் பிரதிநிதிகளாக வந்த நாயக்கர் பல இடங்களில் ஓவியங்களைத் தீட்டி வைத்துள்ளனர். மதுரை, தில்லை, திருவெள்ளறை, திருக்குற்றாலம், திருவலம்புரி, குடந்தை, திருவரங்கம், செங்கம், பட்டீஸ்வரம் முதலிய இடங்களில் நாயக்கர் கால ஓவியங்கள் உள்ளன. தஞ்சாவூரில் நாயக்கர் காலத்தில் கோயில் சுற்றுப் பிரகாரத்தில் ஓவியம் தீட்டினர். இவை சோழர் கால ஓவியங்கள் மீது வரையப்பட்டன. அந்த நாயக்கர் கால ஓவியங்களை நீக்கிப் பார்க்கும்பொழுது அதனடியில் எழில் வாய்ந்த சோழர் ஓவியங்கள் கிடைத்துள்ளன.

இக்கோயில் திருச்சுற்றில், விஷ்ணு தன் கரங்களில் ஆழியும், சங்கமும் கொண்டு, வலப்பக்கத்தில் அலைமகளும் (ஸ்ரீதேவி) இடப்பக்கத்தில் நிலமகளும் (பூதேவி) கொண்டு நிற்கும் கோலமும், ஐராவதத்தின் மேலமர்ந்த இந்திரனின் தோற்றமும், ஆட்டின் மேலமர்ந்த அக்கினியின் தோற்றமும், மகரத்தின் மேலமர்ந்த வாயுவின் தோற்றமும், விண்ணக மகளிரான அரம்பையும், ஊர்வசியும், மயில் கண்டன்ன மடநடை மகளிரும் இன்னம் பிறவும் தீட்டியுள்ள பாங்கு நாயக்கர் கால ஓவியனின் கலைத் திறமையைக் காட்டுபவையாக உள்ளன. இங்கு விஷ்ணு தாமரைத் தடாகத்தில் மலர் கொய்யும் காட்சி அழகாக எழுதப்பட்டுள்ளது.

மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்தில் ஊஞ்சல் மண்டபத்தின் எதிரில் உள்ள சிறு மண்டபத்தின் மேல் விதானத்தில் அங்கயற்கண்ணி அம்மையை சுந்தரேசப் பெருமான் மணந்து கொள்ளும் காட்சி மிக அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. திருமால் நீர்வார்த்துக் கொடுக்க அண்ணல் அம்மையின் கரத்தைப் பிடிக்கும் காட்சி அமரரும் பிறரும் பார்த்து வியக்கும் காட்சியாக அமைந்துள்ளது. அதன் ஒரு புறத்தில் அரசி "மங்கம்மாள்" இக்காட்சியைப் போற்றி வணங்கி நிற்பதாக ஓர் ஓவியம் காணப்படுகிறது. அவள் அருகில், "மகாராஜராஜ ஸ்ரீமான்ய மகாராஜ ஸ்ரீமங்கம்மாள்" அவர்கள் என தெலுங்கிலும், தமிழிலும் எழுதப் பெற்றிருக்கிறது. மங்கம்மாள் அருகில் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் சிறுவனாக காண்பிக்கப்பட்டுள்ளார். மறுபுறத்தில் தளவாய்

இராமப்ப ஐயனுடைய உருவமும் பெயரும் தீட்டப்பட்டுள்ளன. இதைச் சுற்றிலும் மீனாட்சி அம்மன் எட்டு திசைக்காவலருடன் போரிடுவது ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

இதைத் தவிர இங்குள்ள மற்றோர் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது அங்கயற்கண்ணி அம்மை அரியணையில் வீற்றிருக்கிறார். எதிரில் வழிபாடு செய்யும் அந்தணர் அங்கயற்கண்ணி அம்மையிடமிருந்து செங்கோலை வாங்குகிறார். அவருக்குப்பின் அரசி மங்கம்மாள் கரம் கூப்பி நிற்கிறார். பின்னர் சில பணி மக்கள் நிற்கின்றனர். தேவியின் பின்புறம் பணிப்பெண்கள் சாமரம் வீசி நிற்கின்றனர். இக்காட்சியைச் சித்தரிக்கிறது இவ்வோவியம்.

திருமலை மன்னன் சித்திரைப் பெருவிழாவில் எட்டாம் நாள் கோயிலுக்கு வந்து அங்கயற்கண்ணியை வணங்கிச் செங்கோலை தேவியிடமிருந்து பெற்று ஊர்வலமாக எடுத்துச் சென்று தான் கட்டிய அரண்மனையில் அச்செங்கோலை அரியணையில் அமர்த்தி அன்று ஒருநாள் தான் அதன்கீழ் அமர்ந்து வழிபடுவது வழக்கம். அங்கயற்கண்ணி அம்மையே நாட்டை ஆளுவதாகக் கருத்தில் கொண்டு பண்டு இவ்வழிபாடு நடத்துதல் வழக்கம். அன்று முழுவதும் செங்கோலே அரியணையில் வீற்றிருக்கும். இச்செய்கை ஒரு பண்டைய குறிப்பிலிருந்து தெரியவருகிறது. மேலே குறிப்பிட்டுள்ள ஓவியம் அரசி மங்கம்மாள் காலத்திலும் அது வழக்கில் இருந்தது என்பதைத் தெரிவிக்கிறது.

மதுரையில் சிவபெருமான் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் பொற்றாமரைக் குளத்தின் எதிரிலுள்ள சுவர்களில் ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன. நாயக்கர் கால மக்களுடைய உடை, கூந்தல், ஒப்பனை, அணிவகைகள் முதலியன இவ்வோவியங்களைக் கொண்டு அறியலாம்.

திருக்குற்றாலத்திலுள்ள சித்திர சபையில் உள்ள ஓவியங்கள் நாயக்கர் காலத்தவை. தில்லை சிவகாமி அம்மன் மண்டபத்தின் கூரையில் எழுதப்பட்டுள்ள ஓவியம் 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஓவியமாகக் கருதப்படுகிறது. அவற்றுள் திருமால் மோகினி அவதாரம் எடுத்துத் தாருகவனத்து முனிவரை மயக்கும் காட்சியும், சிவபிரான் பிச்சை புகும் பெருமானாக வருதலையும், அவர்தம் அழகுக்கோலம் கண்டு முனிவர் மனைவியர் உளம் நெகிழ்தலையும் சித்தரிக்கும் ஓவியங்கள் சிறப்பானவை.

## சுவர் ஓவியம் (செய்முறை)

சுவரிலே வண்ணங்களைத் தீட்டுவதற்கு முன் சுண்ணாம்பும் மணலும் சேர்ந்த கலவை கொண்டு சுவர் பூச்சு செய்யப்படுகிறது. அதன்மேல் குழைத்த வெண்சாந்தைக் கொண்டு மேல்பூச்சு பூசப்படுகிறது. இவ்வாறு பதப்படுத்தப்பட்ட சுவர்மீது ஓவியங்கள் தீட்டுவர்.

இத்தகைய சுவர் ஓவியங்கள் சங்க காலத்தில் இருந்தன. இதனை "வெள்ளி வெண்சுதை" என்றும் "வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய கண்கவர் ஓவியம்" என்றும் இலக்கியம் கூறும். இந்தக் கலை மரபு தமிழகத்தில் வழிவழியாகப் பின்பற்றப்பட்டுள்ளது.

## பிற்கால ஓவியங்கள்


தமிழகத்தில் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டில் எழுந்த நாயக்கர் கால ஓவியங்கள் விஜயநகரர் கலையின் மறுதோற்றம் எனலாம். கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்திலும் ஓவியக் கலை நன்கு வளர்க்கப் பெற்றது. அக்காலத்தில் ஓலைகளிலும், கண்ணாடிகளிலும், தந்தங்களிலும் ஓவியங்கள் தீட்டப்பெற்றன. வண்ணங்களின் வனப்புக்கேற்ப இரத்தினங்கள் பதிக்கப்பெற்றன. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மேலைநாட்டுத் தொடர்பும் ஏற்பட்டது. மேலைநாட்டு உடைகளும், போர்க்கலன்களும், கோட்டை கொத்தளங்களும், விஞ்ஞான வளர்ச்சியின் வெளியீடுகளும் சிறப்புச் சித்திரங்களாக எழுந்தன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழக ஓவியர்களின் கைவண்ணங்களைக் கோயில் விதானங்களிலும், சுவர்களிலும், மரச்சிற்பங்களிலும் காணலாம். கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தமிழ்நாட்டில் சில கலை வளர்க்கும் சாலைகள் எழுந்தன. அங்கே மாதிரி உருவங்களும், கற்பனைக் கருத்தோவியங்களும், இயற்கைக் காட்சியை எடுத்தியம்பும் சித்திரங்களும் வரையப்பெற்றன. இவ்வாறு தமிழ்நாட்டு ஓவியக் கலையின் தொன்மையையும் வளர்ச்சியையும் நன்கு அறியலாம்.

◈♦◈

# நிழற்படங்கள்



குன்றன்ன கற்கோயில்கள், மாமல்லை, பல்லவர் காலம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



விமானம், கொரங்கநாதர் கோயில், ஸ்ரீநிவாசநல்லூர், சோழர் காலம், கி.பி. 9-ஆம் நூற்றாண்டு




விமானம், கங்கைகொண்ட சோழீச்சரம், கங்கைகொண்டசோழபுரம்,
சோழர் காலம், கி.பி. 11-ஆம் நூற்றாண்டு



இராசராசேச்சுரம், தாராசுரம், இரண்டாம் இராஜராஜன் பணி, கி.பி. 12-ஆம் நூற்றாண்டு



திரிபுவனவீரேச்சுரம் - திரிபுவனம்
மூன்றாம் குலோத்துங்கன் பணி, கி.பி 13-ஆம் நூற்றாண்டு



கோபுரம், மீனாட்சி அம்மன் கோயில், மதுரை, நாயக்கர் காலம், கி.பி. 17-ஆம் நூற்றாண்டு






பூமிதேவியுடன் வராகர், மகிஷாசுரமர்த்தினி, மஹிஷமர்த்தினி குகை, மாமல்லை, பல்லவர் காலம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



கொற்றவை,
கைலாயநாதர் ஆலயம்,
காஞ்சிபுரம், பல்லவர் காலம்,
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



கொடியிடைநங்கை,
கொரங்கநாதர் கோயில்,
ஸ்ரீநிவாசநல்லூர், சோழர் காலம்,
கி.பி. 9-ஆம் நூற்றாண்டு



சமணச் சிற்பங்கள், கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம்
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



மகரதோரணம், கொரங்கநாதர் கோயில், ஸ்ரீநிவாசநல்லூர்,
சோழர் காலம், கி.பி. 9-ஆம் நூற்றாண்டு



கங்காளமூர்த்தி, தாராசுரம்,
சோழர் காலம்,
கி.பி. 12-ஆம் நூற்றாண்டு



விறலி, இராமசாமி கோயில்,
கும்பகோணம்,நாயக்கர் காலம்,
கி.பி. 17-ஆம் நூற்றாண்டு






திரிவிக்கிரமன், அமர்ந்த நிலையில் திருமால், நரசிம்மர் குகை, நாமக்கல்,
அதியர் காலம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு




ஆடவல்லான் - பெருங்கோயில், கங்கைகொண்ட சோழபுரம்,
சோழர் காலம், கி.பி. 11-ஆம் நூற்றாண்டு



போதிசத்துவ மைத்திரேயர்,
காவிரிப்பூம்பட்டினம்,
பல்லவர் காலம்,
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



விஷ்ணு, செப்புத்திருமேனி,
மகுடேச்சுரர் கோயில், கொடுமுடி,
பல்லவர் காலம்,
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு



ஆடவல்லான் செப்புத்திருமேனி,
கூரம், பல்லவர் காலம்,
கி.பி. 9-ஆம் நூற்றாண்டு




முருகன், செப்புத்திருமேனி,
கங்கைகொண்ட சோழபுரம்,
சோழர் காலம்,
கி.பி. 11-ஆம் நூற்றாண்டு



அரசனும், இராஜகுருவும் தோன்றும் அற்புத ஓவியம்,
(இராஜராஜன், கருவூர் தேவர்) தஞ்சைப் பெருங்கோயில்,
சோழர் காலம், கி.பி. 11-ஆம் நூற்றாண்டு



திரிபுராந்தகர்(ஓவியம்), தஞ்சைப்பெருங்கோயில்,
சோழர் காலம், கி.பி. 11-ஆம் நூற்றாண்டு





திருஅரங்கனின் அழகிய தோற்றம், திருக்கொட்டாரம்,
திருவரங்கம், கி.பி. 18-ஆம் நூற்றாண்டு

